# கல்கி




KALKI
-12-1969
0 காசு

# அவர் மனக்கவலையற்றிருக்க வேண்டும்...

மனித உயிர்களைக் காப்பாற்றுவது அவரது சாமர்த்தியத்தையும் ஒரே மனக்குறியுடன் வேலை செய்வதையும் பொறுத்திருக்கிறது. தன் வேலையை தங்கு தடையின்றி செய்ய அவர் மனக்கவலையற்றிருக்கவேண்டும்.

அதனால்தான் அவரைப் போன்ற சிரத்தை காட்ட வேண்டிய தொழில்களில் ஈடுபட்டவர்கள் யூகோபாங்கின் நம்பிக்கையான சேவையை நாடியுள்ளனர். அவருடைய யூகோபாங்கின் கரண்ட் அக்கவுண்ட் அவரது வாடிக்கையான பண விநியோகங்களை பாங்கின் மூலம் கொடுக்க உதவுகிறது. பாங்கிற்கு கொடுக்கும் அவரது நிரந்தரக் கட்டளைகளால் ஒரு செக் எழுதும் நேரத்தையும் கூட செலவிடாது சேமிக்கிறார். மேலும், அவர் செலுத்திய தொகைகளுக்கும் பலவித செலவுகளுக்கு எடுத்த தொகைகளுக்குமான கணக்கை பாங்க் ஒழுங்காகவும், சீராகவும் வைத்துக்கொள்கிறது.



**யுனைடெட் கமர்ஷியல் பாங்க்**

தலைமை காரியாலயம் :
கல்கத்தா

**நீங்கள் சேமிக்கலாம்—
யூகோபாங்க் உங்களுக்கு
உதவி செய்யும்.**

ASP UCO-3/69

# கல்கி


## பொருளடக்கம்

சௌமிய, கார்த்திகை 29 :: 1969, டிசம்பர் 14



அட்டைப்படம் : கே. விசுவநாதன்.

""கல்கி""யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.




தனி நபர் சுதந்திரம் தழைத்து வளரச் சொத்துரிமைப் பாதுகாப்பு அவசியம்.




இந்திய வாக்காளர் நிலை




தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

மலர் 29 ❊ இதழ் 20


# அடிமை நிலைக்கு வழி

**கா**ங்கிரஸ் ஸ்தாபனத்துக்கும் பிரதம மந்திரிக்கும் இடையே நடந்து வரும் போராட்டத்தின் விளைவு: வழக்கம்போல் காங்கிரஸ் ஸ்தாபனத்தின் பலத்தை நம்பியிருப்பதற்குப் பதிலாக, மாநிலங்களின் முதலமைச்சர்களையும், அவர்களது சகாக்களையும் நம்பிக் காலம் தள்ள வேண்டிய நிலைமை பிரதம மந்திரிக்கு ஏற்பட்டிருக்கிறது. தமக்குப் புதிதாகக் கிடைத்த இந்த அதிகாரத்தை முதலமைச்சர்கள் பயன்படுத்திக்கொண்டு, தமது சொந்த அதிகார அந்தஸ்தை சாசுவதமாக்கிக் கொள்ள முற்படுகிறார்கள். பிரதமர்—காங்கிரஸ் போராட்டத்தின் கடுமை சிறிதும் தணியவில்லை. திட்ட வட்டமான கொள்கைகளின் அடிப்படையில் இந்தப் போராட்டம் நடைபெறுமாயின் நன்மை விளையும் என்று நல்லவர்கள் சிலர் எதிர்பார்த்தனர். ஆனால் இப்பொழுது அது நடக்கின்ற விதத்தினால் நன்மைக்குப் பதிலாகப் பலவகைத் தீமைகள் ஏற்பட்டுள்ளன. அரசியல் என்பது கொள்கை அடிப்படையில் இருந்த நிலைமை மாறி, தனிப்பட்டவர்களின் சூழ்ச்சிகளுக்கு நிலைக்களனாகி விட்டது. எந்தக் கொள்கை நல்லது என்று இப்பொழுது கேட்பாரில்லை. வோட்டு பலம் உள்ள கூட்டாளிகளைப் பிடிப்பதில் யார் அதிகக் கெட்டிக்காரர் என்பதுதான் விவகார விஷயமாகியுள்ளது.

மாநில முதலமைச்சர்களுக்குப் பணம் வேண்டும். மத்திய சர்க்காரிடமிருந்து அதை வாங்கி, வோட்டுக்களை ஈர்ப்பதற்கான காரியங்களைச் செய்து, பதவியில் நிலைத்துவிட வேண்டும் என்று அவர்கள் விரும்புகின்றனர். நிலம் உடையவர்களை அச்சுறுத்தி கட்சி நிதிக்கு நன்கொடை வசூலிப்பதற்கு வேண்டிய அதிகாரத்தைப் பெற அவர்கள் ஆவலாக இருக்கிறார்கள். தொழில் வர்த்தகத் துறையினரிடமிருந்து கட்சிக்குப் பணம் வசூலிக்க மத்திய சர்க்கார் பெர்மிட்—லைசென்ஸ் ராஜ்யத்தை நடத்தி வருகிறதல்லவா? அதைப் போல நிலம் உடையவர்களிடமிருந்து பணம் பெறுவதற்கான அதிகாரத்தை நிலச் சீர்திருத்தத்தின் பெயரால் மாநில சர்க்கார்கள் நாடுகின்றன. உழவர்களுக்குச் சொத்துரிமை வழங்குவதாக வாக்களித்தால், சாகுபடியாளரின் வோட்டுக்களைப் பெற முடியும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். உத்தேசிக்கப்படும் நிலச் சீர்திருத்தங்களின் நோக்கம் வோட்டு வேட்டையே அன்றி, ஏழை மக்களின் உண்மையான க்ஷேமம் அல்ல. நிலச் சீர்திருத்தம் என்பது தீர யோசித்துக் கொள்கை வகுக்க வேண்டிய விஷயம். அதிகம் விளைவிக்க வேண்டுமானால் முதலீடு தேவை. முதலீடு கிடைப்பதற்கான வாய்ப்பு கிட்டாதபடி செய்தால் ஒருகாலும் நன்மை ஏற்படாது. தேசமெங்கும் சாகுபடிக்குத் தேவைப்படும் ஏராளமான மூலதனத்தைக் கொடுத்து உதவ மத்ய — மாநில சர்க்கார்களால் இயலாது. நீர்ப்பாசன வசதிகளையும் மற்ற அடிப்படைத் தேவைகளையும் அவர்களால் அளிக்க முடியுமேயொழிய ஒவ்வொரு சிறிய விவசாயிக்கும் மூலதனம் கொடுக்க முடியாது.

''பசுமைப் புரட்சி'' என்ற பகட்டான பெயரைக் கொடுத்து வாய்ப்பந்தல் போடுகிறார்கள். இது வெறும் மாயப் பேச்சு. ஒரு வருஷம் நல்ல மழை பெய்து நல்ல விளைச்சல் கண்டால் அப்போதைக்குத் தெம்பாக இருக்குமே தவிர அது ஒரு 'புரட்சி'யாகி விடாது. திருத்தமான கருவிகளையும் நவீன சாகுபடி முறைகளையும் கையாள்வதன் மூலம்தான் விவசாய வளர்ச்சியை விரைவு படுத்த முடியும். ஆனால் இடதுசாரிகள் கோருகிறபடி, உழவனுக்கு' நிலம் என்ற பெயரில் பெரிய பண்ணைகளை நடத்தும் வசதி படைத்தவர்களைப் பறிமுதல் சட்டத்தின் மூலம் விலக்கி விட்டால் நில உடைமைகள் மிகச் சிறியவையாகி விடும். இவற்றையும் திருத்தமான முறையில் பயிரிடுவதற்கு மூலதனம் கிடைக்காது போய்விடும். பெரிய நிலஉடைமைகளைத் துண்டு துண்டாக்கி விட்டால்,

# ஸ்ரீமதி பத்மஜா நாயுடுவின் வாழ்த்துரை

இந்தியாவின் நீண்ட காலச் சுதந்திரப் போராட்டத்தின் போது ஒரு மறுமலர்ச்சி கிளர்ந்தது. அந்த மறுமலர்ச்சியில் தோன்றிய மகோந்நத புருஷர்கள் பலர். என் அன்னை (ஸ்ரீமதி சரோஜினி தேவி) மூலம் எனக்குக் கிட்டிய விலைமதிக்க வொண்ணாத செல்வங்களில் ஒன்று. இந்த மகோந்நத புருஷர்களுடன் எனக்கு ஏற்பட்ட நட்பேயாகும். அறிவிலும், அறவுணர்விலும் வெகு உயரிய தரத்தைச் சேர்ந்த இவர்களைப் போன்ற பலரை ஒரே தலைமுறையில் இனி எந்நாளும் இந்தியாவில் காண முடியாது எனலாம். மகாத்மா தலைமை ஏற்பதற்கு வழி வகுத்தவர்கள் இந்த மகாபுருஷர்களே. இவர்கள் இந்தியாவின் பல பாகங்களில், பல துறைகளில் உத்தமமான தார்மிக அடிப்படைகளை நிலைநாட்டினர். இச்சூழ்நிலையில் மகாத்மா தலைமை ஏற்றபின் இவர்கள் அவருக்குப் பக்தி ஆவேசத்துடன் தொண்டு புரிந்தனர். துரதிருஷ்டவசமாக, அவர்களில் பெரும்பாலோர் நம்மைப் பிரிந்து சென்று விட்டனர். ஆயினும், நம்முடைய நல்லதிருஷ்ட வசமாக, அவர்களில் ஒருவரை, காந்திஜியுடன் மிக நெருக்கமாயிருந்த ராஜாஜியை இன்னும் நம்மிடையே பெற்றிருக்கிறோம். தமது புத்தியின் பிரகாசத்தாலும், மனிதர்களையும் விவகாரங்களையும் புரிந்துகொள்வதில் தமக்குள்ள சூட்சும உணர்வாலும் ராஜாஜி எந்தத் துறையில் பிரவேசித்தாலும், அதில் அதிமுக்கியமான ஸ்தானம் பெற்று விளங்குகிறார். தமது இக்குண விசேஷங்களை 92வது வயதிலும் அவர் நலியாமல் காத்து வருகிறார்.

நான், அவருக்குள் மறைவாகப் புதைந்து மிளிர்கின்ற மென்மையான அன்பை ஓரளவு பெற்ற பாக்கியசாலி. ராஜாஜியின் 92வது பிறந்த தினத்தைக் கொண்டாடுபவர்களுடன் நான் சேர்ந்து கொள்கிறேன். அவர் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து அவருக்கே உரித்தான முறையில் பாரதத்துக்குப் பணி புரிவார் என நம்புகிறேன்.



அதன் பிறகு இச்சிறு நில உடைமைகளை நவீன சாகுபடிகளின் தேவைகளுக்கு ஏற்ப இணைத்து நவீன உபகரணங்கள் கொண்ட பெரிய பண்ணைகளை உண்டாக்குவது அசாத்தியமாகிவிடும். பெரிய பண்ணையைச் சின்னாபின்னமாக்குவது சுலபம். ஆனால் இத்தாறு உழவர்களது சிறு நில உடைமைகளைப் பெரிய கூட்டுறவுப் பண்ணையாக இணைப்பது சிரமம். சிறு உடைமையாளரின் மனநிலையை அறியாதவர்கள் கூட்டுறவுப் பண்ணைகளைப் பற்றிப் பேசுகிறார்கள். அவற்றை உருவாக்கி நடத்தி வைக்க வேண்டுமானால் சோஷலிஸ்ட் சர்வாதிகாரமே அதற்குத் தேவைப்படும்.

செய்ய வேண்டியது என்ன? உழவர்கள் ஒழுங்காகச் சேமித்து மூலதனம் சட்டுவதற்குப் பாங்குகள் வசதி செய்து தரவேண்டும். போதிய பணம் சேர்ந்தவுடன் அவர்கள் கடன் வாங்காமல் கண்ட்ரோல் விலையில் தாம் சாகுபடி செய்யும் நிலங்களை விலைக்கு வாங்கிக் கொள்வதற்கு அவர்களுக்கு வசதி செய்து தரவேண்டும். பெரிய நிலச்சுவான்களின் உபரி நிலங்களை உழுது பயிரிடுவோர் உரிமையுடன் பெற்று வாழ்வதற்கு இதுதான் அநுபவசாத்தியமான வழி.

கட்சி, பிரதி கட்சி அடிப்படையில் மக்களை உணர்ச்சி வசப்படுத்தும் வகையில் பேசுவதை விட இந்த ரீதியில் சிந்திப்பதால் நன்மை உண்டு. 'சொத்துரிமைக்கு உறுதி கூறும் அரசியல் சாஸன ஷரத்தை ரத்து செய்துவிட்டால் அபிவிருத்தி ஏற்படும், சோஷலிஸம் கைகூடும்' என்று ஒரு கரடியைக் கிளப்பி விட்டிருக்கிறார்கள். சொத்துரிமையின் அடிப்படையில்தான் பிரஜையின் சுதந்திரம் நிலைத்து நிற்கிறது: ஆகையால்தான் இதற்கு வரம்பு விதிக்காமல் அரசியல் சாஸனத்தில் உத்தரவாதமளித்திருக்கிறார்கள். இந்த உத்தரவாதமே நாகரிகத்தின் அடிப்படை.

வரலாற்றுக்கு முந்திய காலங்களில் மக்கள் சிறுசிறு சமுதாயங்களாக வாழ்ந்தனர். எல்லோருக்குமாக உழைத்தனர். எல்லாமே சமுதாய உடைமையாக இருந்தது. ஆனால் சமுதாயம் பின்னர் விரிவு கண்டபோது

கடுமையான உழைப்பைப் பொறுத்தே சமூக க்ஷேமம் அமையும் என்ற நிலைமை ஏற்பட்டது. தனி நபர் உழைப்பதற்கு ஊக்கம் அளிப்பது வரவர அதிக முக்கியத்துவம் பெற்றது. தனி நபரின் சொத்துரிமை வாழ்க்கைக்கு அடிப்படையானது என்ற உண்மை அங்கீகாரம் பெற்றது. பழங்கால கம்யூனிஸம் படிப்படியாக வளர்ச்சி கண்டு நாகரிகமாக மாறியது. சொத்துரிமையை எடுத்துவிட வேண்டும் என்ற இப்போதைய கோரிக்கை நாகரிக நிலையிலிருந்து பழைய நாகரிகமறியா நிலைக்குத் திரும்புவதாகும். நவீன கம்யூனிஸம் என்று நாம் கூறிப் பழைய நிலைக்குத் திரும்பினால், அதிகாரத்தில் இருப்பவர்கள் பிச்சையாகவும் லஞ்சமாகவும் தரக்கூடியதை மட்டுமே ஒவ்வொருவரும் நம்பி வாழ வேண்டியிருக்கும். அடிமை வாழ்க்கையில் இவ்வாறு ஆழ்ந்து விடுவதே ஒரு பண்பாடாகவும் வாழ்க்கை வழியாகவும் நிலைத்து விடும்.

சொத்துரிமையை நீக்கி விடுவதன் பொருளையும் விளைவையும் பற்றிய உணர்வு, மதிநுட்பம் படைத்தவர்கள் இடையே இல்லாமலிருப்பது ஆச்சரியமாயிருக்கிறது. சொத்துரிமை எடுபட்டுப் போனால் நாகரிகம் சமாப்தியாகி விடும். மக்கள் அடிமைகளாக வாழ வேண்டியதுதான். ஒரு சர்வாதிகாரியின் கீழ் அந்த அடிமை வாழ்வு நடக்கலாம். அல்லது தன் ஆதிக்கத்தை நிரந்தரமாக்கிக் கொள்கின்ற ஒரு மெஜாரிட்டிக் கூட்டத்தின் கொடுமையின் கீழ் அடிமைகளாக வாழ வேண்டி நேரிடலாம்.

(''ஸ்வராஜ்யா''வில் ராஜாஜி எழுதியது)

# என்ன சேதி?

## மகத்தான வெற்றி!

கிரிக்கெட்டில் வெற்றி பெறுவது என்பது குறிப்பிட்ட ஒரு கோஷ்டியின் வெற்றியேயாகும். ஒவ்வொரு நபரும் முழுமூச்சுடன் ஒத்துழைத்தாலன்றி வெற்றி சாத்தியமில்லை. எனினும், புது தில்லி டெஸ்டில் ஆஸ்திரேலிய ஆட்டக்காரர்களை அபாரமான பந்து வீச்சினால் துரிதமாக வீழ்த்தி வெற்றிக்கு வழி வகுத்த பேடியும் பிரஸன்னாவும் காப்டன் பட்டாடியும் விசேஷப் பாராட்டுதல்களுக்கு உரியவர்களே. இவர்களையும் புது தில்லி டெஸ்டில் பங்கெடுத்துக் கொண்ட இந்திய ஆட்டக்காரர்கள் அனைவரையும் வாழ்த்துகிறோம்.

ஆட்டத்தில் வெற்றி தோல்விகளைச் சமமாகப் பாவிக்க வேண்டும் என்ற பொன்மொழியைத் தோல்வியுறும் போது கடைப்பிடிப்பது எளிது. ஆனால் வெற்றி பெறும் போதும் அதே மனப் பக்குவத்துடன் இருப்பது சிரமம்தான்! புது தில்லி கிரிக்கெட் டெஸ்டில் இந்தியா பெற்ற மகத்தான வெற்றி நாடெங்கிலும் ரசிகர்களிடையே மகிழ்ச்சியையும் பெருமிதத்தையும் ஏற்படுத்தி இருக்கிறது. நியாயமான இந்தப் பெருமித உணர்ச்சியின் விளைவாக ஆஸ்திரேலிய ஆட்டக்காரர்களின் திறமையைக் குறைத்து மதிப்பிடும் தவறைச் செய்யாதிருப்போமாக.

நாட்டின் தலைநகரிலிருந்து தமிழகத்தின் தலைநகருக்கு சீக்கிரமே வரவிருக்கும் ஆஸ்திரேலிய கிரிக்கெட் கோஷ்டியினருக்குப் பண்பும் அன்பும் கலந்த சிறந்த வரவேற்பை அளிப்போம்.

## வங்க அமளி

இந்திய யூனியனை விட்டு மேற்கு வங்காளம் வெளியேறி விட்டது போல் தோன்றுகிறது. மேற்கு வங்கம் தனியானதொரு சுதந்திர நாடு போல, தன் விவகாரங்களை நிர்வகித்து, 'உள்நாட்டுப் போரை' நடத்தி வருவதாகக் காண்கிறது. இந்த விவகாரத்தில் தங்களுக்குச் சம்பந்தமே இல்லாதது போல் இந்திரா சர்க்காரும் ஸ்ரீ சவானும் விலகி நிற்கின்றனர்.

நக்ஸல்பாரி கம்யூனிஸ்ட் நடவடிக்கை பற்றிப் போதிய ஆதாரமில்லாததால் அவர்களைத் தடைசெய்ய முடியாமல் இருந்து வருகிறது என்று ஸ்ரீ சவான் தமது அமைச்சரகப் பார்லிமெண்ட் கமிட்டியில் கூறினாராம். மனமிருந்தால் வழி காண்பதில் சிரமமிராது. ஆனால் ஒன்றும் செய்யாமல் சும்மா இருக்கும் ஒரு மனப்பான்மை உள்துறை அமைச்சரிடம் நிலைத்துவிட்டது. எங்கே என்ன நடைபெற்றாலும் ஸ்ரீ சவான் துணிவான நடவடிக்கை எடுக்காமல், இறைவனிடம் தமக்குப் பொறுமையையே பிரார்த்திப்பதாகத் தெரிகிறது. அவரது வேண்டுகோளின்படியே ஆண்டவனும் அவருக்கு அசாத்தியமான பொறுமையை அருளியுள்ளார் போலும்!

## அரசாங்கத்தின் தொழிலாதிக்கம்

வர்த்தக - தொழில் துறை ஸ்தாபனங்கள் மீது புதிய, கடுமையான வரிகள் விதிக்கப்பட வேண்டுமென்று பிரதம மந்திரி தம் போக்கில் கூறியதன் விளைவாக பங்கு மார்க்கெட்டில் விலைகள் சரிந்து விட்டன. இவற்றின் மீதான வரிகள் உயர்ந்தால் மக்கள் அன்றாடம் வாங்கி உபயோகிக்கும் சரக்குகள் கிராக்கியாகிவிடும். தொழிற்சாலைகளில் உபயோகமாகும் பொருட்களின் அடக்க விலையும் கூடுதலாகும்.

சரியாக இயங்காத சர்க்கார் துறைத் தொழில்களுக்கு வேண்டிய மூலதனத்தைப் பெறுவதற்காகத் தனியாருக்கு அதிக வரி விதிக்க எண்ணுகிறார்கள். அரசாங்க முதலாளித்துவ நிலையை நெருங்கி விட்டோம். தொழில்களை நடத்துவோர் தமக்குக் கிடைக்கும் லாபங்களை அந்தந்தத் தொழில்களின் சீர்மைக்கும் அபிவிருத்திக்கும் பயன்படுத்துகிறார்கள். ஆனால் சர்க்கார் விதிக்கும் வரி உயர்வானது அப் பணத்தை வீணடிக்கும் சர்க்கார் தொழிலுக்கே திருப்பி விடுகிறது.

# பொன்னியின் செல்வன்



அமரர் கல்கி

## பன்னிரண்டாம் அத்தியாயம்

## "தீயிலே தள்ளு!"

**கொ**ல்லன் சிறிது நேரம் தன் வேலையிலேயே கவனமா யிருந்தான். வந்தியத்தேவன் இரண்டு மூன்று தடவை கனைத்த பிறகு நிமிர்ந்து பார்த்தான்.

"யார், அப்பனே, நீ! உனக்கு என்ன வேண்டும்? வாள், வேல் ஏதாவது வேண்டுமா? வாளுக்கும் வேலுக்குந் தான் இப்போதெல்லாம் தேவையில்லாமல் போய் விட்டதே? நீ வாளுக்கு எங்கே வந்திருக்கப் போகிறாய்?" என்றான் கொல்லன்.

"என்ன ஐயா, இவ்வாறு சொல்கிறீர்? உம்முடைய கையில் வாளை வைத்து வேலை செய்து கொண்டே வாளுக்குத் தேவையில்லை என்கிறீரே?" என்றான் வந்தியத்தேவன்.

"இது ஏதோ அபூர்வமாக வந்த வேலை; பழைய வாளைச் செப்பனிடுவதற்காகக் கொண்டு வந்தார்கள். சில வருஷங்களுக்கு முன்னால் பாண்டிய நாட்டுப் போரும் வடபெண்ணைப் போரும் நடந்து கொண்டிருந்தபோது இந்தப் பட்டறையில் மலைமலையாக வேலும் வாளும் குவிந்திருக்கும். இலங்கை யுத்தம் ஆரம்பமான புதிதில் கூட ஆயுதங்களுக்குக் கிராக்கியிருந்தது. இப்போது வாளையும் வேலையும் கேட்பாரில்லை. பழைய வாள்களையும் வேல்களையும் என்னிடம் கொண்டு வந்து விற்பதற்காக வருகிறார்கள். நீகூட அதற்காகத்தான் ஒருவேளை வந்தாயா, என்ன?"

"இல்லை; இல்லை! இன்னும் சில காலத்துக்கு எனக்கு வாள் தேவையாயிருக்கிறது. ஒப்புக் கொண்ட வேலையை முடித்து விட்டால், அப்புறம் கையில் தாளத்தை எடுத்துக் கொண்டு தேவாரம் பாடிக் கொண்டு சிவ ஸ்தல யாத்திரை புறப்படுவேன். அப்போது வேணுமானால் என் ஆயுதங்களை உம்மிடமே கொண்டு வந்து கொடுத்து விடுகிறேன்."

"பின்னே, இப்போது எதற்காக என்னைத் தேடி வந்தாய்?"

"என்னுடைய குதிரையைக் காட்டிலும் மேட்டிலும் விட்டுக் கொண்டு வந்தேன். இன்னும் வெகுதூரம் போயாக வேண்டும். குதிரைகளின் கால் குளம்புக்கு இரும்புக் கவசம் போடுவதாமே? அது உம்மால் முடியுமா?"

"ஆம்; அரேபியா தேசத்தில் அப்படித்தான் வழக்கம். இங்கேயுஞ் சிலர் இப்போது குதிரைக் குளம்புக்கு இரும்பு லாடம் அடிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். எனக்கும் கொஞ்சம் அந்த வேலையில் பழக்கம் உண்டு."

"என் குதிரைக்கு லாடம் போட்டுத் தருவீரா?"

"அதற்கு நேரம் அதிகம் பிடிக்கும். கையில் உள்ள வேலையை முடித்து விட்டுத்தான் உன் வேலையை எடுத்துக் கொள்ள முடியும்."

**வ**ந்தியத்தேவன் யோசித்தான். அவனுக்கும் களைப்பாயிருந்தது. குதிரையும்

கஷ்டப்பட்டுப் போயிருந்தது. சிறிது நேரம் காத்திருந்து அதன் குளம்புகளுக்குக் கவசம் போட்டுக் கொண்டே போவது என்று முடிவு செய்தான்.

''கை வேலை முடியும் வரையில் காத்திருக்கிறேன். அப்புறமாவது உடனேசெய்து தருவீர் அல்லவா ?''

'' அதற்கென்ன, ஆகட்டும் !''

வந்தியத்தேவன் சற்று நேரம் கொல்லன் காய்ச்சிச் செப்பனிட்ட வாளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''இந்த வாள் அபூர்வமான வேலைப்பாடு அமைந்ததாயிருக்கிறதே? இராஜகுலத்து வாள் மாதிரி அல்லவா இருக்கிறது? இது யாருடைய வாள்?'' என்றான்.

''அப்பனே! இங்கிருந்து கொஞ்ச தூரத்தில் அரிச்சந்திர நதி என்று ஓர் ஆறு ஓடுகிறது.''

''நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். அதனால் என்ன ?''

''நான் அரிச்சந்திர நதிக்குச் சென்று அடிக்கடி தலைமுழுகி வருவது வழக்கம்.''

''மிக்க நல்ல காரியம். போகும் இடத்துக்குப் புண்ணியம்.''

''ஆகையால் கூடியவரையில் மெய்யே சொல்லுவதென்றும் பொய் சொல்லுவதில்லை என்றும் வைத்துக் கொண்டிருக்கிறேன்.''

''அதற்கு என்ன ஆட்சேபம்? உம்மை யார் பொய் சொல்லச் சொன்னது ? நான் சொல்ல வில்லையே ?''


''நீ என்னை இந்த வாளைப் பற்றி ஒன்றும் கேள்வி கேட்காமலிருந்தால் நானும் பொய் சொல்லாம லிருக்கலாம்!''

ஓஹோ ! அப்படியா சமாசாரம்? — என்று வந்தியத்தேவன் மனத்துக்குள் எண்ணிக் கொண்டான்.

''நான் கேள்வியும் கேட்கவில்லை. நீர் விரத பங்கமும் செய்ய வேண்டாம். கை வேலையைச் சீக்கிரம் முடித்து விட்டு என் வேலையையெடுத்துக்கொண்டு செய்து கொடுத்தால் போதும் !''

கொல்லன் மௌனமாகத் தன் வேலையில் கவனம் செலுத்தினான்.

வந்தியத்தேவன் வாளைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.



அதன் அடிப் பகுதியில், பிடியின் பக்கத்தில், மீன் உருவம் பொறிக்கப் பட்டிருப்பதைப் பார்த்து வியந்தான். மீன் உருவம் எதற்காக? அதற்கு ஏதேனும் பொருள் உண்டா? வெறும் அலங்காரத்துக்குத்தானு?

கொல்லன் அந்த மீன் உருவம் உள்ள இடத்தை மறுபடியும் தீயில் காட்டிக் காய்ச்சி அதன் பேரில் சுத்தியால் அடித்தான். மீன் உருவம் தெரியாமல் மறைப்பதுதான் அவனுடைய நோக்கம் என்று தோன்றியது.

எதற்காக இந்தக் காரியம் என்று வல்லவரையன் யோசனை செய்தான். யோசனை செய்து கொண்டிருந்தபோதே, அவன் கண்கள் சுழலத் தொடங்கின. பல நாளாக அவனுல் விரட்டியடிக்கப்பட்டு வந்த நித்திரா தேவி இப்போது தன் மோக மாய வலையை அவன் பேரில் பலமாக வீச ஆரம்பித்தாள். வந்தியத்தேவன் அதிலிருந்து தப்ப முடியவில்லை. சிறிது நேரம் உட்கார்ந்தபடியே ஆடி விழுந்தான். பிறகு அப்படியே, கொல்லன் உலைக்குப் பக்கத்தில், படுத்துத் தூங்கிப் போனுன்.



**தூ**க்கத்தில் வல்லவரையன் பல பயங்கரக் கனவுகள் கண்டான். கத்தியைப் பற்றியே ஒரு கனவு. ஒருவன் வந்து கொல்லனிடம் கத்தியைத் திரும்பக் கேட்டான். கொல்லன் கொடுத்தான். ''என்ன கூலி வேண்டும்?'' என்று அவன் கேட்டான். ''கூலி ஒன்றும் வேண்டாம். பழுவூர் இளைய ராணிக்கு நான் அளிக்கும் காணிக்கையாயிருக்கட்டும்'' என்ருன் கொல்லன்.

''ஜாக்கிரதை! இந்த விஷயம் யாருக்கும் தெரியக் கூடாது. முக்கியமாக, பழுவூர் இளைய ராணியின் பெயரைச் சொல்லவே சொல்லாதே! சொன்னுல் என்ன செய்வோம் தெரியுமா?...''

''நான் எதற்காக ஐயா, பழுவூர் ராணியின் பெயரைச் சொல்லப் போகிறேன்? ஒருவரிடமும் சொல்ல மாட்டேன்.''

''இதோ இங்கே யாரோ ஒரு வாலிபன் படுத்திருக்கிருனே! சத்தம் போட்டுப் பேசுகிருயே ?''

''அவன் ஆழ்ந்த நித்திரையில் இருக்கிருன். இடி இடித்தாலும் அவனுக்குக் காது கேட்காது.''

''ஒருவேளை அவனுக்குத் தெரிந்துவிட்டது என்று தோன்றினுல், இந்த உலைக் களத்தின் நெருப்பில் அவனைத் தூக்கிப் போட்டு வேலை தீர்த்து விடு!''

இந்தச் சம்பாஷணையின் முடிவில் கொல்லனும் கத்திக்கு உடையவனும் வந்தியத்தேவனை இழுத்துப் போய் உலைக்களத்தில் போடப் போவதாக வந்தியத்தேவன் கனவு கண்டான். பிறகு அந்தக் கனவு மாறியது.

**வ**ந்தியத்தேவனை யம தூதர்கள் நரகத்துக்கு அழைத்துச் சென்ருர்கள். யமதர்ம ராஜன் பூலோகத்தில் வந்தியத்தேவனுடைய நடவடிக்கைகளை விசாரித்தான். ''பொய் சொல்வதில் இவன் நிபுணன்; எத்தனை பொய்தான் சொல்லியிருக்கிருன் என்பதற்கு அளவே கிடையாது'' என்ருன் சித்திர குப்தன், கையிலிருந்த ஓலையைப் பார்த்து விட்டு.

''இல்லை, இல்லை ! எல்லாம் சக்கரவர்த்தி குடும்பத்தாரின் சேவையிலே தான் சொன்னேன். எடுத்த காரியத்தைச் செய்து முடிப்பதற்காகச் சில பொய்களைச் சொன்னேன்.''

''எதற்காகச் சொல்லியிருந்தாலும் பொய் பொய்தான். தள்ளுங்கள் இவனை நரகத்தின் பெரிய நெருப்புக் குழியில்!'' என்றான் யமன். உடனே நரகத்தின் உட்புறத்திலிருந்து நூறாயிரம் குரல்கள் பயங்கரமாக ஊளையிட்டன.

யம தூதர்கள் அவனை அழைத்துப் போனார்கள். பயங்கரமாகக் கொழுந்து விட்டெரிந்த பெரு நெருப்பில் அவனைத் தள்ளுவதற்கு ஆயத்தம் செய்தார்கள். அந்த யம தூதர்கள் இருவரையும் பார்த்தால், முகங்கள் பழுவேட்டரையர்களின் முகங்களைப்போல் இருந்தன. அதைப் பற்றி அவன் திடுக்கிட்டு நிற்கையில் குந்தவை தேவி அங்கே வந்தாள். ''என்னுடைய கட்டளையை நிறைவேற்றுவதற்காக அவர் பொய் சொன்னார். ஆகையால் அவருக்குப் பதிலாக என்னை நெருப்பிலே போடுங்கள்!'' என்று கூறினாள்.

இந்தச் சமயத்தில் நந்தினி தேவியும் அங்கே எப்படியோ வந்து சேர்ந்தாள். ''இரண்டு பேரையும் சேர்த்து நெருப்பிலே போட்டு விடுங்கள்!'' என்றாள் அந்தப் புண்ணியவதி. யம தூதர்கள் அவர்கள் இருவரையும் பிடித்து நெருப்பில் தள்ளப் போனார்கள். ''ஐயோ! வேண்டாம்!'' என்று வந்தியத்தேவன் அலறிக் கொண்டு திமிறினான்; கண் விழித்து எழுந்து உட்கார்ந்தான். கண்டது கனவு என்ற எண்ணம் ஆறுதல் கொடுத்தது. ஆனால் எல்லாம் உண்மையாக நடந்தது போலவே தோன்றியபடியால் அவன் உடம்பு இன்னும் நடுங்கிக் கொண்டிருந்தது.

சேச்சே! இனிமேல் எக்காரணத்துக்காகவும் பொய் சொல்லக் கூடாது என்று தீர்மானித்துக் கொண்டான்.

''ரொம்ப நேரம் தூங்கிப் போய் விட்டேனா?'' என்று கொல்லனைப் பார்த்துக் கேட்டான்.

''அப்படி ரொம்ப நேரம் ஆகிவிடவில்லை. இரண்டு ஜாமந்தான். அப்பனே! நீ கும்பகர்ணன் வம்சத்தில் வந்தவனோ? பட்டப் பகலில் இப்படித் தூங்குகிறாயே? இரவிலே எப்படித் தூங்க மாட்டாய்?'' என்றான் கொல்லன்.

''கடவுளே! இரண்டு ஜாம நேரமா தூங்கி விட்டேன்? குதிரைக் குளம்புக்குக் கவசம் செய்தாகி விட்டதா?''

''இனிமேல்தான் செய்ய வேண்டும். ஆனால் உன்னைப் போன்ற தூங்குமூஞ்சிக்கு அதனால் என்ன பயன்? நீ குதிரையையே பறிகொடுத்துவிடுவாய்! இன்னும், உன்னையேகூடப் பறி கொடுத்து விடுவாய்!''

வந்தியத்தேவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவன் மனதில் ஒரு சந்தேகம் உதித்தது. எழுந்து ஓடிப் போய் வாசற்பக்கம் பார்த்தான். குதிரையை நிறுத்திய இடத்தில் அதைக் காணோம்.

''ஐயோ! குதிரை எங்கே?'' என்று இரைச்சல் போட்டுக் கொண்டே உடைவாளின் பிடியில் கைவைத்தான்.

''பயப்படாதே! உன் குதிரை பத்திரமாக இருக்கிறது. கொல்லைப்புறத்தில் போய்ப் பார்!''

வந்தியத்தேவன் கொல்லைப் புறம் சென்று பார்த்தான். அங்கே மூன்று பக்கம் அடைக்கப்பட்ட கீற்றுக் கொட்டகையில் அவனுடைய குதிரை நின்று கொண்டிருந்தது. கொல்லன் உலைக் களம் ஊதிய சிறுபிள்ளை அதன் வாயில் புல் கொடுத்துக் கொண்டிருந்தான். வந்தியத்தேவனைப் பார்த்ததும் குதிரை உடலைச் சிலிர்த்துக்கொண்டு கனைத்தது.

''ஐயா! இங்கே வந்து கொஞ்சம் உங்கள் குதிரையைப் பார்த்துக்கொள்ளுங்கள். இதன் குளம்புகளுக்கு அளவு எடுக்க வேண்டும்!'' என்றான் பையன்.

வந்தியத் தேவன் குதிரை அருகில் சென்று அதைத் தடவிக் கொடுத்துக் கொண்டு நின்றான்.

பையன் குதிரையின் குளம்புக்கு அளவு எடுத்தான்.

''இதை யார் இங்கே கொண்டுவந்து கட்டினார்கள்?'' என்று வந்தியத்தேவன் கேட்டான்.

''நான்தான் கட்டினேன்.''

''எதற்காக?''

''அப்பா கட்டச் சொன்னார்!''

''அது எதற்காக?''

''இந்த ஊர் வழியாகச் சற்று முன்னால் பெரிய பழுவேட்டரையரும் அவர் பரிவாரங்களும் போனார்கள். குதிரையை வாசலில் பார்த்திருந்தால் கட்டாயம் கொண்டு போயிருப்பார்கள். வந்தியத்தேவனுக்குப் பழைய ஞாபகம்-திருநாராயணபுரத்து ஞாபகம்-வந்தது. தான் செய்த தவறை எண்ணி வெட்கம் அடைந்தான். கொல்லனிடமும் அவன் மகனிடமும் மனத்திற்குள் நன்றி உணர்ச்சி கொண்டான்.

குதிரையின் குளம்புக்கு அளவு எடுத்துக்கொண்டதும் இருவரும் உலைக் களத்துக்குள் வந்தார்கள்.

கொல்லன் இரும்புத் துண்டை எடுத்துக் குளம்பைப் போல் வளைத்து வேலை செய்யத் தொடங்கினான்.

''என் குதிரையைக் காப்பாற்றிக் கொடுத்தீரே? அதற்காக மிக்க வந்தனம்'' என்றான் வல்லவரையன்.

''என்னைத் தேடிவருகிறவர்களுடைய உடைமையை நான் காப்பாற்றிக் கொடுக்க வேண்டுமல்லவா? அது என் கடமை.''

''பழுவேட்டரையர் பரிவாரம் இந்தப் பக்கம் போய் எத்தனை நேரம் இருக்கும்?''

''இரண்டு நாழிகைக்கு மேலேயிருக்கும். அவ்வளவு ஆர்ப்பாட்டத்துக்கும் நீ தூங்கிக் கொண்டிருந்தாயே, அதை நினைத்தால்தான் எனக்கு வியப்பாக இருக்கிறது.''

''நான்தான் தூங்கிப் போய்விட்டேன். இத்தனை நேரம் நீர் விளக்கி விட்டீரே? அவர்கள் போன பிற்பாடாவது வேலையை உடனே ஆரம்பித்திருக்கலாமே?''

''எப்படி ஆரம்பிப்பது? அவர்கள் கொண்டு வந்த செய்தியைக் கேட்ட பிறகு யாருக்கு வேலை செய்ய மனம் வரும்? உனக்காக மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு இதை நான் செய்கிறேன். எங்கிருந்து அப்பனே நீ வருகிறாய்?''

அவர்கள் கொண்டு வந்த செய்தி என்னவாயிருக்கும் என்று யோசித்துக்கொண்டே வந்தியத்தேவன் ''இலங்கையிலிருந்து வருகிறேன்'' என்றான்.

**கொ**ல்லன் அவனுடைய முகத்தை ஏற இறங்கப் பார்த்தான். பிறகு குரலைத் தாழ்த்திக் கொண்டு, ''இலங்கையில் இருந்தபோது இளவரசர் அருள்மொழி வர்மரைப் பார்த்தாயா?'' என்றான்.

உண்மையே சொல்லுவதென்று சற்று முன்பு சங்கல்பம் செய்துகொண்டிருந்த வந்தியத்தேவன், ''பார்த்தேன்'' என்றான்.

''கடைசியாக அவரை நீ எப்போது பார்த்தாய்?''

''இன்று காலையில் பார்த்தேன்.''

கொல்லன் வந்தியத்தேவனைக் கோபமாய் நோக்கினான்.

''விளையாடுகிறாயா, தம்பி!''

''இல்லை, ஐயா. உண்மையைத்தான் சொன்னேன்.''


''இளவரசர் இப்போது எங்கே இருக்கிறார் என்றுகூடச் சொல்வாய்போல் இருக்கிறதே!''

''ஓ! கேட்டால் சொல்லுவேன்!''

''இளவரசர் எங்கே இருக்கிறார்? சொல், பார்க்கலாம்.''

''நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்தில் இருக்கிறார்.''

''அப்பனே! நானும் எத்தனையோ பொய்யர்களைப் பார்த்திருக்கிறேன். உன்னைப்போல் கட்டுக்கதை புனைந்



## கிளைகளைக் கழிக்க......

மலைப் பிரதேசங்களில் உயரமாக வளரும் மரங்களின் கிளைகளைக் கழிக்க ஒரு தானியங்கி இயந்திரம் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. மேற்கு ஜெர்மனியிலே. மரத்தின் அடிவாரத்தில் இதைப் பொருத்தி விட்டு, இத்தனை உயரம் வரை உள்ள கிளைகளைக் கழிக்க வேண்டும் என்று நிர்மாணித்து, அதன்படி விசைகளை இயக்கி விட்டால் போதும், இது தானாகவே குறிப்பிட்ட உயரம் வரை மரத்தில் ஏறுகிறது; கிளைகளைக் கழித்துக் கொண்டே போகிறது; காரியம் முடிந்ததும் திரும்பவும் தரைக்கு இறங்கி விடுகிறது! இந்த நூதன இயந்திரத்தின் பெயர்: மரக் குரங்கு! - ஜெர்மன் இன்டர்நேஷனல்

துரைக்கக் கூடியவர்களைப் பார்த்ததேயில்லை.''

வந்தியத்தேவன் தன் மனத்துக்குள் சிரித்துக் கொண்டான். புனைந்து கூறும் பொய்யை நம்புவதற்கு எல்லாரும் ஆயத்தமாயிருக்கிறார்கள். உண்மையைச் சொன்னால் நம்ப மறுக்கிறார்கள். இது நமது ஜாதக விசேஷம் போலும்!

''தம்பி! நீ இலங்கையிலிருந்து எப்போது புறப்பட்டாய்?''

''நாலு நாளைக்கு முன்னால்!''

''அதனாலேதான் உனக்குச் செய்தி தெரியவில்லை.''

''என்ன செய்தி ஐயா?''

''பொன்னியின் செல்வரைக் கடல் கொண்டுவிட்டது என்ற செய்திதான்!''

வந்தியத் தேவன் கஷ்டப்பட்டுத் திடுக்கிடுவது போல் பாசாங்கு செய்தான்.

''ஐயோ! அப்படியா? யார் சொன்னார்கள்?''

''நேற்று முதல் இங்கெல்லாம் அப்படிப் பேச்சாயிருந்தது. இன்றைக்குப்

பழுவேட்டரையர் இவ் வழியாகப் போனபோது ஊர்த் தலைவர்கள் அவரைக் கேட்டார்கள். அந்தச் செய்தி உண்மைதான் என்று பழுவேட்டரையர் கூறினார். அந்தச் சண்டாளப் பாவியின் தலையில் இடி விழவில்லையே!''

''ஏன் அந்தக் கிழவரை வைகிறாய்?''

''அவராலேதான் இது நடந்திருக்கிறது. ஏதோ சூழ்ச்சி செய்து இளவரசரை அவரே கடலில் மூழ்க அடித்துவிட்டார் என்று ஊரார்சொல்லுகிறார்கள். அதனால் அவருக்காக ஏற்பாடு செய்திருந்த உபசாரங்களையும் நிறுத்தி விட்டார்கள்.''

''இளவரசர் மீது இந்த ஊராருக்கு அவ்வளவு பிரியமா?''

''கேட்க வேண்டுமா? ஊர் மக்கள் அவ்வளவு பேரும் இப்போது கண்ணீரும் கம்பலையுமா யிருக்கிறார்கள். இந்த ஊரார் மட்டுமென்ன? சோழ நாடு முழுவதும் ஒலமிட்டு அழப்போகிறது. பழுவேட்டரையர்களைச் சபிக்கப் போகிறது. ஏற்கனவே சக்கரவர்த்தி நோய்வாய்ப்பட்டிருக்கிறார். இந்தச் செய்தி கேட்டு என்னபாடு படுவாரோ தெரியாது. இன்னும் என்னவெல்லாம் விபரீதங்கள் நடக்குமோ? சில நாளாக வானத்தில் தூமகேது தோன்றி வருகிறதே? அதற்கு ஏதேனும் நடந்துதானே தீரவேண்டும்?''

நடக்கக் கூடிய விபரீதங்கள் என்னவாயிருக்கக் கூடும் என்று வந்தியத்தேவன் எண்ணிப் பார்த்தான். தான் கூறியதை இந்தக் கொல்லன் நம்பாமலிருந்ததே நல்லதாய்ப்போயிற்று. தான் இனிமேல் பொய் சொல்லாவிட்டாலும் இளவரசரைப் பற்றிய உண்மையைச் சொல்ல வேண்டிய அவசியமும் இல்லை. இளைய பிராட்டி ஏதோ முக்கிய காரணத்திற்காகத்தானே அவரைச் சூடாமணி விஹாரத்தில் இருக்கச் சொல்லியிருக்கிறார்! இளவரசியைக் கண்டு பேசிய பிறகு, அவர் சொல்லும் யோசனைப்படி நடந்து கொள்ள வேண்டும்.

''தம்பி! என்ன யோசிக்கிறாய்?'' என்றான் கொல்லன்.

''நடுக்கடலில் சுழற்காற்றில் நானும் அகப்பட்டுக் கொண்டேன். கடவுள் அருளால் நான் தப்பிப் பிழைத்ததை நினைத்துப் பார்த்துக் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன்.''

''கடவுள் அருள் என்பது ஒன்று இருக்கிறதா, என்ன?''

''பெரியவரே! அது என்ன அப்படிச் சொல்லுகிறீர்?''

''கடவுள் அருள் என்பதாக ஒன்று இருந்தால் பழுவேட்டரையர்களின் அக்கிரமங்கள் இன்னும் நடந்து கொண்டிருக்குமா? பொன்னியின் செல்வர் கடலில் மூழ்கியிருப்பாரா?''

''பெரியவரே! பழுவேட்டரையர்கள் அதிகாரத்தில் உள்ளவர்கள். அவர்களைப் பற்றி இப்படியெல்லாம் பேசலாமா? யார் காதிலாவது விழுந்தால்? கொஞ்சம் ஜாக்கிரதையா யிருங்கள்.''

''என்னைவிட நீதான் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். நானாவது விழித்துக் கொண்டிருக்கும்போது பேசுகிறேன். நீ தூக்கத்திலே உளறுகிறாய்!''

''ஐயையோ! என்ன உளறினேன்?''

''பழுவேட்டரையர்களை யமதூதர்கள் என்று சொன்னாய். பழுவூர் இளைய ராணியைப் பெண் பேய் என்று சொன்னாய். நீ சொன்னது என்னமோ உண்மைதான். ஆனால் என்னைத் தவிர வேறு யார் காதிலாவது விழுந்தால் உன் கதி என்ன? நீ அப்படிப் பிதற்றிக் கொண்டிருக்கிற சமயத்திலேதான் இந்தச் சாலை வழியாகப் பழுவேட்டரையர்களின் பரிவாரங்கள் போயின. எனக்கு ரொம்பத் திகிலாய்ப் போய்விட்டது.''

''நீர் என்ன செய்தீர்?''

''வாசற் பக்கம் போய் நின்று இந்த உலைக் களத்தின் கதவையும் சாத்திக் கொண்டேன். அதற்கு முன்னால் உன் குதிரையைக் கொல்லைப்புறம் கொண்டு போய்க் கட்டியாயிற்று.''

''தூக்கத்தில் நான் இன்னும் ஏதாவது உளறினேனா?''

''உளறலுக்குக் குறைவேயில்லை.''

''ஐயோ! என்ன உளறினேன்?''

''நீ இளவரசரைப் பழையாறைக்கு வரும்படி வற்புறுத்தினாய். அவர் பழுவேட்டரையர் கட்டளைப்படி சிறைப்படுவேன் என்றார். இன்னும் என்னவெல்லாமோ சொன்னாய், தம்பி! பழையாறை இளையபிராட்டியைக் குறித்துக் கூட ஏதேதோ சொன்னாய். ஜாக்கிரதை அப்பனே, ஜாக்கிரதை!''

வந்தியத்தேவன் வெட்கித் தலை குனிந்தான். இளைய பிராட்டியைக் குறித்து அனுசிதமாக ஏதாவது பேசிவிட்டோமோ என்று பீதி அடைந்தான். இனிமேல் தூங்குவதாயிருந்தால் தனி அறையில் கதவைத் தாளிட்டுக் கொண்டு தூங்க வேண்டும். அல்லது மனித சஞ்சாரம் இல்லாத காட்டிலோ பாலைவனத்திலோ, மலைக் குகையிலோ தூங்க வேண்டும்.

''தம்பி! சுழற் காற்றில் நீ எப்படி அகப்பட்டுக் கொண்டாய்? எப்படித் தப்பிப் பிழைத்தாய்?''

''நான் ஏறி வந்த கப்பலில் இடி விழுந்து கடலில் மூழ்கி விட்டது.




Shilpi BOB 15A/69 TAM.

முறிந்த பாய்மரத்தைப் பிடித்துக் கொண்டு வெகுநேரம் மிதந்தேன். பிறகு ஓடக்காரப் பெண் ஒருத்தியின் உதவியால் தப்பிக் கரையேறினேன்.''

''இளவரசரும் ஒருவேளை அவ்விதம் தப்பிப் பிழைத்திருக்கலாம் அல்லவா?''

''கடவுள் சித்தமிருந்தால் தப்பிப் பிழைத்திருக்கலாம்.''

''நேற்றிரவு நீ எங்கே தங்கினாய்?''

''கோடிக்கரையிலேதான். கடற்கரையோரத்தில் பழுவேட்டரையர் பரிவாரங்கள் ஒரே கூட்டமாக இருந்தது. ஆகையால் குழகர் கோயிலில் சிறிது நேரம் படுத்துத் தூங்கினேன். பொழுது விடிவதற்குள் புறப்பட்டு விட்டேன்.''

''அதனால்தான் உனக்கு இளவரசர் செய்தி தெரியவில்லை போலிருக்கிறது.''

''நீர் தெரியப்படுத்தியதற்காக வந்தனம். ஐயா! நான் பழையாறைக்குக் கூடிய சீக்கிரம் போக வேண்டும். பழுவேட்டரையரின் பரிவாரத்திடம் சிக்காமல் போக வேண்டும். எந்த வழியாகப் போவது நல்லது?''

'' பழுவேட்டரையர் தஞ்சாவூர் இராஜ பாட்டையில் போகிறார். நீ முல்லையாற்றங் கரையோடு போனால் பழையாறையை அடையலாம்.''

''நீங்கள் கொஞ்சம் சீக்கிரமாகவே குதிரைக் குளம்புக்குக் கவசம் அடித்துக் கொடுத்தால் நல்லது.''

''இதோ!'' என்றான் கொல்லன்.

வளைத்துக் காய்ச்சியிருந்த இரும்பைச் சுத்தியினால் அடிக்கத் தொடங்கினான்.


''இது பெரிய பழுவேட்டரையருக்கு! இது சின்னப் பழுவேட்டரையருக்கு! இந்த அடி சம்புவரையருக்கு! இது மழவரையருக்கு!'' என்று சொல்லிக் கொண்டே அடித்தான். இதிலிருந்து அந்தச் சிற்றரசர்கள் பேரில் நாட்டு மக்கள் எவ்வளவு கோபம் கொண்டிருக்கிறார்கள் என்பதை ஒருவாறு வந்தியத்தேவன் தெரிந்து கொண்டான்.

குதிரைக் குளம்புகளுக்கு லாடம் அடித்து முடிந்தது. செய்து கொடுத்த வேலைக்காகக் கொல்லனுக்குக் காசு தர வந்தியத்தேவன் யத்தனித்தான். கொல்லன் அதைப் பெற்றுக் கொள்வதற்கு மறுத்து விட்டான்.

''நீ நல்ல பிள்ளை என்பதற்காகச் செய்து கொடுத்தேன். காசுக்காகச் செய்து தரவில்லை'' என்றான்.

வந்தியத்தேவன் மறுபடியும் கொல்லனுக்கு நன்றி கூறிவிட்டு விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டான்.

புறப்படும் சமயத்தில் கொல்லன், ''தம்பி! பழையாறைக்கு நீ எதற்காகப் போகிறாய்?'' என்று கேட்டான்.



''ஐயா! நீங்கள் என்னை அதைப் பற்றி ஒன்றும் கேட்காமலிருந்தால் நான் பொய் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படாது'' என்றான் வல்லவரையன்.

கொல்லன் சிரித்துவிட்டு ''அப்பனே! நீ துரிதமாகக் கெட்டிக்காரனாகி வருகிறாய்! தூங்குகிறபோதும் இவ்வளவு ஜாக்கிரதையா யிரு!'' என்று சொல்லி விடை கொடுத்து அனுப்பினான்.

* * *

வந்தியத்தேவன் மறுபடியும் பிரயாணம் தொடங்கியபோது சூரியன் அஸ்தமிக்கும் நேரமாகி விட்டது. சிறிது நேரத்துக்கெல்லாம் அந்தி மயங்கி இருள் சூழ்ந்து வந்தது. இதற்குள் முல்லையாற்றங்கரையை வல்லவரையன் பிடித்து விட்டான். அதற்கு மேல் ஆற்றங்கரையோடு போக வேண்டியதுதான். வழி விசாரிக்க வேண்டிய அவசியம் கூடக் கிடையாது.

முன்னிருட்டு வேளைதான். ஆனால் வானத்தில் ஆயிரங்கோடி நட்சத்திரங்கள் ஒளிச் சுடர்களாக விளங்கின. முல்லை நதியின் கரைகளில் மரங்கள் அதிகம் இல்லை. சிறிய சிறிய புதர்கள் தான் இருந்தன. ஆகையால் வழி கண்டு பிடித்துப் போவதற்கு வேண்டிய வெளிச்சம் விண் மீன்கள் தந்தன.

வானத்தில் ஜொலித்த நட்சத்திரங்களோடு போட்டி யிடுவதுபோல் ஆயிரக்கணக்கான மின்மினிப் பூச்சிகள் நதிக் கரைப் புதர்களைச் சுற்றி வட்டமிட்டு விளையாடிக் கொண்டிருந்தன.

வந்தியத் தேவனுடைய உள்ளத்தில் உற்சாகம் ததும்பியது. அதற்குப் பல காரணங்கள் இருந்தன. நாடெல்லாம் இளவரசரைப் பற்றிய கவலையில் ஆழ்ந்திருக்கும்போது அவனுக்கு மட்டும் அவர் பத்திரமாக இருக்கிறார் என்ற செய்தி தெரிந்திருந்தது. இளவரசரிடம் சோழ நாட்டு மக்கள் எவ்வளவு பிரியம் வைத்திருக்கிறார்கள் என்பதை அவன் ஓரளவு தெரிந்து கொள்ள முடிந்தது. மந்திரவாதி ரவிதாஸனை அவன் மறுபடியும் ஏமாற்ற முடிந்ததை நினைக்கக் குதூகலமா யிருந்தது. இதையெல்லாம் விடக் குந்தவை தேவியைச் சீக்கிரத்தில் பார்க்கப் போகிறோம் என்ற எண்ணம் அவனுக்கு எல்லையில்லாத மனக் கிளர்ச்சியை அளித்தது.

வெறுமனேயா பார்க்கப் போகிறான்? இளையபிராட்டி கூறிய காரியத்தைச் செய்து முடித்து விட்டுப் பார்க்கப் போகிறான்! அந்தக் காரியத்துக்கு ஏற்பட்ட தடங்கல்களையெல்லாம் நினைத்து அவற்றை யெல்லாம் தான் எதிர்த்து வெற்றி கொண்டதையும் எண்ணி அவன் பெருமிதம் அடைந்தான். நாளை மாலை இந்த நேரத்துக்குள் இளைய பிராட்டியைச் சந்தித்து விடுவோம் என்பதில் சந்தேகமில்லை. ஆகா! அந்தச் சந்திப்பைக் குறித்து எண்ணும்போது அவனுக்கு மெய்சிலிர்த்தது.

நட்சத்திரச் சுடர்களால் விளங்கிய வானமும் மின்மினிகள் பறந்த பூமியும் சல சலவென்ற சத்தத்துடன் ஓடிய முல்லையாற்று வெள்ளமும் மந்த மந்தமாக வந்த குளிர் பூங்காற்றும் வந்தியத்தேவனைப் பரவசமடையச் செய்தன. வானமும் பூமியும் ஒரே ஆனந்த மயமாக அவனுக்கு அச்சமயம் தோன்றியது. பழைய காதல் பாட்டு ஒன்று அவனுக்கு நினைவு வந்தது. தான் வாய் விட்டு உற்சாகமாகப் பாடுவதற்குத் தகுந்த இடம்தான் இது. சுற்றுப்புறமெங்கும் மனித சஞ்சாரமே கிடையாது. ஏன்? பட்சிகள்கூடக் கூடுகளிலே சென்று அடங்கி விட்டன. அவன் பாடுவதற்குத் தடை என்ன இருக்கிறது? இதோ அவன் பாடிய பாட்டு. யாரை மனதில் நினைத்துக்கொண்டு பாடினான் என்று சொல்ல வேண்டியதில்லை அல்லவா?

**''வானச் சுடர்க ளெல்லாம்**
**மானே உந்தனைக் கண்டு**
**மேனி சிலிர்க்குதடி — அங்கே**
**மெய்மறந்து நிற்குதடி !**
**தேனே உந்தன் குரல்தான்**
**தென்றலோ உன் வாய்மொழிகள்**
**மீனொத்த விழிமலர்கள் — கண்டால்**
**வெறி மயக்கம் தருவதேனோ?''**

வந்தியத் தேவன் இப்படிப் பாடி முடித்தானோ இல்லையோ, அவனுடன் போட்டி போடுவது போலத் தூரத்தில் நரிகள் ஊளையிடத் தொடங்கின.

அதே சமயத்தில் மனிதக் குரலில் கலகல வென்று சிரிக்கும் சத்தம் கேட்டது.

வந்தியத் தேவன் சிறிது மிரண்டு சுற்றுமுற்றும் பார்த்தான். அவனுடைய கை உடைவாளில் சென்றது.

புன்னை மரம் ஒன்றின் கரிய நிழலிலிருந்து ஓர் உருவம் வெளிப்பட்டது.

''தம்பி! உன் பாட்டுப் பிரமாதம்! நரிகளின் போட்டி கானம் அதைவிடப் பிரமாதம்!'' என்று கூறிவிட்டுத் தேவராளன் மீண்டும் சிரித்தான். **(தொடரும்)**

# உலக அரங்கில் பரதக் கலை

டிசம்பர் 10ந் தேதி பாரத கலாசார வரலாற்றில் ஒரு முக்கிய நாள். பாரத மக்கள், முக்கியமாகத் தென்னகத்தவர்கள் பெருமைப்படவேண்டிய நன்னாள். அன்று ஐ. நா. உலக ஸ்தாபனம் கொண்டாடும் ''மனித உரிமைகள்'' தினத்தையொட்டி நியூயார்க் நகரத்தில், ஐ. நா. மணி மண்டபத்தில் உலக ராஜதந்திரிகள் முன்னிலையில் ஸ்ரீமதி வைஜயந்தி மாலாவின் பரத நாட்டிய நிகழ்ச்சி நடைபெறுகிறது. மூவாயிரம் ஆண்டுகளாக நம் நாட்டின் கலைகளில் சிறந்ததெனஅழியாது வந்து கொண்டிருக்கும் பரத நாட்டியக் கலையை அவர் உலக மேடையில் அன்று ஏற்றி வைக்கிறார்.

சினிமாத் துறையில் உச்ச ஸ்தானத்தில் விளங்குவது போலவே நடனக் கலையிலும் ஸ்ரீமதி வைஜயந்திமாலாவின் புகழ் உயர்ந்தது. இக் கலையை அவர் பேணி வளர்க்கும் ஆர்வம் ஏறக்குறைய பக்தி நிலைக்குச் சமமானது. சாஸ்திரீயப் பரத நாட்டியத்துடன், அவற்றின் பிரதேச வேறுபாடுகளான ஆந்திர நாட்டுக் குச்சிபூடி நாட்டியங்களிலும், கேரள நாட்டு மோகினி ஆட்டங்களிலும், மைலாட்டூர் பாகவத மேள சம்பிரதாயங்களிலும் தக்க ஆசிரியர்களிடம் முறைப்படி பயின்றவர். மறைந்து போன பழஞ் சிறப்புக்களை வெளிக்கொணர்வதில் சலியா ஊக்கமுள்ளவர். அவருடைய நவசக்தி நடனங்களும், திருப்பாவை, அழகர் குறவஞ்சி, சண்டாளிகா முதலிய நடன நாடகங்களும் ஸ்ரீமதி வைஜயந்திமாலாவின் அபூர்வ ஆற்றலுக்கும் திறமைக்கும் சான்று கூறிக் கொண்டிருக்கின்றன.

நாட்டியாலயா என்னும் நடனப் பள்ளியைச் சென்னை, பம்பாய் இரு நகரங்களிலும் தமது சொந்த மேற்பார்வையிலேயே நடத்தி இக் கலைக்கு அவர் செய்து வரும் தொண்டு சாலச் சிறந்தது.

திருத்ய சிரோமணி, நாட்டிய கலா சிகாமணி, நாட்டிய திருபம





★

மனித உரிமைகள்
தினத்தையொட்டி
ஐ.நா. சபையில்
நடனமாடும்
அரிய வாய்ப்புப்
பெற்றிருக்கிறார் ஸ்ரீமதி
வைஜயந்திமாலா.

★

விசாரத, பத்மஸ்ரீ முதலிய விருதுகளைப் பெற்றுள்ள ஸ்ரீமதி வைஜயந்திமாலா ஏற்கனவே ஒரு சிறந்த கலாசார தூதுவர். நம் நாட்டில் மட்டுமல்லாமல், பாரிஸ், லண்டன், மாஸ்கோ, தாஷ்கெண்ட், ஹாங்காங், கோலாலம்பூர், சிங்கப்பூர் முதலிய நகரங்களில் அவருடைய பரத நாட்டிய, இந்திய நடன நிகழ்ச்சிகள் அமோக வெற்றியுடன் நிகழ்ந்துள்ளன.

இவருடைய நடனங்களைக் கண்டு களித்த அயல் நாட்டுப் பிரமுகர்கள் வரிசையில் இங்கிலாந்து ராணி எலிஸபெத், இளவரசர் ஃபிலிப், அமெரிக்க ஜனாதிபதி ஐஸன்ஹோவர், யூகோஸ்லேவிய ஜனாதிபதி மார்ஷல் டிட்டோ முதலியோர் குறிப்பிட வேண்டியவர்கள்.

ஐ. நா. மணி மண்டபத்தில் நமது பரதக் கலையின் எழில் வகைகளையும், நளினங்களையும் பூரண அழகுடன், கண்டோர் வியக்கும் வண்ணம் வழங்கி மகிழ்விக்கும் தகுதியை முழுமையாகப் பெற்றிருக்கிறார் ஸ்ரீமதி வைஜயந்திமாலா. இயற்கை அளித்துள்ள வசீகரமான தோற்றமும், ரசபாவங்களை வேகமாக மாற்றி மாற்றி உணர்த்தி வைக்கும் கலை சொட்டும் முகமும், பரதக் கலையின் ஜீவநாடி கலை உய்த்துணர்ந்த மனோநிலையும், ஆண்டாள், மீரா போன்ற பக்தைகளின் நிலைக்குத் தாமும் நடனக் கலை மூலம் தம்மை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்ற அவாவும், ஸ்ரீமதி வைஜயந்திமாலாவின் நடனங்களுக்கு மங்காத சோபை அளிக்கின்றன. தமது கலைச் செல்வத்தின் மூலம் பல தரும ஸ்தாபனங்களுக்கும் சமூக ஸ்தாபனங்களுக்கும் நிதி திரட்ட பல பரத நாட்டிய, இந்திய நடன நிகழ்ச்சிகளை இலவசமாக நடத்தி உதவியுள்ளார் இக்கலை அரசி.

மொழிகளின் வரம்பைக் கடந்தது அபிநயக் கலை என்பதினால் காண்போர் உள்ளங்களை உடனே கொள்ளை கொள்ளச் செய்யும் மோகன சக்தியைப் பெற்றுள்ளது ஸ்ரீமதி வைஜயந்தியின் கலை.

அரசியல் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் இந்தியாவின் கௌரவம் உலக அரங்கில் சிறிது மங்கியிருந்தாலும் கலாசாரத் துறையில் பாரதத்தின் புகழ் உச்ச நிலையிலேயே இருக்கிறது. இதை மேலும் உறுதிப்படுத்தும் வாய்ப்பு ஸ்ரீமதி வைஜயந்திமாலாவுக்குக் கிட்டியிருக்கிறது. கைவழியே விழி சென்று, விழி வழியே மனம் சென்று, மனம் வழியே பாவமும் ரச உணர்ச்சிகளும் மிளிரும் இந்த அபிநயக்கலையின் சிறப்பை ஐ.நா. பிரதிநிதிகள், தாங்கள் ராஜதந்திரிகள் என்பதைச் சிறிது நேரம் மறந்து விட்டால், நன்கு உணர்வார்கள். அப்படி அவர்கள் தங்கள் நிலைமையை மறக்காமல் இருந்தாலும் மறக்கச் செய்யும் சக்தி வாய்ந்தது ஸ்ரீமதி வைஜயந்திமாலாவின் நடன நிகழ்ச்சி.

அவருடைய வண்ணப் படத்தை இந்த இதழ் மேலட்டையில் பிரசுரிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். அவரது கலாசார தூதுப் பணி பூரண வெற்றியுடன் ஜொலிக்க வேண்டும் என்று வாழ்த்தி அவரை வழியனுப்புகிறோம். வளர்க, வைஜயந்திமாலாவின் நாட்டியக் கலை!

# தேவதை நீந்தி

"தேவதை நீந்தி" என்ற பெயருக்கேற்ப இப்பிராணி தூய வெண்மை நிறத்திலும் உடலின் உள் உறுப்புகள் நம் கண்களுக்கு நன்கு தெரியும் படியாகவும் அமைந்துள்ளது. மழை காலம் தொடங்கி சிறு குட்டை குளங்களில் நீர் நிரம்பியதும் அங்கு இவை காணப்படுகின்றன. இவற்றின் வாழ்நாட்கள் மிகவும் குறைவே. அதிகபட்சம் ஒரு மாதம் வரைதான் வாழ்கின்றன.


தேவதை நீந்தி தண்ணீரில் நீந்துவதைப் பார்த்தால் நமக்கு வியப்பாக இருக்கும். தண்ணீரில் தலை கீழாக அதாவது வயிற்றுப் பாகம் மேலே தெரியும்படியாகப் படுத்தது போல் நீந்தும். படகைத் துடுப்பு கொண்டு ஓட்டுவது போன்று அலைகளை எழுப்பிச் செல்லுகிறது.

தேவதை நீந்தி இனப் பெருக்கம் செய்யும் முறை விசித்திரமானது. தேவதை நீந்தி வாழும் குளங்கள் கோடை காலத்தில் முழுவதும் வற்றி விடுகின்றன. அத்துடன் எல்லா தேவதை நீந்திகளும் இறந்து விடுகின்றன. ஆனால் அவற்றின் முட்டைகள் குளங்களின் அடியில் உள்ள சேற்றில் புதையுண்டு பாழாகாமல் காக்கப்படுகின்றன. இவ்வினம் முட்டைகள் கோடை காலத்தில் கடுமையான வெய்யிலையும் குளிர் காலத்தின் கடுமையான குளிரையும் எதிர்த்துச் சமாளிக்கின்றன. கோடை காலம் முடிந்து மழை பெய்தவுடன் குளம் குட்டைகளில் நீர் நிரம்பியதும் முட்டைகளிலிருந்து ஏதோ மந்திரத்தால் உற்பத்தியானது போன்று மிருதுவான, கண்ணாடி போன்ற அமைப்புள்ள இளம் தேவதை நீந்திகள் வெளிவருகின்றன.

மீன்கள் உள்ள குளங்களில் தேவதை நீந்திகள் அதிகம் காணப்பட மாட்டா. மீன்கள், தவளைகள், தண்ணீர் குச்சிப் பூச்சிகள் ஆகியவை தேவதை நீந்தியின் கடும் பகைவர்கள். இவை தேவதை நீந்திகளைக் கண்ட மாத்திரத்தில் கவ்வித் தின்று சாப்பிட்டு விடுகின்றன. தேவதை நீந்தி ஏன் தலை கீழாக நீந்துகிறது என்பது இன்றுவரை புரியாத புதிராகவே உள்ளது.

-- ஆன்டொனி பேசில்

தேவதை நீந்தி : மேலே ஆண், கீழே பெண்.





# பார்த்தோம்; மெய் சிலிர்த்தோம்!

ஆண்டனி - கிளியோபாட்ரா காலம் தொடங்கி சமீப காலம் வரையுள்ள பல்வேறு காதல் ஜோடிகளை அப்படி அப்படியே நம் முன் கொண்டுவந்து நிறுத்திவிட்டனர் ஒரு நாடக தம்பதியினர்.

இத்தனைக்கும் இந்த நாடகத்தில் விசேஷ ஆடை அலங்கார மாற்றங்களோ, காட்சி ஜோடனைகளோ கிடையாது. ஒலிபெருக்கி இல்லை; திரைச்சீலை கூட இல்லை! கதாநாயகன், கதாநாயகி, ஒரு ஜமக்காளம், இரண்டு முக்காலிகள் - அவ்வளவுதான். இத்தனை எளிமையான சூழ்நிலையில் எளிமையான உடை அணிந்து மேடை ஏறி இரண்டரை மணி நேரம் ரசிகர்களை அடுத்தடுத்து மெய்சிலிர்க்க வைத்தார்கள். இதை எப்படி அவர்களால் சாதிக்க முடிந்தது?

மேதாவி ஒருவனுக்கு அந்த மேதாவிலாசம் எப்படி வாய்க்கிறது என்று கேட்டதற்கு ஒரு மேனாட்டு அறிஞர் பின்வருமாறு விளக்குகிறார்: "நூற்றுக்கு ஒரு சதவிகிதம் பிறவியிலிருந்து கிடைக்கிறது: பாக்கி 99 சதவிகிதம் உழைப்பினால் கிடைக்கிறது!" மேலே சொன்ன நாடக தம்பதியரும், நடிப்புத் திறமையை உழைப்பின் மூலம்தான் அடைந்திருக்கிறார்கள்.

இந்த பிரிட்டிஷ் நாடக தம்பதி, நாடகத்தில் மட்டுமல்ல - வாழ்க்கையிலும் கணவனும் மனைவிதான். ஸ்ரீமதி பார்பரா ஜெஃபோர்டு, பிரிட்டனில் நடிப்புக் கலைக் கல்லூரியில் பயின்று தங்க மெடல் பெற்ற மாணவியாகத் திகழ்ந்தார். ஷேக்ஸ்பியரின் கதாநாயகிகள் என்ற தலைப்பில் தன்னந்தனியாக நடித்துப் பல தேசத்து ஷேக்ஸ்பியர் ரசிகர்களை மகிழ்வித்திருக்கிறார். இப்படி அவர் பிரிட்டிஷ் நாடக மேடைக்குச் செய்துள்ள சேவையைப் பிரிட்டிஷ் அரசாங்கம் பாராட்டி ஓ. பி. ஈ. என்ற விருது வழங்கியிருக்கிறது.

கணவர் ஜான் டர்னரும் நடிப்புக் கலைக் கல்லூரியில் பயின்றவர். அவர் பயின்று கொண்டிருந்த போதே பொது மேடையில் ஷேக்ஸ்பியர் நாடகங்களில் நடித்து வந்தார். பிறகு மனைவியுடன் சேர்ந்து பல நாடகங்களிலும், திரைப்படங்களிலும் டெலிவிஷனிலும் நடித்து வருகிறார்.

சென்னையில் அவர்கள் ஷேக்ஸ்பியர், ஆஸ்கார் ஒயில்ட், ஷெரிடன், பெர்னார்ட் ஷா, டி. எஸ். எலியட், கிறிஸ்டோபர் ஃப்ரை ஆகிய மேதைகளின் பிரபல நாடகங்களிலிருந்து 'The Labours of Love' என்ற தலைப்பில் சில காட்சிகளை நடித்துக் காண்பித்தனர். ஒவ்வொரு காட்சியிலும் வரும் வெவ்வேறு காதல் ஜோடிகள் வெவ்வேறு காலத்தவர்கள்; வெவ்வேறு குண இயல்புகளைக் கொண்டவர்கள். ஆயினும் என்ன? இந்த நடிகர்கள் அநாயாசமாக பாவங்களை மாற்றிக் கொண்டார்கள். மாமேதைகள் எழுதிய ஜீவன் பொருந்திய உரையாடல்களை யெல்லாம் உயிர்த் துடிப்புடன் கூடிய உச்சரிப்பு மூலம்சிறக்கச் செய்தார்கள். பல்வேறு காதல் ஜோடிகளையும் பண்பட்ட நடிப்பு மூலம் அப்படியே நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்திவிட்டனர்.

பெர்னார்ட் ஷா நாடகத்திலிருந்து ஒரு காட்சி: ஆன் என்ற பெண்ணின் தந்தை இறந்துபோவதற்கு முன், ஜாக் டான்னர் என்ற இளைஞனை அவளுக்கும் அவள் சொத்துக்கும் பாதுகாவலனாக நியமித்து உயில் எழுதி வைத்துவிட்டுப் போகிறார். ஆன், இந்த இளைஞனைத் தன் சொத்துக்களைப் பராமரிக்கும் ஊழியனாக மட்டும் கருதாமல் தன் காதலனாகவே கருதுகிறாள். ஜாக்கோ, கல்யாணம் என்றாலே கட்டோடு பிடிக்காதவன். அவனிடம் "நான் உன்னைத்தான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன்" என்று சொல்லி அவனை வழிக்குக் கொண்டு வருகிறாள் ஆன்.

இந்தக் கட்டத்தைப் படிக்கும்போதே வயிறு வெடித்துவிடும்படி சிரிப்பு வரும். அதைச் சிறப்பாக நடித்துக் காட்டியபோது அவையோர் மெய் மறந்து ரசித்து மகிழ்ந்தார்கள்.

இதற்கு நேர்மாறான பாவத்தைக் காட்டுவது ஷேக்ஸ்பியரின் மாக்பெத். மனைவியின் தூண்டுதலின் பேரில், மாக்பெத், விருந்தாளியாக வந்த மன்னனைக் கத்தியால் குத்திக் கொல்கிறான். மனைவி அவனைத் தூண்டும் விதமும், கொன்ற பின் அவன் மனச்சாட்சி அவனைப் படுத்தும் பாடும் ஷேக்ஸ்பியர் நாடகத்தில் மிக மிக அற்புதமான கட்டங்கள். அதையெல்லாம் கத்தி யில்லாமலும், இரத்தமில்லாமலும், ஆனால் அவை கண்ணுக்கு மெய்யாக இருப்பது போலவே நடித்துப் பிரமிக்க வைத்து விட்டார்கள்.

இந்த நடிக தம்பதி பிரிட்டிஷ் கவுன்ஸில் ஆதரவில் பாரத நாட்டுக்கு வந்திருந்தார்கள். பல நகரங்களுக்குச் சென்று நடித்திருக்கிறார்கள். ஒவ்வொரு ஊரிலும் ஒரு நாள் இரண்டு நாள்தான் நடித்திருக்கிறார்கள். சென்னையில்தான் நான்கு நாட்கள் அவர்கள் நடிக்க ஏற்பாடு செய்திருந்தார்கள். சென்னையில் நல்ல நடிப்புக் கலையை வரவேற்கும் ரசிகர்கள் அதிகம் என்று பாராட்டிக் கொள்ளலாம் போலும்!

—எஸ்.வி.எஸ்.



# 39. இளையவனுடைய ஆத்திரம்

நடந்து போன அனர்த்தங்களை எப்படியாவது நல்ல முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று பரதன், இவ்வாறு ஊரை விட்டு வனம் நோக்கிச் சென்று கொண்டிருந்த நாட்களில், சித்திரகூடத்தில் பர்ணசாலையில் ஒருவாறு சந்தோஷமாகவே காலங் கழிந்து வந்தது.

''லக்ஷ்மணனும் சீதையும் பக்கத்திலிருக்க எனக்கு என்ன குறை?'' என்று எண்ணினான் ராமன்.

மலையின் கம்பீரமும், வனத்தின் அழகும், பக்ஷிகளின் மதுரமான பாட்டும் விளையாட்டும் அவன் உள்ளத்தைக் கவர்ந்தன. ஊரையும் உறவினரையும் விட்டுப் பிரிந்த துக்கத்தை மறந்தான்.

'' சீதா ! அதோ பறவைகள் விளையாடுவதைப் பார்! மலைப் பாறைகளைப் பார் ! அவற்றில் தாதுக்கள் நீலமும் மஞ்சளும் சிவப்புமாக எப்படி மின்னுகின்றன ! வனத்தின் செடிகளையும் கொடிகளையும் பார். புஷ்பங்களைப் பார் ! நாம் என்னவோ எண்ணினோம். இந்த வனவாசம் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது! என்னைப் போன்ற பாக்கியவான் யார் ! இந்த மகிழ்ச்சி ஒரு பக்கம், தந்தையின் ஆணையை நிறைவேற்றும் பெரிய லாபம் ஒரு பக்கம். தந்தைக்குச் செலுத்த வேண்டிய கடமையைச் செய்து தீர்ப்பதோடு, தம்பி பரதனுக்கு ராஜ்யத்தைக் கொடுக்கும் மகிழ்ச்சியையும் அடைந்தேன்.''


இவ்வாறு சொல்லிக் கொண்டு ராமன் தன் துக்கத்தை அகற்றியும், சீதைக்கு உற்சாகம் உண்டாக்கியும் பிரதிக்ஞையை நிறைவேற்றி வந்தான்.

மலையிலிருந்து சில சமயம் சீதையுடன் மந்தாகினி ஆற்றுக்குப் போவான். அங்கே இருவரும் ஸ்நானம் செய்வார்கள். நதியின் அழகை அநுபவிப்பார்கள். ''மணல் குன்றுகளைப் பார் ! அன்னங்களும் பறவைகளும் தாமரைக் கொடிகளிடையில் விளையாடுவதைப் பார் ! ஆற்றின் அழகு உன் அழகைப் போலவே இருக்கிறது, காதலி !'' என்பான் ராமன்.

'இந்த நதிக் கரை எவ்வளவு மனோகரமாக இருக்கிறது ! மிருகங்கள் இறங்கி நீர் குடிக்கும் துறைகளில் ஜலம் சிவந்து எவ்வளவு அழகாக இருக்கிறது ! இதற்குச் சமானம் குபேரனுடைய ஸௌகந்திக ஸரஸ்ஸும் இல்லை. அதோ பார் ! ரிஷிகள் நீராடுகிறார்கள். சிலர் சூரியனை உபாசித்து நிற்கிறார்கள். புஷ்பங்கள் மரக் கிளைகளினின்று நீரில் விழுவதைப் பார். அதோ முத்துக்களை வாரி எறிவது போல் மந்தாகினி துள்ளிக் குதித்து விளையாடி வரும் அழகைப் பார் ! பட்டண வாசத்தைவிட இந்த வன



வாசம் எவ்வளவோ இன்பமாக இருக்கிறது. இது நம்முடைய பாக்கியம். ரிஷிகளும் சித்தர்களும் இங்கே நதியில் தினமும் நீராடுகிறார்கள். இந்தக் காட்சி நமக்கு நகரத்தில் கிடைக்குமா? இந்த மலையே நம்முடைய அயோத்தி. கூட்டம் கூட்டமாகப் பறக்கும் இந்தப் பட்சிகளும் வன விலங்குகளும் நம் பிரஜைகள். இந்த மந்தாகினியே நம்முடைய ஸரயூ நதி. லக்ஷ்மணனும் நீயும் என்னுடன் இருக்கும்போது வேறு என்ன வேண்டும்? ஆற்றில் மிருகங்கள் ஒன்றையொன்று பார்த்துப் பயமின்றி நீர் குடித்து வருவதைப் பார்த்தால் எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறது. இந்த நதியில் நீராடி இங்கே கிழங்கும் பழங்களும் புசித்து உன்னுடன் காடும் மலையும் சுற்றி மகிழ்ச்சி அடையும்போது, நான் அயோத்தியை யாவது ராஜ பதவியையாவது ஏன் நினைக்கவேண்டும்?'





○ குழந்தைகள் தீட்டி, முதல் இரண்டாவது பரிசு பெற்ற ஓவியங்கள் இவை. முதல் பரிசு எதற்கு? யோசித்து முடிவு செய்யுங்கள். பிறகு 42-ம் பக்கம் பாருங்கள்.

இவ்வாறு சக்கரவர்த்தித் திருமகன் ஜானகியுடனும் தம்பி லக்ஷ்மணனுடனும் ஆற்றங் கரையிலும் மலையிலும் வனத்திலும் சஞ்சரித்துக் கொண்டு சந்தோஷமாகக் காலம் கழித்து வந்தான்.

* * *

மலைச் சாரலில் ஓர் இடத்தில் நிம்மதியாக உட்கார்ந்திருந்தார்கள்.

திடீர் என்று தூரத்தில் தூசி கிளம்பி, ஆகாயமளாவி நின்றது. இத்துடன் பெரிய ஜன சமுத்திரத்தின் கம்பீரப் பேரொலியும் கேட்டது. பரதனுடைய சேனை காட்டில் பிரவேசித்ததின் காரணமாகக் காட்டுப் பிராணிகள் பயந்து இங்குமங்கும் கூட்டமாக அலைந்து கொண்டிருந்ததையும் ராமன் பார்த்தான்.

லக்ஷ்மணனைப் பார்த்துச் சொன்னான் ராமன் :

''தம்பி, கேள்! ஏதோ பெரிய கோஷம் கேட்கிறது. யானைகளும், காட்டெருமைகளும், மான்களும் நாலா பக்கமும் ஓடுகின்றன. என்ன விஷயம் என்று நன்றாகப் பார்! யாராவது அரச குலத்தார் வேட்டையாட வந்திருக்கிறார்களா? அல்லது சிங்கம், புலி இவற்றின் காரியமா என்று பார்த்துச் சொல்வாய்'' என்றான்.

உடனே லக்ஷ்மணன் மிக உயர்ந்த ஓர் ஆச்சா மரத்தின் மேல் ஏறினான். நாலா பக்கமும் நன்றாகப் பார்த்தான். வட திசையில் பெரியதொரு சதுரங்க சேனை வந்து கொண்டிருந்ததைக் கண்டான். மரத்தின்மேலிருந்தே ராமனுக்கு எச்சரிக்கை செய்தான் :

''அண்ணா! ஒரு பெருஞ் சேனை துவஜங்களைப் பறக்க விட்டுக் கொண்டு தேர்ப் படை, யானைப் படை, குதிரைப் படை, காலாட்படை எல்லாமாக வந்து கொண்டிருக்கிறது. அபாயம்! உடனே தீயை அணைத்து விட்டு, சீதையை அழைத்துச் சென்று மலைக் குகையில் பத்திரமாக இருக்கச் செய்து விட்டு, கவசம் பூண்டு வில்லும் அம்பும் எடுத்து யுத்தத்துக்கு ஆயத்தமாவோம்!'' என்றான் லக்ஷ்மணன்.

''அப்பனே, நன்றாகப் பார்த்துச் சொல். இந்தப் படை எந்த அரசனுடையது என்று தேர்க் கொடியைக் கவனித்துப் பார்!'' என்றான் ராமன்.

அவ்வாறே பார்த்தான் லக்ஷ்மணன். பார்த்துவிட்டு ஒரே கோபாவேசமாகி விட்டான்.

''அண்ணா! ராஜ்யத்தைப் பெற்றதோடு நிற்காமல் நம்மை எதிர்த்துக் கொல்லவும் வருகிறான் பரதன். தேரில் திருவாத்திக் கொடி காற்றில் ஆடுவது நன்றாகக் காணப்படுகிறது. இன்று கைகேயி மகன் என் கையில் அகப்பட்டு விட்டான். அவனை விடப் போவதில்லை. அறநெறியிலிருந்து விலகிய இவனைக் கொல்வதில் என்ன பாவம்? இந்தச் சேனையை இங்கிருந்து எதிர்க்கலாமா? அல்லது மலை மேல் ஏறி நின்று எதிர்ப்போமா? நமக்கு இவன் செய்த கொடுமைக்கு இன்று பழி வாங்கி விடலாம். நம்மைக் கொல்ல வரும் பகைவனைக் கொல்வதில் என்ன பாவம்? முதலில் இவனல்லவோ அதருமத்தில் இறங்குகிறான்? அவனை எதிர்த்துக் கொல்வது தருமமேயாகும். இவனை வதம் செய்து விட்டுத் துராசையில் வீழ்ந்த இவன் தாயின் எண்ணத்தை இன்று முற்றிலும் அழித்துத் தீர்ப்போம். இந்த வனத்தில் ரத்த வெள்ளம் ஓடச் செய்யப் போகிறேன். யானை ஒடித்த பெரிய மரம் போல் இன்று பரதன் வீழ்வான். இந்தச் சேனையை நிர்மூலமாக்குவோம். இந்தக் காட்டிலுள்ள பிணம் தின்னும் மிருகங்களுக்கு நிறைய உணவு கொடுப்போம்.''

இவ்வாறு லக்ஷ்மணன் கோபத்தில் தன்னையும் மறந்து பேசினான். (தொடரும்)

# வனப்பும், புத்துணர்ச்சியும் பெற உபயோகியுங்கள்-சிந்தால்



நீங்கள் மாசுமருவற்ற எழிலைப் பெற, நாள் முழுவதும் புத்துணர்ச்—சியுடன் திகழ, உபயோகியுங்கள்-இருவகையில் நன்மை புரியும் சிந்தால் சோப். உலகிலேயே மிகச்சக்தி வாய்ந்த கிருமி நாசினியாகிய ஜி-11 (ஹெக்ஸாக்ளோரோஃபீன்) அடங்கியது சிந்தால்.

ஜி-11 அடங்கிய சிந்தால் மட்டுமே உங்களுக்கு வனப்பையும், புத்துணர்ச்சியையும் அளிக்கிறது.





**சிந்தால் உண்மையிலேயே ஒரு துர் நாற்ற மகற்றும் சோப்**

Interpub/GS/20A Tam


சிலையைத் தேடி..
கதை: வாண்டுமாமா
சித்திரம்: ரமணி..
11
நீலாவும் ரவியும் அடுத்த அறையில் இருந்தவர்கள் வெளியேறிய பிறகு 'சுங்சிங்' மட்டும் தனித்திருந்த போது நீலா கூறினாள்.....
கை மாறிப் போயிற்று..
கண்டு பிடிக்க முடிந்ததா?
நீலா தாமதிக்கவில்லை. தன் பொம்மையின் சட்டையின் உட்புறமிருந்த ரகசியக் கடிதத்தை எடுத்து நீட்டினாள்.
ஐயா, தங்கள் இந்திய நண்பர் இந்திரபால் இதைத் தங்களிடம் கொடுக்கச் சொன்னார்.
'இந்திரபாலா'.. அவர் எங்கே? எப்படி இருக்கிறார் இப்போது?
'சுங்சிங்' கடிதத்தைப் படித்துக் கொண்டிருக்கும் போதே நீலா நிகழ்ந்ததைக் கூறினாள்.
குழந்தைகளே! முக்கியமான தகவலைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். உங்கள் துணிவைப் பாராட்டுகிறேன்.
அதே சமயம் சுரங்கத்திலுள் 'வீ'யின் நிலை? 'சுங்சிங்' அனுப்பிய விசை கண்ணி வெடிகளுக்கு உயிரூட்ட.. அடுத்த விநாடி..
இனி எப்போதுமே முன்னேற முடியாதபடி சுரங்கம் தகர்ந்து மூடிக் கொண்டது.....
இது.. இது அந்த அற்ப நாய்கள், விடுதலைப் படையின் வேலைதான். இருக்கட்டும் விடப் போவதில்லை அந்தப் பதர்களை...


இந்திரபால் மிகத் திறமைசாலி. முதலில் நாம் இந்தக் கம்யூனிஸ்ட்களின் கண்காணிப்பிலிருந்து தப்ப வேண்டும். ஸான் கூட்டாளிகளோடு ரேடியோ மூலம் தொடர்பு கொண்டு மேலே நடக்க வேண்டியதைத் திட்டமிடுகிறேன்....
ஐயா, நாங்கள் எங்கள் தகப்பனாரிடம் போக வேண்டும். அதற்கு நீங்கள் உதவுவீர்களா?
கட்டாயம் உதவ வேண்டும் குழந்தாய். உங்கள் தாய் நாட்டுக்கு மட்டுமல்ல, விடுதலைக்காகப் போராடும் சங்கத்துக்குமே கூட நீங்கள் மகத்தான உதவி செய்திருக்கிறீர்கள்...
'சுங் திங்' ட்ரான்ஸ் மீட்டரில் கவனமாக இருந்தார்..
பதிலே காணோமே...ஏன்? ஒரு வேளை அவர்களும் ஆபத்தில் சிக்கி விட்டார்களோ?
எனக்கு மிகவும் களைப்பாக இருக்கிறது.
சுங் திங்.. மிஸ்டர் சுங் திங்....
யாரது..?
கம்யூனிஸ்ட் பட்டாளம் விடாது புகுந்து சோதனை நடத்தி வருகிறது...
இனி தாமதிப்பதற்கில்லை. நம் திட்டப்படி செயல்பட வேண்டியதுதான்.. சீக்கிரம் நம் ஆட்களுக்கு எச்சரிக்கை கொடு.
தொடரும்..

# கண்ணுங்கருத்துமாக குழந்தைகளைப் பேணும் தாய்மார்களுக்கு





தாயன்பைப் போலத் தூய்மையானது ஆஸ்டர்மில்க். ஜீரணிக்கச் சுலபமானது. எனவே இதிலுள்ள வைட்டமின்களும், இரும்புச் சத்தும் புரதமும், உடலில் பொருந்தி, பயனளிக்கின்றன. இவை குழந்தையின் தேவைகளுக்கேற்ற அளவுகளில் அடங்கியுள்ளன.

ஒப்பற்ற ஆஸ்டர்மில்க் உலகெங்கும் விவேகமுள்ள தாய்மார்களின் தேர்வு—உங்களைப் போன்ற தாய்மார்களின் தேர்வு.

# ஆஸ்டர்மில்க்

*உலகெங்கும் மிகநம்பகமான பாலுணவு*

ஒரு
க்ளாக்ஸோ
தயாரிப்பு

*Creative Unit-218*



# ரகுபதி ராகவ

## மகாத்மா காந்தி

தமிழாக்கம்: **ராஜாஜி**

9-(II)

உண்மையைக் காண வாழ்நாள் முழுதும் உழைக்கும் விஞ்ஞானிகள் உண்மையைக் காண்பதற்காகப் பெருந் தவறுகளும் செய்கிறார்கள். பிராணிகளை உயிருடன் இம்சை செய்கிறார்கள். உண்மையைக் காணத்தான் இப்படிச் செய்கிறார்கள். ஆனபடியால், உண்மையே கடவுள் என்று விவகரிப்பதிலும் கஷ்டங்கள் இருந்து வருகின்றன. ஒப்புக் கொள்ளுகிறேன். விளக்க முடியாத ஒரு பொருளை விளக்கித் தீர்க்க முயல்வதில் எப்படி வெற்றி காண முடியும்? முடியாது. நமது ஆராய்ச்சிக் கருவி நமது புத்தி. அதைத் தவிர வேறு இல்லை. அந்தக் கருவி ஒரு வரம்புக்குள்தான் பயன்படும். வரம்பு அற்ற ஒரு பொருளை அந்தக் கருவியைக் கொண்டு எப்படிக் காண முடியும்!

ஹிந்து சாஸ்திரத்தில் இன்னொரு விஷயம் சொல்லப்படுகிறது. கடவுள் உண்டு என்பதைத் தவிரக் கடவுள் ஒன்றே உண்மை. வேறு ஏதும் இல்லை என்பது ஹிந்து ஞானிகளின் கொள்கை. இஸ்லாமிய மந்திரத்திலும் இப்படியே சொல்லப்படுகிறது. ஆண்டவன் ஒருவனே மெய்ப்பொருள். வேறு ஏதும் உண்மையல்ல என்று இஸ்லாத்தில் சொல்லப்படுகிறது. ஸம்ஸ்க்ருத பாஷையில் சத்தியம் என்கிற பதத்தைச் சோதித்துப் பார்த்தால் அதன் பொருள் ''உள்ளது'' என்பதுதான். (தமிழிலும் அவ்வாறே உண்மை என்றால் உளது என்பதுதான் பொருள்.) இதனாலும் இன்னும் சில காரணங்களினாலும் நான் கடவுளை விளக்கும் பல பெயர்களில் மெய்ம்மை, உண்மை, சத்தியம் என்கிற பெயரே உத்தமமான பெயர் என்கிற முடிவுக்கு வந்தேன். இந்தப் பெயரே என் உள்ளத்துக்குத் திருப்தியும் தருகிறது.

சத்தியம் என்கிற வடிவத்தில் ஆண்டவனைக் காண வேண்டுமானால் அதற்கு வழி அன்பு ஒன்றே என்று சொன்னேன் அல்லவா? எந்த ஜீவனையும் இம்சை செய்யாமல் இருப்பது, அதாவது அஹிம்ஸை, இது என்னுடைய வாழ்க்கைத் தத்துவம் என்பது உங்களுக்குத் தெரியும். அடையக்கருதும் பயனும் அடையச் செல்லும் வழியும் இரண்டும் ஒன்றே ஆகும் அல்லவா? எனவே சத்தியமே தெய்வம் என்பதும், அன்பே தெய்வம் என்பதும் இரண்டும் ஒன்றே என்று வைத்துக் கொள்ளலாம்.

சத்தியம் என்றால் என்ன என்பது அடுத்த கேள்வி. கஷ்டமான கேள்வி. என்னைப் பற்றிய மட்டில் நான் உணர்ந்தது ஒன்று. உள்ளத்தில் ஒரு குரல் பேசுகிறது. அதன் பேச்சே உண்மை.

பலர் பலவிதமாக அல்லவோ கருதியும் பேசியும் செய்தும் வருகிறார்கள். மாறுபட்டல்லவோ கருத்துக்கள் நிற்கின்றன. நீ சொல்வது எப்படிப் பொருந்தும் என்று கேட்பீர்கள். ஒருவன் கண்டது அவனுக்கு உண்மை. அது மற்றொருவனுக்கு உண்மை ஆகாது. அவனவன் கண்டதே அவனவனுக்கு உண்மை. உண்மையைக் காணும் முயற்சியில் சில முறைகளைக் கையாள வேண்டும். இல்லாவிடில் பொய்யை மெய்யாகக் கொண்டு பிழைகளில் சிக்கிக் கொள்ளுவோம். பௌதிக ஆராய்ச்சிகளில் சில சோதனை முறைகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள் அல்லவா? அப்படியே ஆத்மீக உண்மையைக் காணும் முயற்சிகளிலும் இன்றியமையாத சில நிபந்தனைகள் உண்டு. ஆத்மீக சோதனையில் ஈடுபடுகிறவர்கள் சில கடினமான விரதங்களை அனுஷ்டிக்க வேண்டும். 'என் உள்ளம் இப்படிச் சொல்லுகிறது. அதுவே எனக்கு உண்மை' என்று சொல்லும் அதிகாரத்தை ஒருவன் பெற வேண்டுமானால் அவன் தன்னுடைய அறிவு, சீலம், ஆற்றல் இவற்றின் வரம்பை உணர்ந்து கொள்ள வேண்டும். ஹிந்துக்களாகிய நாம் அநுபவத்தின் பேரில் விதித்துக் கொண்டிருப்பது என்னவென்றால் கடவுளைக் காணும் முயற்சியில் இறங்குவதற்குமுன் சில விரதங்களைக் காத்து அவற்றில் வெற்றி பெற வேண்டும். வாய்மை விரதம், பிரும்மசரிய விரதம், ஜீவன்களைத் துன்புறுத்தா விரதம், வறுமை வாழ்க்கை, எனது என்று பொருள் திரட்டாமல் இருத்தல் முதலியன. காமிகனுடைய ஆசை வேகத்தைப் போல மெய்ப்பொருளைக் காணும் ஆர்வம் இருக்க வேண்டும். பொருளைத் திரட்டும் வேலை வைத்துக் கொண்டால் இந்த ஆர்வத்துக்கு இடம் இராது. மனைவிக்கும் கடவுளுக்கும் அன்பை வேண்டிய அளவுக்குப் பிரித்துக் கொடுப்பது கஷ்டமான காரியம் என்பதை அனைவரும் கண்டிருக்கிறார்கள். இந்த விரதங்களைக் காத்து வெற்றி பெற்றால் ஒழிய ஒருவன் மெய்ப் பொருளைத் தானே காணும் முயற்சியில் பிரவேசித்தல் கூடாது. இந்த நிபந்தனைகள் மட்டுமல்ல. ஹிந்து சாஸ்திரத்தில் வேறு வழிகளும் உண்டு. அவை எல்லாவற்றையும் இப்போது நான் சொல்லப் புகவில்லை. ஒன்று மட்டும் சொல்லுகிறேன்: என் உள்ளம் இப்படிச் சொல்லுகிறது, அதுவே உண்மை என்று சொல்லும் அதிகாரம் அனைவருக்கும் இல்லை. இதுவே நம் முன்னோர் அநுபவத்தினின்று கண்ட உண்மை. அதிகாரம் படைக்காதவர்கள் எல்லாம் இது என் மனசாட்சி, நான் என் உள்ளத்தில் கண்ட உண்மை என்று சொல்லியும் செய்தும் வருவதாலேதான் உலகத்தில் பலர் உண்மை இல்லாதவற்றை மக்களிடையே குழப்பி வருகிறார்கள்.

அடக்கம் இல்லாதவர்கள் உண்மையைக் காண மாட்டார்கள். உண்மை என்கிற வெள்ளத்தில் படகேறிச் செல்ல அடக்கம் மேற்கொள்ள வேண்டும். அடக்கம் இன்றி அகம்பாவம் கொண்டால், பாரம் அதிகமாகி மூழ்கித்தான் போவோம். நான் என்பதைச் சூன்யமாக்கிக் கொள்ள வேண்டும். அப்போது ஓடம் சரியாகச் செல்லும்.

(யங் இந்தியா 31-12-31)

# 'கல்கி'யும் காந்தியும்

## கவியோகி சுத்தானந்த பாரதியார்


ஒத்துழையாமை உருவானது சென்னையில் ராஜாஜி வீட்டில்; ஒத்துழையாமைத் தீர்மானம் நிறைவேறியது நாகபுரியில். நாகபுரி காங்கிரஸ், விஜயராகவாச்சாரியார் தலைமையில் நடந்தது. அவரும் வி. ஆர். நாகம் சேர்ந்து ஒத்துழையாமைத் தீர்மானத்தை நிறைவேற்றினர். காந்தி சொல்லுடன் செயலில் குதிப்பவர். ஒத்துழையாமைத் திட்டம் நிறைவேறப் பணம் வேண்டும், சாந்தப் படை வேண்டும். காந்தி, 'திலகர் சுயராஜ்ய நிதி' வசூலிக்கத் தொடங்கினார். நாட்டு இளைஞர்களை ஊக்கி விடுதலைப் பணியில் வீறுகொள்ளச் செய்தார். அந்த இளைஞருள் ஒருவரே ரா. கிருஷ்ணமூர்த்தி.

பால் வடியும் முகம்; உப்பிய கன்னத்தில் அதிட்ட மச்சம்; அன்பு துடிக்கும் அதரம்; இரட்டைக் கிளி கொஞ்சும் கீச்சுக் குரல், உற்சாகமான பேச்சு, நிறைந்த உள்ளம், தாராளமான கை; நகைச்சுவைக் கதைகளின் கவர்ச்சி, தூய கதராடை. அவர் பேச்சைக் கேட்கவே மக்கள் காத்திருப்பர். கரூரில் அமராவதி மணலில் பெருங்கூட்டம் நடந்தது. நாமக்கல் ராமலிங்கம் பாடினார், கரூர் இட்டு பேசினார், நானும் பேசினேன். இரவு ஒன்பது மணி. கூட்டம் கலையத் தொடங்கியது. உடனே ''ரா. கி. பேசுகிறார்'' என்றதும் கூட்டம் அப்படியே அமர்ந்து கேட்டது. கல்கியின் பேச்சிலும் எழுத்திலும் நட்பிலும் ஒரு கவர்ச்சியான தெளிவுண்டு.

★★★

திலகர் — வ. வே. சு. ஐயர் தொடர்பு எனக்கு மிகுதி. ''ஐயர்'' மாணவரிடையே தேச பக்தியைப் பரப்ப என்னைப் பணித்தார். அதனாலேதான் நான் மூன்றாண்டுகள் ஆசிரியராகவும் சாரணத் தலைவனாகவும் பணி செய்தேன்.

டாக்டர் ராஜனும் ஐயரும் என் உயிர்த் தோழர்கள். ஐயர் தேச பக்தன் ஆசிரியராயிருந்து பெல்லாரிச் சிறைக்குச் செல்லும் போது எனக்கு இவ்வாறு எழுதினார்: ''போதும் வேலை; இனி காந்தி சேவை.'' வாழ்க்கைப் படலம் மாறியது.



வந்தார் காந்தி. இப்புறம் முகம்மதலி; அப்புறம் சௌகதலி. விஜயனும் பீமனும் போல அவரைத் தொடர்ந்தனர். டாக்டர் ராஜன் ஒரு கதர் மாலை போட்டு வரவேற்றார். அவர் மகள் தஞ்சம் குங்குமப் பொட்டு வைத்தாள். ரா.கி. பயபக்தியுடன் கைகட்டி நின்றார். காந்தி கதர் நெசவைப் பார்த்து மகிழ்ந்தார். சாஸ்திரி ஒரு முரட்டுக் கதர் துண்டை அவருக்குப் போர்த்தினார். காந்தி என்னைப் பார்த்துப் புன்னகைத்து ''அபீ ஜேல்ஸே பாஹர் ஆவ்'' (இப்பொழுது சிறையை விட்டு வெளியே வா) என்றார். ''க்யா ஜேல்? ஸ்கூல் யா குர்தா? (பள்ளியா — சட்டையா) என்றேன். ''முதலில் சட்டைச் சிறை'' என்றார். உடனே என் மஸ்லின் டர்பனைக் கழற்றிக் கீழே போட்டேன். பிறகு அல்பாகாச் சட்டையைக் கழற்றிப் போட்டேன். ''பஹனோ கதர்'' (உடுத்து கதரை) என்று அந்த முரட்டுத் துண்டைத் தந்தார். இடுப்பு வேஷ்டியையும் அவிழ்த்தெறிந்து கதர் அணிந்தேன். அப்போது வெளியே மில் ஆடைகள் குவிந்திருந்தன. எனது டர்பனும் அல்பாகாவும் அவற்றின் சிகரமாக விளங்கின. ''ஜலாவ்'' என்றார் காந்தி. சுவாமிநாத சாஸ்திரி ''உங்கள் கையால் கொள்ளி வையும்'' என்றார். ''மகாத்மா காந்திக்கு ஜே'' என்று நான் தீமூட்டினேன். அத்தனை ஆடைகளும் எரிந்து கரிந்தன. கல்கி என் முதுகைச் சுரண்டி ''இப்போதுதான் அழகாயிருக்கிறீர்!'' என்றார்.

★★★

அன்று காந்தியின் குரல்! இந்திய மக்களின் ஆன்மக் குரலாக இருந்தது. அவர் வாயிலிருந்து வரும் சொல்லெல்லாம் கீதையாயிருந்தன. அவர் சொற்களைப் பாமாலையாகத் தொடுத்தேன். காந்தி, ''காவ் காவ் சலியே'' (கிராமம் கிராமமாகப் போம்) என்று எனக்குக் கட்டளையிட்டார். டாக்டர் ராஜன், ''கிருஷ்ணமூர்த்தி உடன் வருவான்; திருச்சி ஜில்லாவில் திலகர் சுயராஜ்ய நிதி வசூலிக்க வேண்டும்; கதரைப் பரப்ப வேண்டும்; கள்ளுக்கடை மறியல் செய்ய வேண்டும்; தீண்டாமையை ஒழிக்க வேண்டும்; காந்திய முழக்கம் செய்ய வேண்டும். பாடும், பேசும், பணி செய்யும்'' என்று பணித்தார்.

★★★

போகுமிடமெல்லாம் நான் கனி, கடலையையே வாங்கி உண்டேன். என் உணவுக்காக எவரையும் எதிர்பார்த்ததில்லை. ரா. கி., ''என்னோடு வந்தால் இட்டிலி சாம்பார் சாப்பிட்டாக வேண்டும்'' என்பார். கல்கி உள்ளம் விசாலமானது. அவரிடம் கட்டுச்

செட்டு கருமித்தனம் இல்லை. நட்புரிமைக்கு எடுத்துக்காட்டு கல்கி.

ரா. கி. மகா மேதாவி. அவர் தொடர்ந்து படித்திருந்தால் கணக்கில் புகழ் பெற்றிருப்பார். இளம் வயதில் பள்ளிப் படிப்பை உதறித் தள்ளித் தேச சேவைக்கே தம்மை அர்ப்பணித்துக் கொண்டார். அவருக்கு டாக்டர் ராஜன் சரியான வேலை கொடுத்தார். சக்கை வேலை. கிராமங்களிலிருந்து கதர் துண்டுகள் வரும். அவற்றை நிறுத்து விலை போட்டுத் தந்தார். கணக்கு வைத்துக் கொண்டார். கூட்டங்களுக்கு ஏற்பாடு—செய்தார். விளம்பரங்களைப் பரப்பினர்.

அன்று திருச்சி தேசியக் கல்லூரியின் முன்னால் பெரிய பொதுக்கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. காந்திஜி குறித்த நேரத்துக்குக் கூட்டத்துக்கு வந்தார். ''காந்தி மகானைக் கண்டேனே, கருணைக் கடலைக் கண்டேனே'' என்ற கீர்த்தனையை நான் சபையில் பாடினேன்.

காந்தி பேசும்போது ரா. கி. பெண்கள் பக்கம் மெல்ல உண்டியலை நீட்டிச் சுற்றினர். காந்தி அன்று உருக்கமாகப் பேசினர். சாஸ்திரி தமிழில் மொழி பெயர்த்தார். ''நமது தேசம் விடுதலையாகும். அதிகார நாற்காலியை விட்டு நாம் லோக சேவகராக வேண்டும். முதலில் நாம் விடுதலை பெற வேண்டும். நாம் எத்தனையோ தீமைகளுக்கு அடிமையாயிருக்கிறோம். நமது நடை உடை பாவனைகள், அணிமணிகள் எல்லாம் எளிமைக் கோலம் பூண வேண்டும். நாடு அந்நியருக்கு அடிமைப்பட்டு வருந்தும்போது நாம் நகை நட்டுகளைப் போட்டு மினுக்குவது பாபம். பஞ்சை மக்கள் பட்டினி கிடக்கும்போது பட்டு அணிவது பாபம்...'' என்றெல்லாம் கூறியபோது, ரா. கி. ''கேட்டுக்கோங்கோ மாமி. உங்களுக்குத்தான் காந்தி சபர்மதியிலிருந்து வந்து பேசுகிறார். அவர் மனம் குளிரும்படி .... உங்களுக்குத் தெரியுமே...'' என்று மெல்லச் சொன்னர். காந்தி பேச்சு பெண்களுக்குப் புது உணர்ச்சி தந்தது. ''லோகமான்ய திலகர் ஆயுளெல்லாம் தேச சேவை செய்து சென்றார். அவர் நினைவுக்காக ஒரு கோடி வசூலித்து ஆக்க வேலை நடக்க வேண்டும். தாராளமாக உதவுங்கள்'' என்றார் காந்தி. ராகி, ''அம்மா! உங்களைப் பார்த்தே மகான் பேசுகிறார். — கழற்றுங்கள் தோடுகளை — போடுங்கள் சங்கிலி — காப்பு — மோதிரம்'' என்று உண்டியலைக் குலுக்கினர். 'மளக்'கென்று ஓர் அம்மாள் தங்க மோதிரத்தைக் கழற்றிக் கொடுத்தார். ரா. கி. அதைக் கையில் ஏந்தி, மேடைக்கு வந்து ''இதோ அந்த அம்மாள் தந்த மோதிரம். மற்றவர்கள் சும்மா இருப்பதா? எங்கே, தியாகப் போட்டி, தானப் போட்டி நடக்கட்டும்'' என்றார். ஓர் அம்மாள் காந்தி முன் வந்து வணங்கி அவர் திருவடியில் ஒரு தங்கச் சங்கிலியை வைத்தார். இன்னொர் அம்மாள் கைக் காப்பைக் கழற்றி அர்ப்பணித்தாள். காந்தி, ''தியாகம் பெண்மையுடன் பிறந்தது'' என்றார்.

ரா. கி. ஆண்களிடையே புகுந்தார். ''பார்த்தீர்களா பெண்களின் தியாகத்தை! ஆண்கள் செய்தி என்ன?





**''ஆண்களோடு பெண்களும்**
**சரிநிகர் சமானமாக**
**வாழ்வோம் இந்த நாட்டிலே''**

என்று பாட்டிழுத்து உண்டியலைக் குலுக்கினர். நோட்டும் பணமுமாக விழுந்தன. கடுக்கன், மோதிர வகைகள் காந்தியிடம் அர்ப்பணமாயின. டாக்டர் ராஜன், ''கிருஷ்ணமூர்த்தி! அப்படியே கதர்த் துண்டுகளையும் தள்ளிவிடு'' என்றார். ரா.கி.யும் இக்னேஷியஸ் துறையூர் துரையும் கதரை விற்றனர். இரண்டு மூட்டைகள் விரைவாக விற்றன. காந்தி, ''அச்சா தேச சேவக்'' என்று ரா. கி.யைத் தட்டிக் கொடுத்துச் சென்றார். காந்தி சென்ற பிறகு ரா. கி. ''என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்'' என்ற பாட்டைப் பாடினர். கூட்டம் அப்படியே உட்கார்ந்து விட்டது. இக்னேஷஸ் ஆங்கிலத்தில் விறுவிறுப்பாகப் பேசினர். கல்கி இரட்டைக் கிளிக் குரலெடுத்து அழகாக காந்தியத்தை விளக்கி ஒரு கதை சொன்னர். ''தளதளப்புடன் பாத்திரம் கொதிக்கிறது. எரிகிற விறகை எடுத்து விட்டால் கொதிப்பு நிற்கிறது. இதுதான் ஒத்துழையாமை-நாம் வேலை நிறுத்தம் செய்தால் வெள்ளைக்காரன் ஜம்பம் பலிக்காது'' என்றார். முக்கால் மணி நேரம் மக்கள் கருத்துடன் கேட்டனர். உண்டியல் நிரம்பியது. கதர் முழுவதும் விற்றது.

இவ்வாறு ரா. கி.யும் நானும் திருச்சி மாவட்டத்தை வட்டமிட்டோம். — கரூர், வாங்கல், மோகனூர், மணப்பாறை, மருங்காபுரி, ஸ்ரீரங்கம், திருவானைக்காவல் முதலிய இடங்களில் பெருங் கூட்டங்கள் நடந்தன. சுமார் நாற்பது கூட்டங்களில் இருவரும் பேசினோம். அந்தக் காலம் ரா.கி.யின் திறமையை அறிந்து வியந்தேன்.


# இவ்வளவு அமோக விளைச்சலுக்கு உதவியது எது?



## புத்திசாலியான விவசாயி விவேகமாகத் தேர்ந்தெடுத்த ஓர்த்திங்டன்-சிம்ப்ஸன் பம்பு செட்

**விஷயமறிந்த விவசாயிகள் பெஸ்ட் அண்ட் கம்பெனி தயாரிக்கும் நம்பகமான ஓர்த்திங்டன்-சிம்ப்ஸன் பம்பு செட்டுகளையே கேட்டு வாங்குகிறார்கள்.**

ஈடு இணையற்றது என்று புகழ் பெற்ற 'மானோபிளாக்' பம்பு செட்டுகள் உட்பட பலவகை சென்ட்ரிப்யூகல் பம்புகளையும் **பெஸ்ட்** அளிக்கிறது. ஓர்த்திங்டன்-சிம்ப்ஸன் பம்பு செட்டுகள் கண்டிப்பான தரக்கட்டுப்பாட்டுடன் தயாரிக்கப்படுபவை. விற்பனைக்குப் பிறகும் சேவை செய்ய, நாடெங்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், தக்க பம்புகளை தேர்ந்தெடுப்பதற்கு ஆலோசனைகளையும் அளிக்கிறது. **பெஸ்ட்!**




**பெஸ்ட் & கம்பெனி பிரைவேட் லிட்.**

(ஸ்தாபிதம்: 1879)
13/15, நார்த் பீச் ரோடு, சென்னை-1

தமிழ் நாட்டில் கிளைகள்:

6/434, திருச்சி ரோடு, கோயமுத்தூர்
49-D, மதுரை ரோடு, திருச்சி-1.

Focus.BC, 192 Tam(a)





# மாதவரத்தில் மற்றொரு தொழிலகம்



நடத்தையில் நேர்மை, தொழில் வளர்ச்சியில் கட்டுக்கடங்காத உற்சாகம், தொழிலாளர் நலனில் அளவில்லா அக்கறை — இம்மூன்று பண்புகளையும் ஆதாரமாக வைத்து ''அமால்கமேஷன்ஸ்'' கூட்டு ஸ்தாபனத்தைத் தோற்றுவித்தார், தமிழகத் தொழில் மேதை காலஞ்சென்ற அனந்தராமகிருஷ்ணன். இருபத்தேழு தனித் தனிக் கம்பெனிகளுக்கும் அவற்றில் தொழில் புரியும் பதினெட்டாயிரம் தொழிலாளர்களுக்கும் அன்புத் தலைவராக விளங்கினார். தமிழகம் பெருமைப்பட்டது.

புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? அனந்தராமகிருஷ்ணனின் புதல்வர்கள் திரு ஏ. சிவசைலமும், திரு ஏ. கிருஷ்ணமூர்த்தியும் தந்தை காட்டிய பாதையில் அதே பண்புகளை ஆதாரமாக வைத்துத் தொழில்களை விஸ்தரிக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளார்கள். இருபத்தேழு கம்பெனிகளுடன் இருபத்தெட்டாவது கம்பெனியாக — ஆனால் தனிக் கம்பெனியாகவே — அமால்கமேஷன்ஸ்—ரெப்கோ என்ற புதிய தொழிற்சாலையைச் சென்னைக்கடுத்த மாதவரத்தில் சென்ற 28ந் தேதி சென்னை மாநில கவர்னர் உஜ்ஜல்சிங்கைக் கொண்டு தொழில் அமைச்சர் மாதவனுடைய ஆசியுடன் தொடங்கி வைத்திருக்கிறார் திரு ஏ. சிவசைலம். திரு எம். வி. வெங்கடராமனைத் தலைவராகக் கொண்டுள்ளது இக்கம்பெனி.

ரெப்கோ லிமிடெட் என்பது, பிரபல ஆஸ்திரேலியத் தொழில் ஸ்தாபனம். மோட்டார் உறுப்புக்களை உற்பத்தி செய்வதில் புகழுடன் இயங்கி வருகிறது. உறுதியான இரண்டு இரும்புக் கரங்கள் அன்புக் கரங்களாக மாறி நட்பின் சின்னமாகக் கைகுலுக்குகின்றன. ஆஸ்திரேலியாவிலிருந்து **ரெப்கோ** கம்பெனியின் தலைவர் ஸர் சார்லஸ் மெக்ராத் இதற்காகவே சென்னை வந்தார்.

புதுக் கம்பெனி, மோட்டார்களுக்கும், என்ஜின்களுக்கும் இன்றியமையாத 'க்ளட்ச்' தகடுகளும், மூடிகளும், அவற்றின் இணைப்புக்களும் இத்தொழிற்சாலையில் தயாரிக்கும். நம் நாட்டில் உள்ள எல்லாவித மோட்டார் வண்டிகளுக்கும், லாரிகளுக்கும், பண்ணை டிராக்டர்களுக்கும் இந்த உறுப்புக்கள் சம்பந்தப்பட்ட மட்டில் முழுத் தேவையையும் இந்தத் தொழிற்சாலையே பூர்த்தி செய்துவிட முடியும். உற்பத்தியின் தரத்தைப் பற்றியோ, உத்தரவாதத்தைப் பற்றியோ கேட்க வேண்டியதில்லை. 'அமால்கமேஷன்ஸ்', 'ரெப்கோ' இரண்டு பெயர்களுமே இவ்வகையில் சான்று கூறும்.

மிகப் பெரிய அளவில் முதலீடு செய்து அமைக்கப்பட்டுள்ள இந்த மாபெரும் தொழிற்சாலையில், ஆஸ்திரேலிய ஸ்தாபனத்தின் பங்கு ஏறக்குறைய பாதியாகும். ஒரு பகுதியை அமால்கமேஷன்ஸ் ஸ்தாபனம் விடுமுதல் செய்கிறது. பொதுமக்களிடமிருந்து ஒரு சிறு பகுதி மூலதனமும் வசூலிக்கப் போகிறார்கள். அமால்கமேஷன்ஸ் வரலாற்றில் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும் தறுவாயிலேயே பொதுமக்களின் கூட்டுறவை மூலதன முதலீட்டுக்குக் கோரிப் பெறுவது இதுவே முதல் தடவையாகும். அமால்கமேஷன்ஸ் ரெப்கோவின் எதிர்காலம் வளமுள்ளதாக இப்போதே காட்சி அளிக்கிறது.

சபாஷ், சிவசைலம்! சபாஷ் கிருஷ்ணமூர்த்தி! அவர்களுடைய தொழில் உற்சாகம் மேன்மேலும் வளரட்டும்.



படங்கள் :

☐ புதிய தொழிலகத்தின் உட்புற, வெளிப்புறத் தோற்றங்கள்.

☐ திரு சிவசைலம்.

☐ ஸர் சார்லஸ் மெக்ராத்.

# க்யூபாவிலும் பரமஹம்சர்!

தற்போது ஜப்பானிலும் தூரக் கிழக்கு நாடுகளிலும் நமது ஆன்மீகத்தைப் பிரசாரம் செய்து வருகிறார் ஸ்வாமி ரங்கநாதாநந்தர்



அமெரிக்காவில் நமது ஆன்மீகத்தைச் சிறப்புறப் பிரசாரம் செய்த ஸ்வாமி ரங்கநாதாநந்தர் அவர்கள், ஜப்பானிலும், தூரக் கிழக்கு நாடுகளிலும் இப்பணியைத் தொடர்ந்து ஆற்றுகிறார். ஜாகர்தாவிலிருந்து டோக்கியோவுக்கு விமானத்தில் செல்லுகையில் அவர் எழுதியுள்ள கடிதத்தில் சில பகுதிகள் :


"லத்தீன் அமெரிக்காவில், என் பிரசங்கப் பயணம் வெற்றிகரமாக நிறைவேறியது. க்யூபாவுக்கும் சென்றிருந்தேன். நமது தூதராலயம் என் உரைகளை ஏற்பாடு செய்யவும், என்னைக் கவனித்துக் கொள்ளவும் அங்குள்ள அரசாங்கத்தின் மூலம் உதவி புரிந்தது. இந்திய தத்துவ சாஸ்திரங்களிலும் ஹிந்து மதத்திலும் லத்தீன் அமெரிக்க மக்களுக்கு உள்ள ஆர்வத்தை வருணித்து முடியாது. சர்வகலாசாலைகளிலும், பொது அரங்குகளிலும் நிகழ்ந்த உரைகளுக்கெல்லாம் உற்சாகம் மிகுந்த மக்கள் திரளாகக் குழுமினர். ஸ்பானிஷ் மொழியிலும், போர்த்துகீசிய மொழியிலும் ஒவ்வொரு வாக்கியத்தையும் மொழி பெயர்க்கச் செய்து ஆர்வத்துடன் கேட்டனர். அநேகமாக இந்நாடுகள் யாவற்றிலுமே மொழிபெயர்ப்பாளருக்கு உரையின் விஷயம் புதிதானது. ஆனால் அவர்கள் மொழிபெயர்க்கும் போதே விஷயத்தில் காதல் கொண்டு விட்டனர்! மெக்ஸிகோ நகரத்தில் மொழி பெயர்த்தவர், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரிடமும் வேதாந்தத்திலும் தமது குடும்பத்தோடு ஒரேயடியாக ஈர்க்கப்பட்டு விட்டார்! தமது மனைவியுடனும் மூன்று புதல்விகளுடனும் சேர்ந்து ஒரு ராமகிருஷ்ண வேதாந்த சங்கமும் அமைத்துவிட்டார். இதில் இருபது பேர் அங்கத்தினராயுள்ளனர். அனைவரும் மெக்ஸிகோ இனத்தவர்.

சிகாகோவில் செப்டம்பர் 21ந் தேதி பிரிவுப் பிரசங்கம் நிகழ்த்தி அமெரிக்கப் பயணத்தில் என் மனத்தில் பதிந்த விஷயங்களை விளக்கினேன். பிறகு டல்லாஸ், வான்கூவர், ஸியாட்டில் ஆகியவற்றில் சுற்றுப் பிரயாணம் செய்து, அக்டோபர் முதல் தேதி ஹானலுலுவுக்குப் புறப்பட்டேன். இங்கிருந்து மூன்று மாதங்களில் பதினொரு நாடுகளுக்குச் சென்று இந்தியா திரும்ப உத்தேசம். இதுவரை ஹானலுலு, பிஜி, நியூஸிலாந்து, ஆஸ்திரேலியா, இந்தோனேஷியா ஆகிய நாடுகளில் சுற்றுப் பயணம் நிகழ்த்திவிட்டு, இப்போது டோக்கியோ போய்க் கொண்டிருக்கிறேன்.

இந்தோனேஷியாவில் குறிப்பிட வேண்டிய விஷயம், உதயனா சர்வகலாசாலையிலும், பாலி ஹிந்து பரிஷத்திலும் நிகழ்த்திய உரைகள். இந்தோனேஷியாவில் தம்மை இந்துக்களாகக் கருதும் முப்பது லட்சம் பேர்களில் பெரும்பாலோர் பாலியில்தான் உள்ளனர். நமது புராதனப் பண்பையும், சமயத்தையும் விடாதிருக்க இவர்கள் அரும்பாடுபடுகின்றனர். இந்தோனேஷிய மொழியில் பெயர்க்கப்பட்டுள்ள கீதைக்கு ஜனாதிபதி சுகர்னோவும், சேனாதிபதி நாசுஷனும் முன்னுரை தந்திருப்பது குறிப்பிடத் தக்கது."

## டிரைவரைக் காக்கும் பலூன்!

அமெரிக்கக் கார்களில் ஒரு புதிய ஏற்பாடு!



கார் மோதிக் கொண்டால் டிரைவர் முன்னுக்குத் தள்ளப்பட்டு உயிர் ஆபத்து ஏற்படாமல் இருக்க அமெரிக்கக் கார்களில் ஓர் புதிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கார் மோதியதும் டிரைவருக்கு எதிரிலிருந்து ஒரு பலூன் தானாகப் பருத்துக் கொண்டே வந்து டிரைவருக்கும் கண்ணாடிக்கும் இடையில் உள்ள இடைவெளியை அடைத்து விடுகிறது. டிரைவருக்குக் காயம் ஏற்படாமல் இந்தக் காற்றுப் பை காப்பாற்றுகிறது. கார் மோதிய அரை விநாடியில் இவ்வளவும் நடந்து விடுகிறது. மணிக்கு எட்டு மைலுக்குக் குறைவாகப் போகும் கார் மோதினால் இந்தப் பலூன் வேலை செய்யாது.

— நியூஸ் வீக் – முத்து


ஒளிவீசுவோரின் மதிப்பு-
ஸன்லைட் தரும் சிறப்பு
ஸன்லைட் சலவையின்
ஒளியே ஒளி. மற்ற சோப்புக்களைவிட
தூய்மையிற் சிறந்தது ஸன்லைட்
SUNLIGHT
Soap

## அத்தியாயம் 12

# வாக்குவாதம்

“குட் நைட் வேணு!'' என்று கூறி டெலிபோனை வைத்தான் குணசீலன்.

குளித்து விட்டுச் சரியாக எட்டு மணிக்குச் சாப்பாட்டு மேஜை அருகே வந்த சாருலதா, ''டெலிபோனில் யார்? வேணுகோபாலா?'' என்றாள்.

''ஆமாம்.''

''என்ன சொல்லுகிறார்?''

''இருதய மாற்று ஆபரேஷன்தான் இதுவரை வெற்றிகரமாக நடந்திருக்கிறதாம். மூளை மாற்று ஆபரேஷனைப் பரீட்சார்த்தமாக மிருகங்களிடம் கூட நடத்திப் பார்க்க டாக்டர்கள் யாரும் இதுவரை முன்வரவில்லையாம்.''

''அதனால்?''

''அப்படி ஏதாவது ஓர் அற்புதம் நிகழ்ந்தால் அப்போதுதான் உன் மனத்தை மாற்றுவதென்பது சாத்தியமாகக் கூடும் என்கிறார்.''

பெருமாள் சாப்பிட உட்கார்ந்தார். முத்து சுடச் சுட எடுத்து வந்த முதல் சப்பாத்தி அவர் தட்டில்தான் விழுந்தது. மேஜையின் மேல் சூடாக வைக்கப்பட்டிருந்த கூட்டை எடுத்து அப்பாவுக்குப் பரிமாறிவிட்டு அமர்ந்தாள் சாருலதா.

''இதற்கு அவரைப் போய்க் கேட்பானேன்? என்னைக் கேட்டிருந்தால் நானே சொல்லி யிருப்பேனே?'' என்றாள்.

''உன்னைத்தான் கேட்க நினைத்தேன். நீ குளிக்கப் போயிருப்பதாகச் சொன்னார்கள். அதற்குள் ஆவலை அடக்க முடியாமல் ஃபோன் செய்துவிட்டேன்.''

வியப்பினை முகத்தில் தேக்கி சாரு அவனைப் பார்த்தாள். ''அப்படி என்ன திடீரென்று ஆவல் பிய்த்துக் கொண்டு கிளம்பியது உனக்கு?'' உணவுடன் உரையாடல் கலந்தது.

''ராமலிங்கம் வீட்டுக்குப் போயிருந்தேன்.''

''நான்கூட சாயங்காலம் போய் விட்டு வந்தேன். அதைச் சொல்லத்தான் ஆர்வமும் ஆசையுமாக வந்தேன், அதற்குள் பேச்சு திசை மாறிவிட்டது. அவர்கள் ரொம்பச் சந்தோஷத்தோடு கல்யாண ஏற்பாட்டுக்கு ஒப்புக் கொண்டார்கள். நாள் பார்க்கச் சொல்லிவிட்டு வந்தேன்.''

''அக்கா! இந்தக் கல்யாணம் நடக்காது, என்று ஏற்கனவே உனக்குப் பல தடவை சொல்லி யிருக்கிறேன். அப்படி யிருந்தும் நீ ஏன் அங்கு போனாய்? என் மானத்தை வாங்கவா?''

''இல்லை குணு! உன் மானத்தைக் காப்பாற்றத்தான்! அவர்கள் ஒருவேளை என்னிடம் உள்ள பணத்துக்கு ஆசைப் பட்டுப் பெண் கொடுக்கப் போகிறார்களோ என்ற கவலையில் நானே சொல்லி விட்டேன்: — 'என் தம்பி ஒரு மாதிரி, என்னிடமிருந்து சல்லிக் காசு வாங்க மாட்டான். என்னுடைய அந்தஸ்துக்குப் பழுதில்லாதபடி கல்யாணத்தை விமரிசையாக நடத்தி விடுகிறேன்.



## சாருலதா

### கி.ராஜேந்திரன்

அப்புறம் குடும்ப பாரத்தை உத்தேசித்து அவன் சம்மதித்தால் நல்ல உத்தியோகம் போட்டுத் தருகிறேன். அநேகமாக அவன் அதற்கு இசைய மாட்டான். இப்போது உள்ள வேலையும் சம்பாத்தியமும்தான் நிலைக்கும் அவனுக்கு' என்று சொன்னேன். அவர்கள் கூறிய பதில் எனக்கு ரொம்பப் பெருமையாக இருந்தது குணு! 'குண

சீலன் என்கிற பெயருக்கு ஏற்ப அவர் நடந்துகொள்கிறார். அதற்காகத்தான் எங்கள் பெண்ணைக் கொடுக்கிறோம்' என்றார்கள்.''

''அதை மட்டும்தான் சொன்னார்களா? கமலாவின் கல்யாணம் பற்றி அவர்கள் கவலையோடு பேச்செடுக்கிற போதெல்லாம் என் அக்காவின் கல்யாணத்திலும் எனக்குப் பொறுப்பு உண்டு என்று சதா நினைவு படுத்திக் கொண்டே இருந்தார்களே அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையா?''

''என் கல்யாணம் நடந்த பிறகுதானே கமலாவின் கல்யாணம் நடக்க முடியும் என்ற எண்ணத்தில் அப்படிச் சொல்லியிருப்பார்கள். மற்றப்படி என்னைப் பற்றி அவர்களுக்கு என்ன அக்கறை வந்துவிடப் போகிறது?''

''அதற்குள்ளே அந்தப் பெண் அவசரப்பட்டு நீ கொடுத்துவிட்டு வந்த புடவையை உடுத்திக் கொண்டு விட்டாள். ராமலிங்கமோ என்னை 'மாப்பிள்ளை' என்று கூப்பிடும் அளவுக்கே போய் விட்டார். என் அபிப்பிராயம் அவர்களுக்கு நன்றாகத் தெரிந்திருந்தும் இப்படிச் செய்தார்கள்!''

''அவர்கள் பேரில் தப்பில்லை குணா! ராமலிங்கம் என் கல்யாணத்தைப் பற்றிப் பேச்செடுக்காமல் இல்லை. தயக்கத்துடன் ஆரம்பித்த அவரைத் தொடக்கத்திலேயே அடக்கி விட்டேன். உங்கள் பெண்ணுடைய எதிர்காலத்தைப் பற்றி யோசனை பண்ணுங்கள். குணசீலன் என் சொல்லைத் தட்ட மாட்டான் என்றேன்.''

''அவர்கள் ஆசையை நீ இப்படி வளர்க்கலாமா?''

''அவர்கள் ஆசை மட்டுமில்லை குணா! என்னுடைய ஆசையும் அதுதான். அப்பாவின் விருப்பமும் அப்படித்தான். அப்பாவின் சம்மதத்துடன்தான் நான் ராமலிங்கம் வீட்டுக்குப் போனேன்.''

''என்னுடைய ஆசையைப் பற்றி யாருக்குமே கவலை இல்லையா?''

''உன் ஆசை என்ன, சொல்லு! அமர்க்களமான கல்யாணமா? அடக்கமான கல்யாணமா? எப்படி நடக்க வேண்டும்? அடக்க



மாக இருக்க வேண்டும் என்றால் திருப்பதியில் முடித்துக் கொண்டு வந்து அபட்ஸ்பரியில் எல்லாரையும் கூப்பிட்டு ரிஸெப்ஷன் வைத்து விடலாம்.''

''அக்கா! ஏன் என்னை இப்படி வதைக்கிறாய்? நீ தழையத் தழையத் தாலியைக் கட்டிக் கொண்டு இந்தக் கல்யாணத்தை நடத்தி வைத்தால் நான் வேண்டாம் என்பேனா? உன்னை இந்த நிலையில் வைத்துவிட்டு...''

''எனக்குத்தான் ஏற்கனவே திருமணமாகி விட்டதே, குணா? உனக்குத் தெரியாதா?''என்றாள் சாருலதா. வயிற்றில் பலமாகக் குத்தப்பட்டதுபோல விசுக்கென்று ஒரு வித வேதனையுடன் நிமிர்ந்தான் குணசீலன். ஒரு விநாடிப் போதில் பெருமாளுக்குக் கண் கலங்கி விட்டது.

''ஐ ஆம் வெடட் டு சாருலதா என்டர்பிரைஸஸ்!'' என்று கூறிச் சிரித்தாள் அவள். ''தாலி கட்டாத கணவனாக மிஸ்டர் பிஸினஸ்ஸை ஏற்றுக் கொண்டு அவருக்காக உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணித்திருக்கிறேனே!'' — அவள் சிரிப்புத் தொடர்ந்தது.

''சாரு ஐ ஆம் ஸீரியஸ்!'' குணசீலனின் குரல் உயர்ந்தது.

''நானும் ரொம்ப சீரியஸாகத்தான் பேசுகிறேன், குணா! கல்யாணமாகாத வரை நீ இப்படித்தான் என்னைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பாய். குடும்பப் பொறுப்பு என்று ஏற்பட்டு விட்டால் எல்லாம் சரியாகி விடும். அப்புறம் நீயாகவே என்னிடம் வந்து 'ஒரு கௌரவமான உத்தியோகமாகக் கொடு சாரு' என்பாய்.''



''பிதற்றல்!'' என்றான் குணசீலன். அவன் கண்கள் சிவந்தன. ''நீ பிச்சை போடவா நான் காத்திருக்கிறேன்!''

சாருலதாவுக்கும் கோபம் வந்தது. உரக்கவே பேசினாள்: ''குணா! கடைசி தடவையாகச் சொல்கிறேன். என்னை உத்தேசித்து நீ கல்யாணம் செய்து கொள்ளாமல் இருக்காதே. அப்படி ஒரு தயக்கம் யாருக்குமே இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் நானே போய்க் கல்யாணம் பேசிவிட்டு வந்தேன். உன் அசட்டுப் பிடிவாதம் நீடித்தால் ஒரு பாபமும் அறியாத கமலாவின் எதிர்காலம் குட்டிச்சுவராகி விடும். அதை நான் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது! இந்தக் குடும்பத்துக்கு இன்று நான் தான் தலைவி. நான் சொல்கிறபடி நீ கேட்டுத்தான் ஆகவேண்டும்!''

உணவு பிடிக்காமல் உதறிவிட்டு எழுந்தான் குணசீலன். ''உனக்குப் பணிந்து நடக்க நான் தயாராக இல்லாத போது நான் இந்த வீட்டில் இருந்து கொண்டிருப்பதில் அர்த்தமில்லை, சாரு. ஒரு தனி அறை வாடகைக்குக் கிடைக்கும்வரை ஓட்டலில் இருந்து கொள்கிறேன், எல்லாருக்கும் நிம்மதி!''

மேற்கொண்டு யாரும் எதுவும் பேச முற்படு முன்னர் சாப்பாட்டு மேஜை மீதே ஒரு பக்கமாக இருந்த டெலிபோன் மணி ஒலித்தது. ரிஸீவரை எடுத்து ''எஸ்'' என்றான் குணசீலன். பிறகு, ''உனக்குத்தான்'' என்று கூறி டெலிபோனைச் சாருலதா அருகே எடுத்து வைத்துவிட்டுக் கைகழுவப் போனான்.

சாருலதா ஃபோனில் பேசினாள்: ''சாரு ஹியர்!... எஸ், சாரங்கன்.. என்ன விஷயம்?... என்ன, காலமாயிட்டாரா? நிஜமாகவா?... எப்போ?...''

அவள் முகம் வெளிறியது. பெருமாள் திகைப்பும் பரிவுமாக மகளின் தோளை ஆதரவுடன் அணைத்தார்.

## அத்தியாயம் 13

# அரும்பும் காதல்

**கா**லை ஒன்பதரை மணி. சாருலதா வருவதற்கு இன்னும் கால் மணி நேரம் இருந்தது. லில்லியின் எதிரே நின்று கழுத்தில் 'டை'யின் முடிச்சைச் சரி செய்து கொண்டான் சாரங்கன்.

''ஹாய்! லில்லி! ஹௌ இஸ் தி சார்மிங் லிட்டில் கேர்ல் திஸ் மார்னிங்?''

''வணக்கம் ஐயா நலமாக இருக்கிறேன். தங்களது அன்பும் பரிவும் நிரம்பிய விசாரணைக்கு நன்றி!''

''அடேடே! லில்லிக்குத் தமிழ் கூடப் பேச வருகிறதே!''

''பிறந்தது தமிழராய்; வாழ்வது தமிழ் நாட்டில்; ஆள்வது தமிழக அரசு. ஆக பேசுவது தமிழாக இருந்தால் திகைப்பது ஏன்?''

''லில்லி! லில்லி! கொஞ்சம் இரு! எனக்குத் தலையைச் சுற்றுகிறது!'' தடுமாறுவது போல் நடித்து மேஜையை ஆதரவுக்குப் பற்றிக் கொண்டான் சாரங்கன். ஆனால் அவனுக்கு உண்மையிலேயே வியப்பாகத்தான் இருந்தது.

''ஓர் ஆங்கிலோ இந்தியப் பெண்மணி இத்தனை அழகாகத் தமிழ் பேசுவாள் என்று யார்தான் எதிர்பார்ப்பார்கள்?''

''ஆங்கிலோ இந்தியளா? அனந்த கிருஷ்ணன் மகள் நான்!''

''அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சியா? ஐயோ! என்னால் தாங்க முடியாது! ஹார்ட் வீக்!'' என்று சொல்லி நெஞ்சைப் பிடித்துக் கொண்டான் அவன்.

லில்லி பயந்தே போய்விட்டாள். ஓடிவந்து அவனை ஆதரவாகப் பற்றி அருகில் இருந்த நாற்காலியில் உட்காரவைத்தாள். ''தண்ணீர் கொண்டு வரட்டுமா? என்ன செய்கிறது உடம்பை?'' என்று கலவரத்துடன் கேட்டாள்.

''இதென்ன கஞ்சத்தனமான உபசாரம்? காப்பி கொண்டு வரட்டுமா என்று கேட்கக் கூடாதா?''

''நடித்தீர்களா? அழகுதான். ஆபீசுக்கு வந்து இதென்ன நாடகம்?''

''ஹ! நீ ஆங்கிலோ இந்தியப் பெண் போல் வேஷம் போடலாம். நான் மட்டும் நடிக்கக் கூடாதோ?''

''அதுவா? நான் ஒற்றைப் பின்னலும் பன்னிரண்டு முழப் புடவையுமாகத்தான் வந்தேன். ஆனால் ரிஸப்ஷனிஸ்ட் என்றால் அதற்கென்று ஒரு தனிக் கோலம் தேவை என்று சாரு சொல்லி என் தோற்றத்தை மாற்றி விட்டாள். அஜந்தா கொண்டையும் டெர்ரிகாட் ஸாரியுமாகக் கொஞ்ச நாள் இருந்தேன். அஜந்தா கொண்டை ரொம்ப வேலை வாங்கியது. அது பணம் படைத்த, நேரத்தை விணடிக்கத் தயாராக உள்ள பெண்களுக்குத்தான் லாயக்கு என்று முடிவு செய்து 'ஹேர் டு'வை மாற்றி விட்டேன். அந்த அளவுக்குப் போன பிறகு ஸ்கர்ட்

உங்கள் ஊகம் சரிதானா?

வலது பக்கத்தில் உள்ள ராஜாராணி ஓவியம்தான், போட்டியில் முதல் பரிசு பெற்ற படம்! -பாபு

அண்ட் பிளவுஸூம் கௌனும் அணியப் பழகுவது சிரமமாக இல்லை.''

''அடடா! ரொம்பத் தப்புப் பண்ணிட்டே! நம்மவங்களுக்கு இழைய இழையத் தலை வாரிப் பின்னி முழம் பூவையாவது வைத்துக் கொண்டால் தான் அழகு!''

''சாயங்கால நேரத்திலே அந்தக் கோலம்தான்!''

''அதெப்படி முடியும்? நீதான் முடியை வெட்டி விட்டாயே?''

''சீச்சீ! முடியை வெட்டுவதா? இது விலைக்கு வாங்கியது'' என்று கேசத்தைத் தட்டிக் காட்டினாள் லில்லி.

'' 'விக்'கா?'' என்று வாயைப் பிளந்த சாரங்கன், ''லில்லி! எனக்கு இப்போ நிஜமாகவே காப்பி வேணும்; வா, காண்டீனுக்கு!'' என்றான்.

''சாரு வரும் நேரமாகிவிட்டதே!''

''அவள் ஒன்பதே முக்காலுக்கு வந்தாலும் பத்து மணிக்கு நாம் நம் 'ஸீட்'டில் இருக்க வேண்டும் என்ற அளவுக்குத்தான் எதிர்பார்ப்பாள்.''

இரண்டு கரங்களில் இரு காப்பிக் கோப்பைகளை வாங்கிக் கொண்ட சாரங்கன், லில்லி உட்கார்ந்திருந்த மூலைக்குச் சென்றான். காப்பியை மேஜை மேல் வைத்து விட்டு, ''அப்போ உன் பெயர் லில்லியாக இருக்க நியாயம் இல்லையே?'' என்றான்.

''சாரு என்னைச் செல்லமாக லில்லி என்று கூப்பிட ஆரம்பித்தாள். அதுவே நிலைத்து விட்டது. வீட்டிலே லலிதா தான். அப்பா மட்டும் 'லல்லூ' என்று கூப்பிடுவார்!''

''லல்லூ! லல்லூ! சகிக்கலையே! லில்லியே தேவலாம்! அதெப்படி நீ இங்கே வந்து மாட்டிக் கொண்டாய், லில்லி?''

''அப்பா பள்ளிக்கூடத்தில் கணக்கு வாத்தியார். வருமானம் போதவில்லை. அண்ணாவுக்குக் கல்யாணமாகி விட்டது. அவன் குடும்பத்துக்கே அவன் சம்பாத்தியம் சரியாகப் போய்விடுகிறது. அதனால் நான் தமிழ் ஆசிரியையாக வேலை பார்த்தேன்...''

''என்ன வேலை பார்த்தாய்?''

''வித்வான் பரீட்சை எழுதிப் பாஸ் செய்திருக்கிறேன். ஆனால் தமிழ் ஆசிரியைக்கு என்ன கொடுத்துவிடப் போகிறார்கள்? இப்போது கிடைக்கும் சம்பளத்தில் பாதிகூட இல்லை. 'அம்மாவுக்கு உடம்பு சரியில்லை. ஏழைகளுக்கு வரக் கூடாத வியாதிகளெல்லாம் வந்து விட்டது. ஏகச் செலவு, கடன்... போர் அடிக்கிறேனா?''

''இல்லை, சொல்லு!''

''வரவேற்பாளர் தேவை என்று விளம்பரம் வந்தது. அதிக வருமானத்தை உத்தேசித்து மனுச் செய்தேன். இன்டர்வியூவுக்கு என்னையும் சேர்த்துப் பத்துப் பேர் வந்திருந்தார்கள். அவர்களில் நான்தான் சிறந்த அழகி என்பதால் சாரு என்னைத் தேர்ந்தெடுத்தாள்.''

''அழகுப் போட்டியே நடந்திருக்கிறது! மிஸ் மெட்ராஸா நீ?''

''ஏறக்குறைய அப்படித்தான்.''

''ரிஸப்ஷனிஸ்டாக இருப்பதற்கு அழகு மட்டும் போதுமாக்கும்!''

''சாருவின் சாமர்த்தியத்தைக் குறைத்து மதிப்பிடாதீர்கள்! வித்வான் பரீட்சை தேறியிருப்பதால் எனக்கு அறிவும் திறமையும் உண்டு என்று கணக்குப் போட்டாள். 'அந்தத் திறமை இதுவரை ஒரு துறையில் செயல்பட்டது. இனி வேறு ஒரு துறையில் செயல்படப் போகிறது' என்றாள். நல்லதொரு வரவேற்பாளராக விளங்க எனக்குப் பயிற்சி அளித்தாள். கான்வெண்டில் தினம் மூன்று மணி நேரம் ஆங்கிலப் பாடம்; இன்ஸ்டிடியூட்டில் இரண்டு மணி நேரம் டைப்ரைட்டிங். டெலிபோன் ஸ்விட்ச் போர்டை இயக்கும் விதத்தையும் புரிந்து கொண்டேன். இப்போ நான் ரிஸப்ஷனிஸ்ட், கம் டெலிபோன் ஆபரேட்டர், கம் டைப்பிஸ்ட். சும்மா கதைப் புத்தகம் படித்துக் கொண்டு உட்கார்ந்திருக்க முடியாது.''

''நீ உரு மாறியது இருக்கட்டும்; உன்னை உருமாற்றியவளை நினைத்தால் இன்னும் ஆச்சரியமாக இருக்கிறது. சாரு என்ன படித்திருக்கிறாள்? உனக்குத் தெரியுமா?''

''அவளைப் பற்றி யாருக்குமே அதிகமாக ஒன்றும் தெரியவில்லை. ஆனால் ஒன்று; அவள் அனுபவக் கல்லூரியில் முன்னேற்றப் படிப்பில் முதல் வகுப்பில் தேறியிருக்கிறாள்!''

''பிரமாதமாகப் புகழ்கிறாயே! பெண்ணுக்குப் பெண் விட்டுக்கொடுப்பாயா!''

''பாராட்டினால் இப்படிச் சொல்லுவீர்கள். குறைவாகப் பேசினால் பொறாமை என்பீர்கள்!''

''படித்துப் பட்டம் பெறுவதற்கும் வாழ்க்கையில் முன்னேறுவதற்கும் சம்பந்தம் இல்லைதான்.''

''சாரு பட்டம் பெற்றதாகத் தெரியவில்லையே தவிர காமன் ஸென்ஸ்


சக்திக்கும்
மகிழ்ச்சிக்கும்
அவர்களுக்குத்
தேவை
பிரிட்டானியா க்ளுகோஸ்
மில்க் பிஸ்கட்டுகள்
உங்கள் சுறுசுறுப்பான குழந்தைகளுக்குத் தேவையான அதிக போஷாக்கை பிரிட்டானியா க்ளுகோஸ் மில்க் பிஸ்கட்டுகள் மூலம் அளியுங்கள். நல்ல திடத்திற்குத் தேவையான புரதச் சத்து நிறைந்த இந்த பிஸ்கட்டுகள் அவர்களுக்குச் சக்தியையும் மகிழ்ச்சியையும் நல்கும்.
பிரிட்டானியா
என்றாலே உயர்தரம்
BRITANNIA
GLUCOSE
Milk BISCUITS
BBC-8615

ரொம்ப அதிகம். ஒரிரு சந்தர்ப்பங்களில் இன்ஜினியர் கைலாசம் அவள் கூறும் யோசனையைக் கேட்டுப் பிரமித்திருக்கிறார். மற்ற துறைகளிலும் கூட இப்படித்தான். ஒரு நாளைக்கு எத்தனை டெலிபோன்கள்! 'சாரு! அதற்கு உன் உதவி தேவை; சாரு! இதற்கு என்ன செய்யலாம்? சாரு! இந்தச் சிக்கலைத் தீர்க்க வழி என்ன?' ........''

''படிப்பிலும் ஒன்றும் குறைச்சல் இல்லையே? ஃபிரெஞ்சும் ஜெர்மனும் இப்போது கற்றுக் கொண்டு வருகிறாள் போலிருக்கிறதே!''

''ஆமாம். என்னிடம் தமிழை முறையாகப் பயிலப் போவதாகக்கூடச் சொல்லி யிருக்கிறாள்'' என்றான் வில்லி சற்றுப் பெருமிதத்துடன். ''நான் இங்கு வந்த புதிதில் கான்வெண்டில் அவளும் தினமும் ஒரு மணி நேரம் ஆங்கில டியூஷன் எடுத்துக் கொண்டாள். முக்கியமாகச் சரியான உச்சரிப்புடன் அந்த மொழியைச் சரளமாகப் பேசக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பாள்.''

''ஆமாம், பல அயல்நாட்டவருடன் பழக நேர்கிறதல்லவா.''

''அதோடு அவளே இரண்டுதடவை மேல் நாடுகளுக்குப் போய் வந்திருக்கிறாளே, பிஸினஸ் சம்பந்தமாக.''

''அபூர்வமான, அதிசயமான பெண்.''

''அவளுடைய சூத்திரம் என்ன தெரியுமா? திறமை+ஊக்கம்=சாதனை!''

''ஃபார்முலாவுக்கு விளக்கம்தேவை!''

''திறமை எத்தனையோ பேரிடம் இருக்கிறது. பயன்படுத்துவாரின்றி மங்கி மழுங்கிப் போகிறது. ஆனால் திறமையைக் கண்டுபிடித்துப் பயன்படுத்திக் கொள்ளும் ஆற்றல் அவளிடம் இருக்கிறது. திறமையை வளர்க்கும்போது அந்த வளர்ச்சியுடன் சேர்ந்து தானும் வளரலாம், வாழ்க்கையில் உயரலாம் என்ற ரகசியத்தைப் புரிந்து கொண்டிருக்கிறாள் சாரு. இதுதான் அவள் வெற்றியின் அடிப்படை!''

''தெரியுமே! என்னை டீ எஸ்டேட்டிலிருந்து இங்கே கொண்டு வந்தாளே! என் திறமையை உணராமலா?''


இந்தத் தற்பெருமையைக் கவனிக்காதவள் போல் வில்லி தொடர்ந்தான்: ''தன்னிடம் இல்லாத தகுதிகளைப் பணம் கொடுத்து அவள் பெறுகிறாள். முதல் தரமான நபர்களுக்கு அள்ளிக் கொடுக்க அவள் தயங்குவதே இல்லை.''

''கவனித்தேன். சாருலதா இன்ஜினீரிங்கில் வெவ்வேறு துறைகளைச் சேர்ந்த எட்டு இன்ஜினீர்கள் இருக்கிறார்களே!''

''எல்லோரையும் கசக்கிப் பிழிந்து வேலை வாங்கி விடுகிறாள்.''

## சுடுங்கள் : கவலையில்லை!

சினிமாக்களில் வில்லன் கதாநாயகியைக் காரிலே கடத்திச் செல்வான். அப்போது கதாநாயகன் வில்லன் காரின் டயரைப் பார்த்துச் சுடுவான். டயர் வெடிக்கும்! கார் நிற்கும்!



ஆனால் இப்போது துப்பாக்கியால் சுட்டாலும் வெடிக்காத டயர்களை குட் இயர் (Good Year) கம்பெனியார் உருவாக்கியுள்ளனர். இந்தப் புதிய டயர்கள் ஆணிகள் குத்தினாலும் வெடிக்காது!

ஆதாரம்: 'சையன்ஸ் டுடே'
அனுப்பியவர்: 'பன்னீர்'

---

''அதைச் சொல்லு! நேற்று டெலிபோனில் சாருலதா ஸிமெண்ட்ஸ் கோபால் ராவிடம், 'ஐ டோண்ட் வாண்ட் எக்ஸ்பிளனேஷன்ஸ்! ஐ வாண்ட் ரிஸல்ட்ஸ்!' என்று கத்தினாள், பாரு. எனக்கே வெலவெலத்து விட்டது.''

''வில்லி கைக்கடிகாரத்தைப் பார்த்தாள். நேரமாகிறது, போகலாமா?''

''காப்பி வாங்கிக் கொடுத்தேனே, தாங்க்ஸ் கிடையாதா?'' என்றான் சாரங்கன், அவளைப் பின்தொடர்ந்து நடந்தபடியே.

''இந்தக் காப்பியைச் சாப்பிட்டதற்கு எனக்கு நீங்கள் தாங்க்ஸ் சொல்ல வேண்டும்!''

''இந்தக் காப்பி மோசம் என்று சொல்வதானால் உன் வீட்டுக் காப்பியை ருசித்துப் பார்த்துவிட்டல்லவா சொல்ல வேண்டும்?''

''என் வீட்டுக்கு வர நீங்களே உங்களுக்கு அழைப்பிதழ் வழங்கிக் கொண்டு விட்டீர்கள்!''

''அதை நீ பிடுங்கிக் கொண்டுவிடப் போவதில்லையே?''

''திடுதிப்பென்று என்னைத் தேடிக் கொண்டு வந்து நிற்காதீர்கள். அப்பாவும் அம்மாவும் பயந்து விடுவார்கள். அவர்களைத் தயார்ப்படுத்தி விட்டுச் சொல்கிறேன்.''

வில்லி டெலிபோன் ஸ்விட்ச் போர்ட் அருகே அமர்ந்தாள். அது 'கொர் கொர்' என்று ஒலி எழுப்பியது.

''குட் மார்னிங்! சாருலதா என்டர்பிரைஸஸ்!'' — வில்லி கடமையில் ஆழ்ந்து போனாள்.

திருகுப்பூவுடன் கூடிய ஒற்றைப்பின்னலும் ஆறு கஜப் புடவையுமாக அவளைக் கற்பனை செய்து பார்த்தான் சாரங்கன், ஒரு நிமிஷம். பிறகு தன் அலுவல்களைக் கவனிக்க நடந்தான். **(தொடரும்)**

சிறப்புச் சிறுகதை

# ஆத்ம சமர்ப்பணம்

கு. வேங்கடரமணி



**ப**கல் மெதுவாய் நழுவிக் கொண்டிருந்தது. பங்குனி மாதத்து வெய்யிலின் வெம்மை அடங்கி, இனிமையும் தண்மையுமாய்க் குழைந்த மாலைக் காற்று தவழ்ந்து வரத் தொடங்கி விட்டது.


காவிரியில் நீர் வற்றி, மணல் பரவிக் கிடக்கிறது. உள்ளத்துக்கு இதமாய் ஒரு நினைப்பை அந்த மணல் தனக்குள் புதைத்து வைத்துக் கொண்டிருந்தது. கனவாகிப் போன பழைய நாட்கள் நெஞ்சில் தளும்பி வரும்போது, சோகத்தில் புதைந்து கிடந்தாலும் கற்பனையில்

மீண்டும் அந்த நாட்களுக்கே போய் விடுவது போன்ற ஒரு பிரமையில் — அந்த நினைப்பின் ஏக்கமே ஆத்மாவைத் தீண்டிச் சிலிர்க்க வைக்கும் இன்பமாய் மனவெளியில் மணக்கிறது. நீரின் சுழிப்பும் வேகமும் இப்பொழுது இல்லை. ஆனால் மறைவாய் உள்ளே கசிந்து கொண்டுதான் இருக்கிறது.

கும்பகோணத்தில், கோடைக்காலத்தில் காவிரியின் மணல் விரிப்புத்தான் பலருக்கு மாலை வேளையின் காற்று மேடை. சிறு சிறு கும்பல்களாய் ஆங்காங்கே பல ரகங்கள் கூடியிருந்தன. எல்லாம் சர்வ சாதாரணமான நித்திய வாழ்வின் சின்னச் செய்திகளைத்தான் அசை போட்டுக் கொண்டிருந்தன.

மேற்கே செம்மை சாய்கோணத்தில் பார்வையைப் பறித்தது. கூர்ந்து அ-





நோக்கும்போது நெஞ்சிலும் அந்தப் பிழம்பு வந்து விழுந்தது.

கும்பேசுவரன் கோவிலில் வெள்ளிக்கிழமை சாயங்கால தரிசனத்தை முடித்துக் கொண்டு திரும்பிய இரு பெண்கள் நடந்து நடந்து நடந்து களைத்த கால்கள் மணலில் புதையப் புதையப் பழம் பாலத்தின் கீழே புகுந்து நடந்தார்கள்.

மீனலோசனி சற்றைக் கொரு தடவை திரும்பி, அந்த மேல் வானத்தின் செம்மையைப் பார்த்துக் கொண்டே நடந்தாள். தினமும் கீழ்த் திசையிலிருந்து இப்படித்தான் ஒளிப் பிழம்பு மேற்கே போய்க் கொண்டிருக்கிறதோ?

அவளுடைய மென்மையான வெளிர் உள்ளங்கால்கள் சிலிர்ப்பில் தோய்கின்றன. கசகசவென்று சுகம். ஈரம் கசிகிறது.

கூட வரும் விஜயத்துக்கு நாழிகையாகி விட்டதே என்ற அவசரம்.

''என்ன மீனு! நானும் வீட்டிலிருந்து புறப்பட்டது முதல் பார்த்துக் கொண்டேதான் இருக்கிறேன். 'உம் உம்' என்று ஞாபகமெல்லாம் எங்கோ மிதக்கிறது போல் பதில் சொல்கிறாய். என்ன வந்துவிட்டது உனக்கு?'' என்று கேட்டாள் விஜயம்.

''உம்.... என்ன கேட்டாய் விஜயம்? எனக்கா? எனக்கு என்ன வந்துவிட்டது? ஒண்ணுமில்லையே?''

''அங்கே போய் உட்கார்ந்து பேசுவோமே!'' என்று தனியாய் ஓர் இடத்தைக் கண்டுபிடித்து, உடலைத் தளரவிட்டு அந்த இடத்தில் போய் உட்கார்ந்தாள் விஜயம்.

மீனலோசனி இப்போதுதான் விழிப்புற்றவள் போல் சுற்றிலும் ஒரு முறை பார்த்துவிட்டுத் தோழியின் பக்கத்தில் அமர்ந்து கொண்டாள்.

''மீனு!''

மறுபடியும் பழைய 'உம்'தான் வந்தது அவளிடமிருந்து.

விஜயம் அந்த மாலைச் செவ்வொளியில் தன் தோழியைப் பற்றி மனத்திலே திடீரென்று குவிந்த சிந்தனைகளோடு அவளையே மௌனமாகச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இருபத்தி மூன்று வயதுப் பெண்ணை மீனலோசனி வெடவெடவென்று நல்ல உயரந்தான். இப்பொழுது இரு கைகளையும் கோர்த்துக் கால்களை அணைத்தபடி உட்கார்ந்திருக்கும் நிலையில்கூட அந்த உயரம் தெரிகிறது. வசதியான குடும்பத்தில் பிறந்து, கவலையே தெரியாமல் வளர்ந்திருந்தால் மீனு எப்படி இருப்பாள் என்று விஜயம் விநாடி நேரம் கற்பனை செய்து கொண்டாள். அப்படி இருந்திருந்தால்....

மீனு இந்த நேரத்தில் இங்கே உட்கார்ந்திருக்க மாட்டாள். அவளுக்கு எப்போதோ 'ஒரு வழி' பிறந்திருக்கும். திருமணம் என்ற பிணைப்பும் வாழ்வின் புதிய பாதையும் அவளை எங்கோ அழைத்துப் போயிருக்கும். விதவைத் தாய், நோயாளிச் சகோதரன்

இவர்களோடு தேவைகளைச் சுருக்கிக்கொள்ள வேண்டிய வருமானமும் சேர்ந்து அவளைச் சோதித்துக் கொண்டிருக்காது.

ஆனால் மீனா களைத்துச் சளைத்துப் போய் விடவில்லை. இசை என்னும் பரம்பரைச் செல்வம் பல தலைமுறைகளாய் அதற்காகவே அர்ப்பணம் செய்து கொண்டதால் அவளுக்கு அழியாத ஆத்ம பலத்தைக் கொடுத்திருக்கிறது.

மீனா இப்போதும் அழகாகத்தான் இருக்கிறாள். மாலை வெய்யிலோடு அவளுடைய முகமும் கைகளும் நீண்ட நீண்ட விரல்களும் போட்டியிட்டுத் தங்கமாய் மின்னுகின்றன. அந்த விரல்கள்! மீனா வீணையை மீட்டும் போது அலை வரிசைகளாய் அவை சஞ்சரிப்பதைக் கண்டு பரவசமடைந்திருக்கிறாள் விஜயம்.

மேல் வானச் செம்மை அவர்களின் மௌனத்திலே கழிந்த சில நிமிஷங்களிலேயே இன்னும் விலகி விலகி ஓடிப் புதைய ஆரம்பித்துவிட்டது.

"மீனா!" என்று மீண்டும் அழைத்தாள் விஜயம்.

இருவருமே நினைவின் பாதி வழியிலிருந்து அவசரமாய் மீண்டனர்.

"என் விஜயம்?" என்று கேட்டாள் மீனா. குரலைச் சாதாரணமாய் மாற்றிக்கொள்ள முயன்று கொண்டே எண்ணங்களின் தீவிரமான ஆட்சியிலிருந்து விடுபடுவதற்காகத்தான் அவள் விஜயத்தையும் அழைத்துக் கொண்டு இங்கே வந்தாள்.

"மீனா! உனக்கு என்ன வந்து விட்டது இன்றைக்கு?"

"எனக்கா?"

மீனா அர்த்தமில்லாமல் தன்னையே ஒரு தடவை பார்த்துக் கொண்டாள். எனக்கு என்ன வந்து விட்டது? நேற்றைப் போலத்தான் இன்றும் இன்றைப் போலத்தான் நாளையும். இத்தனை நாளும் எதுவும் வந்து விடவில்லை. இனிமேலும் எதுவும் வந்துவிடப் போகிறதில்லை. அம்மா வருஷக் கணக்காய் எனக்குக் கல்யாணம் ஆகவேண்டுமே என்று புலம்பிக் கொண்டிருந்தாள். அப்புறம் அவள் வாய்கூட அடைத்துப் போய்விட்டது. அது மறந்துபோன அல்லது மறந்துபோய்விட வேண்டிய விஷயம் போலாகி விட்டது. இனிமேல் எனக்கு எதுவுமே வந்துவிடப் போகிறதில்லை.

ஆனால் அவளுடைய தம்பி சங்கரனுக்கு? காலையில் அவன் சொன்ன வார்த்தைகளை அப்படியே ஒரு தடவை தனக்குள் சொல்லிப் பார்த்துக் கொண்டாள் மீனா.

"விஜயம், எனக்கு எதுவும் வந்துவிடவில்லை. சங்கரனுக்குத்தான்... அவன் ஏதோ சொன்னான். அதுதான் என்னை உலுக்கிக் கொண்டே இருக்கு."

"அவனுக்குத்தான் உடம்பு தேவலை, பத்து நாளாய் எழுந்து நடமாடுகிறான் என்று சொன்னாயே மீனா?"

"அப்படித்தான் அம்மாவும் நானும் நினைத்துக் கொண்டிருந்தோம். ஆனால் அவன் திடீரென்று சொன்ன சேதி என்னைக் கலங்க வைத்துவிட்டது விஜயம்! அவனுக்கு நம்பிக்கை இல்லையாம். முடிவு நெருங்கி வருகிற மாதிரி பிரமையாயிருக்கிறதாம்."

அவளுடைய இமைகள் நனைந்து ஒட்டிக் கொண்டு விட்டன. மீனா தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டாள். "ஆனால் அப்போது அம்மா பக்கத்தில் இல்லை" என்று தன்னையே தேற்றிக் கொள்வது போல் சொல்லிக் கொண்டாள்.

விஜயத்துக்கும் அந்த வார்த்தைகள் அதிர்ச்சியாய் இருந்தன.

"அப்படியெல்லாம் இருக்காது மீனா! சங்கரனுக்கு இன்னும் இருபது முடியவில்லை. மனசுக்குள் ரொம்பப் பயந்து போயிருப்பான். அவ்வளவுதான். நீயும் கலங்கிப் போயிடாதே."

"இல்லவே இல்லை விஜயம். அவன் எவ்வளவு சாதாரணமாய் இதைச் சொன்னான் தெரியுமா? சொல்லி விட்டுக் கவலையே இல்லாமல் உட்கார்ந்திருக்கிறான். அவன் முகத்தில் பயமே இல்லை. நான்தான் தவியாய்த் தவிக்கிறேன். அப்பா உயிரை விடும் போது — அந்தக் கடைசி நிமிஷத்தில் — சொன்னது இப்போது ஞாபகம் வருகிறது 'சங்கரா! உன்னை நீ இந்த இசைக்கே அர்ப்பணம் செய்து கொள்ள வேண்டும். உன் விரல்களின் வழியாய் இந்த வீணை இதயங்களைத் தெய்விகமாய் மாற்றுகிற இசையாய்ப் பொழியணும். நான் பாதியிலே விட்டுவிட்டுப் போகிறேன்' என்று சொன்னார். சங்கரனுக்கு அப்போது பதினொரு வயதுதான். அவனுக்குப் புரிந்திருக்குமோ என்னமோ?"

கூடத்தில் வரிசையாய்ப் படங்கள். நடுவில் அவர் பாடிப் பாடி, வீணையின் மீட்டலில் கொஞ்சிக் கொஞ்சி உருவாக்கிய அவருடைய ஆராதனைத் தெய்வம். ஒவ்வொரு படத்திலும் வாழ்வையே இசைத் தவமாய் மாற்றிக் கொண்ட மகான்கள். கீழே உறையிட்ட வீணை வைக்கப் பட்டிருக்கிறது. அப்பா அந்த நேரத்திலும் அம்மாளை ஏதோ ஒரு கீர்த்தனையை வாசிக்கச் சொல்லுகிறார். அம்மாவுக்கு அழுகை வந்து அடைக்கிறது.

'அசடே! அழியாததை அந்தத் தெய்வத்திடமிருந்து பெற்றுக் கொண்டு உனக்கு அழத் தோன்றுகிறதே?'

அப்பா கடைசியாகக் கேட்டது இது. அம்மா குடத்து விளக்காய் இருந்தாள். ஆனால் அப்பாவின் அத்தனை ஞானத்துக்கும் இணையும் துணையுமாய்த்தான் இருந்தாள்.

நம்பிக்கை மலர்ச்சியாய் இழைய, அப்பா அவ்விறுதியிலும் சிரித்துக்கொண்டிருந்தார்.

இப்பொழுதும் கண் முன் வந்து நிற்கிறது அந்தக் காட்சி.

"போகலாமா மீனா?" என்று கேட்டாள் விஜயம்.

"உம்..."

"மறுபடி அந்த 'உம்'தானா? இன்றைக்கு என்ன மௌன லயிப்புத்தான் உனக்கு?"

"விஜயம்! அம்மாவிடம் வீணை கற்றுக் கொண்ட இரண்டு பெண்கள் வெளியூருக்குப் போய்விட்டார்கள். இனிமேல், அடுத்த மாசம் முதல் கொஞ்சம் சிரமமாய்த்தான் இருக்கும்."

"இவ்வளவுதானே? இதற்காகக் கவலைப் படவேண்டாம். உன் அம்மாவிடம் வீணை

கற்றுக் கொள்ள எவ்வளவோ பேர் காத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் அப்பாவிடம் சொல்லுகிறேன். அவர் ஏற்பாடு பண்ணுவார்.''

மீனலோசனி தலையை ஆட்டினாள். விஜயமும் அவன் அப்பாவும் செய்திருக்கிற உதவிகள், அந்தச் சந்தர்ப்பங்கள் இவைகளை யெல்லாம் நினைத்துக் கொண்டால் நன்றியை மௌன வெளியீடாய்க் காட்டிக் கொள்வதைத் தவிர வேறு வழி ஏது?

அப்பா போகும்போது மிச்சம் வைத்து விட்டுப் போனது ஒரு வீடுதான். ஆனால் எங்கிருந்தோ, யார் யாரோ அவருடைய மரணத்தில் காட்டிய உருக்கத்தைப் பார்த்த போது, அவர் நிறையச் சாதனைகளைத் தேடி வைத்து விட்டுப் போயிருக்கிறார் என்று புரிந்து கொண்டாள் மீனு. ஒரு கலைஞனுக்கு இருக்க வேண்டிய தைரியம் அலட்சியம் இரண்டோடும் வாழ்ந்து விட்டுப் போய் விட்டார் அவர்.

விஜயமும் அவன் அப்பாவும்தான் அந்த நேரத்தில் துணையும் தைரியமுமாய் இருந்தார்கள். தெய்வ சந்நிதியில் உறைக்குள் தவம் கிடந்த வீணையைப் பார்க்கவே தயங்கினாள் மீனலோசனி. விஜயம் அந்த நடுக்கத்தையும் பயத்தையும் கலைத்தான்.

'இதுதான் உன்னுடைய அப்பாவின் புனித நினைவை நீ போற்றுகிற லட்சணமா?' என்று கேட்டான் அவன்.

மீனு சின்னஞ் சிறிய வயதிலேயே அப்பாவின் பக்கத்தில் அமர்ந்து அவர் ஓய்ந்திருக்கும் வேளையில் அந்த வீணையை மீட்ட ஆரம்பித்து விட்டாள். அப்பா அவளையே ஆழ்ந்து நோக்கினார் வெகு நேரம். 'என் மீனுக் கண்ணு' என்று இழுத்து மடியில் உட்கார்த்திக் கொண்டார்.

அன்றுதான் அவளுடைய முதல் பாடம் தொடங்கிற்று. ஆனால் அதற்கு முன் பார்த்துப் பார்த்து, கேட்டுக் கேட்டு உள் விழுக்கும் சுவாசத்துடனேயே கலந்து வந்து இதயம் முழுவதும் பரவி விட்டது போல அந்த மீட்டொலிகள் அவளுள் நிரம்பிப் போயிருந்தன.

நாலைந்து வருஷங்களுக்குப் பிறகு தம்பி சங்கரன் அவளுக்குப் பக்கத்தில் வந்து அமர்ந்து கொண்டான். அப்போதும் அவனுக்குப் பூஞ்சையான உடம்பு. ஆனால் அவனுக்குள் ஒரு குரல் 'சீக்கிரம் சீக்கிரம்' என்று சொல்லிக் கொண்டிருந்தது போலும்.

சங்கரன் துடியாய் இருந்தான். தேர்ச்சியில் அவன் காட்டிய வேகம் அசாதாரணமானது தாவித் தாவி அவன் முன்னால் போனான். இப்பொழுதும் மூச்சு விடத் திணறிக் கொண்டு படுக்கையில் புரளும் நேரத்தில் அவன் வீணையில் வெற்றிகரமாய் ஒரு பிடியை எட்டிவிடும்போது அவன் முகம் சுடராய் ஒளிரும். அவன் எங்காவது கொஞ்சம் தடுமாறித் தளர்ந்து விட்டால் வேதனையோடு கனிப்பான்.

'அப்பா உன்னிடம் வைத்த நம்பிக்கை பொய் இல்லேயடா சங்கரா! நீ ஞானத்திலே நிமிர்ந்து நிற்கிறாய்; ஆனால் தெய்வம் உன்னை ஏன் இப்படி வஞ்சித்துப் படுக்கையில் தள்ளி விட்டதோ?' என்று வேதனை விரக்தியாய் மாறத் தனக்குள் புலம்புவாள் மீனு.

இருவரும் மறுபடியும் ஆற்று மணலில் புதையப் புதைய நடந்து பாலத்தைக் கடந்து வீட்டுக்குத் திரும்பினார்கள்.

விஜயத்திடம் விடை பெற்றுக் கொண்டு பக்தபுரித் தெருவில் நடுவே தனித்திருப்பது போல் காணப்பட்ட தன் வீட்டுக்குள் — இன்னமும் மாறாமல் இருக்கும் பழைய ஓட்டு வீடு அது — நுழைந்தாள் மீனலோசனி.

அடுத்த நாள் காலையிலேயே விஜயம் வந்துவிட்டான். அவன் முகமும் கண்களும் ஏதோ ஒரு புதிய செய்தியைச் சொல்லத் துடித்தன.

''வா, விஜயம்!''

மீனுவின் அம்மா சங்கரனுக்குக் கஞ்சியுடன் வந்தவள் அவனுடைய முகத்தின் பிரதிபலிப்பைப் பார்த்துவிட்டு நின்றாள்.

''என்னடி விஜயம்?'' என்று கேட்டாள் மீனு.

''உம்...''

''என்ன உம்?''

''சங்கரன் எப்படி இருக்கிறான்?''

'எப்போதும் போலத்தான்' என்று சொல்ல நினைத்த அம்மா, சங்கரன் அறைக்குள் விழித்துக் கொண்டு படுத்திருக்கிறான் என்ற ஞாபகம் வந்ததும் ''கொஞ்சம் தேவலை'' என்றாள்.

மூவரும் அறைக்குள் போனார்கள். சங்கரன் நிமிர்ந்து, சாய்ந்து உட்கார்ந்து கொண்டான்.

சில விநாடிகளின் மௌனத்துக்குப் பிறகு ''நான் புதிய சேதி ஒன்றைச் சொல்லத்தான் வந்திருக்கிறேன். நீங்க எல்லாம் எதிர்பார்த்திருக்க மாட்டீர்கள்'' என்று சொல்லிவிட்டு



''இப்பொழுதுதானே சற்று முன் உங்கள் நண்பருடன் வந்து காப்பி சாப்பிட்டு விட்டுப் போனீர்கள்! மறுபடியும் வந்து விட்டீர்களே!''

''அப்பொழுது அவனுக்காக நான் 'பில்' அழ வேண்டி இருந்தது! இப்போ கொண்டா நாலு இட்லி, மசாலா தோசை, உப்புமா, போண்டா!''



## பணம் வசூலிக்க....

'காரனெட்'

— மீராகோபாலன்.

ஒரு கம்பெனியிலிருந்து ஒரு நபருக்கு நோட்டீஸ் வந்தது: "இது இரண்டாவது நோட்டீஸ்". பணம் கட்டத் தவறினால் என்ன நடக்கும் என்று ஒரு பட்டியலும் தரப்பட்டிருந்தது. அதைக் கண்ட அந்த நபர் அலறி அடித்துக் கொண்டு பணம் கட்டினார். கம்பெனிக்காரரிடம், "எனக்கு முதல் நோட்டீஸ் வரவில்லை; வந்திருந்தால் அப்பொழுதே கட்டி விருப்பேன்" என்றார். அவர் போன பிறகு கம்பெனிக்காரர் தன் உதவியாளரிடம் சொன்னார்: "பார், முதல் நோட்டீஸ் அனுப்பாமலே இரண்டாம் நோட்டீஸ் என்றவுடன் பணம் தன்னாலே வருகிறது!"

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

மூன்று பேர்களுடைய முகங்களையும் பார்த்தான் விஜயம்.

சங்கரின் களைப்புற்ற கண்களில் கூட ஆர்வம் மிதந்து வந்தது.

"ஓர் இளைஞர் உங்களிடம் வீணை கற்றுக் கொள்ள ஆசைப்படுகிறார். அதற்காக ஆயிரக் கணக்கான மைல்களைத் தாண்டி வரத் துடித்துக் கொண்டிருக்கிறார். அவருக்கு நம்ம சங்கீதத்திலே அவ்வளவு ஆசை. அதுவும் வீணையிலே மனசைப் பறிகொடுத்தவர்."

மீனுவிடம் பரபரப்பைத் தூண்டிவிட்டது இந்தச் செய்தி.

"நிஜம்மாவா விஜயம்?"

"பின்னே பொய்யா? இதோ இன்றைக்குத்தான் அப்பாவுக்குத் தபால் வந்தது. பட்டணத்திலே இருந்து அவர் நண்பர் எழுதியிருக்கிறார்."

சங்கரன் பெருமையோடு அந்தப் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

"அவர் யார், எந்த ஊர் என்று சொல்லவில்லையே?" என்று கேட்டான் அவன்.

"நியூயார்க் நகரத்திலே கால்கேட் சர்வகலாசாலையிலே வில்லியம் ஸ்கெல்டன் என்று ஓர் இசைப் பேராசிரியர். அவருடைய மாணவர் இவர். பெயர் ஜீன் பீட்டர்ஸன்."

"அமெரிக்காவிலே இருந்தா?"

"ஸ்கெல்டன் அமெரிக்காவைச் சேர்ந்தவர்தான் மீனு! ஆனால் அவர் நம்ம நாட்டுக்கு எத்தனையோ தடவைகள் வந்திருக்கிறார். மேல் நாட்டு இசையிலே பெரிய வித்வான். கர்நாடக சங்கீதத்திலே மனத்தைப் பறி கொடுத்தவர்."

எல்லாரும் கொஞ்ச நேரம் எதுவும் சொல்லத் தோன்றாமல் தங்களுக்குள்ளேயே இனி இனியாய்ப் பிரியும் எண்ணங்களிலும் சிந்தனைகளிலும் ஆழ்ந்து போயிருந்தனர்.

மீனுவால் இன்னமும் அந்தப் புதிய செய்தியை முழுதுமாய் மனத்திலே ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

"நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் மாமி?"

"நானா? உடனே எனக்கு என்ன சொல்லுகிறது என்று தெரியவில்லையே!"

"அவசரமில்லை மாமி. மெதுவாய் ஒரு வாரம் கழித்துச் சொல்லுங்களேன்."

"அது சரி விஜயம்! வெளி நாட்டிலிருந்து வருகிறவர், பட்டணத்திலே வசதியாய் காலேஜ் எல்லாம் இருக்கு. எத்தனையோ வித்வான்களும் இருக்கிறார்களே? அதை விட்டு இங்கெல்லாம் ஏன் வரணும்?"

"அதுதான் மாமி விசேஷம். போன வருஷம் ஸ்கெல்டன் தியாகராஜ ஸ்வாமி ஆராதனைக்கு வந்திருந்தார். சமாதியிலே நம்ம மீனு வீணை வாசித்ததைக் கேட்டிருக்கிறார். ஒலிப்பதிவு செய்துகொண்டு போயிருக்கிறார். அப்போதே அவளைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொண்டாராம். அவள் அப்பாவின் பெருமையை யெல்லாம் கேள்விப் பட்டாராம்."

மீனுவின் தாயின் நினைப்பு உடனே கூடத்துக்கு ஓடியது. தன் கணவர் — அந்த லட்சிய உபாசகர் — இன்னமும் இங்கே இசை உருவாய் வாழ்வதாய்ப் பிரமை கொண்டு மானசீகமாய் அஞ்சலி செய்தாள்.

ஆனாலும் அவளுக்கு அதிசயமாக இருந்தது. இசையின் அழியாத மகா சக்தியா? ரஸனை என்னும் அற்புதத் தன்மையின் பெருமையா?

"பாஷை தெரியாதே என்று யோசிக்க வேண்டாம் மாமி. மீனுதான் படித்துப் பட்டமும் வாங்கி இருக்கிறாள். அதோடு பீட்டர்ஸன் ஒரு வருஷமாய்த் தமிழ் கற்றுக் கொள்கிறாராம்!"

சங்கரனின் கண்கள் விரிந்தன. 'ஏ அப்பா! எத்தனை தீவிரமான முன்னேற்பாடுகள்!'

"சங்கரா! நீ என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டான் விஜயம்.

"எனக்கு இப்போதே அவரைப் பார்க்க வேண்டும் போல் இருக்கிறது."

"ஸ்கெல்டனும் தன் மாணவனிடம் இப்படிப்பட்ட ஆவலைத்தான் தூண்டி விட்டிருக்கிறார்." என்று பீட்டர்ஸனைப் பற்றி எழுதப்பட்ட குறிப்பை எடுத்துக் கொடுத்தான் விஜயம். சங்கரன் அதைப் படித்து விட்டு ஒரு நிமிஷம் தன் நோயையும் ஓய்ந்து விட்ட உடலையும் மறந்து பரவசப்பட்டான். மீனு அதை வாங்கிப் படித்து அம்மாவுக்கு விளக்கமாய்ச் சொன்னாள்.

"அம்மா! அவர் எப்படியும் இங்கே வரப் போகிறார். நீ அவரை மாணவராய் ஏற்றுக் கொள்ளாவிட்டால் பிறகு வேறே இடம் பார்க்கப் போகிறாராம்."

"இருக்கட்டும். இன்று வெள்ளிக்கிழமை. சாயங்காலம் மீனு விளக்கேற்றி வைத்து விட்டு வீணை வாசிப்பாள். அதுதான் நான் என் கவலையையும் சந்தேகத்தையும் தீர்த்துக்கொள்ளுகிற நேரம். நாளைக்கு முடிவாய்ச் சொல்லி விடுகிறேன்" என்று சொன்னாள் மீனுவின் அம்மா.

மீனு?

அந்த இருபத்தி மூன்று வயதுப் பெண்—தன் நினைப்புக்களை யெல்லாம் பூரணமாய்

# இருமலா?

# க்ளைகோடின்

## சாப்பிட்டதும் போய்விட்டதே!



சற்று முன்புதான் அவள் இருமலால் தவித்துக் கொண்டிருந்தாள் என்றால் நம்புவீர்களா? பிறகு க்ளைகோடின் சாப்பிட்டாள். க்ளைகோடின் அவள் இருமலை வெகுசீக்கிரம் பூரணமாக நிறுத்திவிட்டது.

**பூரண இருமல் கட்டுப்பாட்டுக்கு க்ளைகோடினுக்கு இணை எதுவுமில்லை!**



அவளுடைய கடுமையான இருமலை க்ளைகோடின் வெகுசீக்கிரம், பரிபூரணமாக நிறுத்தியது.

- **மூளையில்**—இருமல் கேந்திரத்தைக் கட்டுப்படுத்துகிறது
- **தொண்டையில்**—சளி அடைப்பை அகற்றி எரிச்சலைச் சமனப்படுத்துகிறது
- **மார்பில்**—இறுகிய தசைநார்களுக்கு இதமளித்து சுலபமாக சுவாசிக்க உதவுகிறது
- **நுரையீரல்களில்**—அடைத்துக் கொண்டிருக்கும் கோழையைத் தளர்த்தி சளியை வெளியேற்றுகிறது



# க்ளைகோடின்

**டெர்ப் வசாகா**

இருமல்களுக்கு, மிக அதிகமாக விற்பனையாகும் நம்பகமான வீட்டு நிவாரணி


Alembic

everest/659c/ACW/tm

# உட்புறங்களுக்கும், வெளிப்புறங்களுக்கும் ஈடிணையற்ற அழகிற்கும், நிரந்தரத்தன்மைக்கும்...

**சில்விக்ரீட்**

ஏஸிஸி வெள்ளை சிமெண்ட்



**சில்விக்ரீட் ஏஸிஸி** வெள்ளை சிமென்டை சுவர்களின் பாணிகளிலும், வண்ணங்களிலும் அமைத்துக் கொள்ளலாம்; அதைக் கொண்டு டெகோரேடிவ் பேனல்களையும், டைல் அல்லது டெர்ராஸோ தரைகளையும், ஜாலிகளையும், கொடிவிடுகளையும் சுலபமாக அமைத்துக் கொள்ளலாம்.

அசல் போர்ட்லாந்து சிமென்டின் உறுதியும், நீடித்து நிற்கும் தன்மையும் உடையதாக இருப்பதனால், அது நிரந்தரமானதாக விளங்குகிறது.

**சில்விக்ரீட்** எவ்வளவு வேண்டுமானாலும், அருகிலுள்ள சிமென்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆஃப் இந்தியா லிமிடெட் கிளையிலோ, அவர்களுடைய விநியோகஸ்தர்களிடமோ கிடைக்கிறது.

**ஸ்னோஸெம்** மற்றும் **கலர்க்ரீட்டின்** தயாரிப்பில் மூலப் பொருளாக இருப்பது **சில்விக்ரீட்.**

**ஏஸிஸி** தரத்தில் உயர்ந்த தயாரிப்புகளுக்கு நீங்கள் பெறும் உத்தரவாதம்

**தி அஸோஸியேடட் சிமெண்ட் கம்பெனீஸ் லிமிடெட்.**

(தி சிமென்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆஃப் இந்தியா லிமிடெட்)

வெளியிட்டுவிடும் பழக்க மில்லாத ஒருத்தி— என்ன நினைத்தான்?

விஜயம் வீட்டுக்குத் திரும்பி விட்டாள்.

ஆனால் எங்கோ அமெரிக்க நாட்டில் எட்டாத தொலைவில் வாழும் பீட்டர்ஸன் என்ற இளைஞனின் உருவம் அப்போதே பல விதக் கற்பனைகளாய், அதிசயம் மாதிரி அந்த வீட்டில் உருவெடுத்து நின்றுவிட்டது.

மாலையில் கூடத்தில் அமர்ந்திருந்த மீனுவின் தாயின் உள்ளத்தில் ஓடிய எண்ணங்கள்—

'அவர் வரட்டும். இந்தச் சந்நிதியிலே வந்து நிற்கட்டும். அவர் மனதிலே இந்தத் தெய்விகத்தின் பிரதிபலிப்பு இருந்தால் நான் ஒப்புக் கொள்ளுகிறேன்.

'சங்கீதத்துக்கு தேசமும் பாஷையும் ஏது? அது எல்லாவற்றைத் தாண்டிப் போன மகா பிரபஞ்சம். அதுவே ஒரு ஆத்ம பாஷை.

'அது மனசையே சமர்ப்பிக்கிற சாதனை. கேட்கிறவர்களுடைய மனசைக் கூட அர்ப்பணம் செய்ய வைக்கும் அது...'

சரியாய் ஒரு மாதத்துக்குப் பிறகு ஒரு நாள். வாசலில் குதிரை வண்டி வந்து நின்றது.

விஜயம் குதித்துக் கொண்டு உள்ளே வந்தாள்.

''மாமி! அப்பாவும் அவரும் வந்தாச்சு!''

மீனு அறையிலிருந்து எழுந்து வந்தாள். சங்கரன் மருந்து சாப்பிட்டு விட்டு அப்பொழுதுதான் கொஞ்சம் அயர்ந்திருந்தான்.

நல்ல உயரம் — மனத்தில் நிரம்பி வழியும் லட்சியத்தைப் போல. அகன்ற நெற்றியின் கீழே கண்கள் — சிறிய கண்கள்தான் அவை— அன்பையும் பரிவையும் தமக்குள் தேக்கி வைத்துக் கொண்டிருந்தன.

''இவர்தான் மிஸ்டர் 'பீட்டர்ஸன்'' என்றார் விஜயத்தின் அப்பா.

கரம் குவித்தான் அந்த அமெரிக்க இளைஞன். மெல்லிய ஜிப்பாவும், தட்டுச் சுற்று வேஷ்டியுமாய் அவன் ''நமஸ்காரம்!' என்றதும், மீனுவுக்கு அப்பொழுதே ஆயிரக் கணக்கான மைல்களைக் கடந்து வந்திருக்கும் அவனிடம் வெற்றியின் நம்பிக்கையும் ஆர்வத்தின் அடக்கமும் கலந்திருப்பது 'பளிச்' சென்று தெரிந்தது.

''மிக்க-சந்தோஷம்'' என்று சொல்லிக் கொண்டே முன்புற அறையில் அவர்களை அமரச் செய்தாள் மீனு. அவளிடம் திடீரென்று தோன்றிய படபடப்பு அடங்கிய பிறகு அவள் மெதுவாய் மீண்டும் பீட்டர்ஸனைப் பார்த்தாள். அப்போது அவனும் கூட அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான். பரிவை எதிர் நோக்கும் நிர்மலமான பார்வை.

மீனு தன் தாயை அழைத்துக் கொண்டு வந்தாள். விஜயம்தான் அறிமுகம் செய்து வைக்க ஆரம்பித்தாள்.

''இந்த அம்மான்தான். இவர்தான் நீங்கள் தேடி வந்திருக்கும் குரு.''

பீட்டர்ஸன் எழுந்து நின்று ''தயவுசெய்து என்னையும் உங்கள் இசைக் குடும்பத்திலே ஒருவனாய் ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டான்.

அந்த விநாடியே குருவின் ஆசி அவனுக்குக் கிட்டிவிட்டது.

விஜயம் சொன்னாள்; ''மீனுவும் உங்களுக்கு உதவியாய் இருப்பாள். அதனால் நீங்கள் சீக்கிரமாகவே தேர்ச்சி பெற்று விடலாம்.''

நன்றிப் பெருக்கோடு மீனுவைப் பார்த்தான் பீட்டர்ஸன்.

அந்தக் கூடத்தில் ஊதுவத்தியின் மணத்தோடு தெய்விகமும் கமழ்ந்தது. தன்மையோடு அசையாது நின்ற குத்துவிளக்கின் சுடர் முகம் இசையின் ஆத்ம ஸ்வரூபமாய் ஒளிர்ந்தது.

மீனுதான் குருவின் ஆசியை வேண்டி ஒரு சுலோகம் பாடினாள். பிறகு வீணையை எடுத்துத் தாயிடம் கொடுத்தாள்.

''ராமா!''

வீணையில் மெதுவாக ராகம் பிறந்தது. கதன குதூகலம்!

சங்கரன் சுவரில் சாய்ந்தபடி உட்கார்ந்திருந்தான். அவனுடைய கண்கள் மெள்ள மூடிக் கொண்டன.

'ரகு வம்ச ஸுதா...'

நேரம் தன் ஓட்டத்தைத் தானே அறியாதது போல் நழுவிக் கொண்டிருந்தது. பரவசத்தில் ஆழ்ந்து போய் விட்டது அந்தக் கூடம்.

திடீரென நினைவு பெற்று சங்கரனின் பக்கம் திரும்பிப் பார்த்தாள் மீனலோசனி. அவனது மூடின கண்களில் இமைக் கோடியில் நீர் முத்துக்கள் இரண்டு நின்றன.

அவளுடைய இதயம் ஏக்கத்தால் நிரம்பிப் போயிற்று.

'சங்கரா! அப்பாவுக்குப் பிறகு இந்தக் கூடத்தில் — தெய்வ சந்நிதியில் நீ நாத வெள்ளத்தை நிறைக்கத் துடிக்கிறாய்....'

அவளும் தனக்குள் துடித்தாள். சங்கரனுக்கு உடம்பு சீக்கிரம் குணமடைந்துவிட வேண்டும். அவன்... அவன்...

''மீனு! அவரை மீட்டச் சொல்லு. நீயே கூட இருந்து.''

ஒன்று, இரண்டு...

'ட்டிரிங்... ட்டிரிங்ங்...'.

பக்கத்தில் அமர்ந்து மீனுவும் வீணையில் விரல்களைப் பதித்தாள்.

விளக்கில் ஒரு சுடர் தெறித்தது. அவளுக்கு நெஞ்சிலிருந்து ஏதோ நழுவுவது போல் இருந்தது. அந்த ஏக்கம் — சற்று முன்னால் நெஞ்சில் வந்து நிரம்பியது — இன்னும் கனமாகித் தன்னை அழுத்துவது போலிருந்தது.

அவள் எப்படியோ அதன் கனத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு நகர்ந்து உட்கார்ந்தாள்.

சங்கரன் இன்னமும் அப்படியே அசைவற்றிருந்தான் — கன்னங்களில் கோடாய் இறங்கியிருந்த கவடுகளைக் கூட அழித்துக் கொள்ளும் பிரக்ஞை இல்லாமல்.

...ராமா! இவன்... இவன்... இங்கே உன் எதிரில் தன் இசையால் அழியாத விநாடிகளைப் படைக்க வேண்டும்...

**(அடுத்த இதழில் முடியும்)**



# காணாமல் போன

**எ**ன்றும் இல்லாத திருநாளாக, அன்று நீதி மன்றத்தில் ஒரே கூட்டம். முண்டாசு கட்டி நின்ற வீரப்பனைப் பார்த்து, ''என்ன ஐயா, இன்னிக்கு இவ்வளவு கூட்டம்? கோர்ட்டில் என்ன வழக்கு ஐயா நடந்துகொண்டிருக்கிறது?'' என்று கேட்டேன்.

''பணம் காசு திருட்டுப் போகும், கேள்விப்பட்டிருக்கிறோம். நகை நட்டு திருட்டுப் போகும், கேள்விப்பட்டிருக்கிறோம். எங்கேயாவது கிணறு திருட்டுப் போய்க் கேள்விப்பட்டிருக்கிறீயா ஐயா, நீ?'' என்று திருப்பிக் கேட்டான் அவன்.

''என்ன திருட்டு?''

''கிணற்றுத் திருட்டு!...ஊரில் ஒரு கிணறு திருட்டுப் போயிருக்கிறது, ஐயா! வயற்காட்டிலே விவசாயத்துக்காக வெட்டுகிறார்களே, அந்தக் கிணறு!''

'அப்படியானால் இது கட்டாயம் ஒரு விந்தை வழக்குத்தான். உள்ளே போய்ப் பார்த்து வர வேண்டியதுதான்!'

இப்படி ஓர் எண்ணம் என்னை உந்தித் தள்ளவே, கூட்டத்தைக் கிழித்துக்கொண்டு நீதிமன்றத்தின் தலைவாசலுக்குச் சென்றேன்.

உள்ளே ஒரே கூட்டம். ஒரு தனி இடத்தில் பெஞ்சுகளிலும் நாற்காலிகளிலும், வட்டத்தைச் சேர்ந்த பெரிய மனிதர்கள், விவசாயத் துறை அதிகாரிகள், தாசில்தார்கள், வட்டார அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள், கூட்டுறவு பாங்கி மானேஜர் — என்று பலர் தங்கள் தங்களுக்கு ஏற்ற ஆசனங்களில் அமர்ந்திருந்தார்கள். நானும் ஒரு பக்கமாய் உட்கார்ந்து வழக்கைக் கவனிக்கலானேன்.

நீதிபதியின் முகம் எப்படி இருக்கவேண்டுமோ, அப்படி இருந்தது; ஒருவித உணர்ச்சி மாற்றமும் இன்றி. சாட்சிக் கூண்டில் ஒரு முண்டாசுக்காரன் நின்று கொண்டிருந்தான். ஆனால் உடை — அணியைக் கொண்டு அவனை முற்றிலும் நாட்டானாக எடை போட முடியவில்லை. துறுதுறுப்பான முகம் படைத்த அவன் கையில் ஒரு 'அட்டாச்சி கேஸ்' நவநாகரிகமாகக் காட்சி அளித்தது. சினிமா கொட்டகைக்குக் கொஞ்சம் காலம் தாழ்த்திச் சென்றால், படம் எப்பொழுது ஆரம்பமாயிற்று, எவ்வளவு ஓடியிருக்கிறது என்று பக்கத்து சீட்டில் உட்கார்ந்திருப்பவரைப் பார்த்து மெல்லிய குரலில் கேட்கிறோம் அல்லவா? அதுபோல அருகில் உட்கார்ந்திருந்த ஒரு காந்தி குல்லாக்காரரைப் பார்த்துக் கேட்டேன்.

''வழக்குத் தொடங்கி எத்தனை நேரம் ஆகிறது?''

அவர் வாய் திறந்து பதில் சொல்லவில்லை. மோட்டார் காரின் ஹார்ன் அடிப்பது போலக் கையால் அபிநயம் பிடித்து 'ஐந்து நிமிஷம் ஆகிறது' என்றார்.

'நல்லவேளை! ரொம்ப நேரம் ஆகிவிடவில்லை' என்று ஆறுதல் அடைந்தேன். 'கடவுள் சாட்சியாக நான் கூறுவது உண்மை; உண்மை தவிர வேறில்லை' என்ற சம்பிரதாயச் சடங்குதான் முடிந்திருந்தது என்பதும் நீதிபதியின் பேச்சைக் கொண்டு தெரிய வந்தது.

வெகு மிடுக்காகக் கூண்டில் நின்று கொண்டிருந்த முண்டாசுக்காரனைப் பார்த்து நீதிபதி கூறினார். கூறினார் என்று கூறுவது கூடத் தவறு. தம் கையில் எழுதி வைத்திருந்த காகிதத்தைப் பார்த்துப் படித்துக் கொண்டிருந்தார்:

''வெண்ணிலம் வட்டம், சோத்துக்குடியில் வாழும் ராமய்யன்....

''சர்வே நம்பர் 420. சோத்துக்குடியில் உள்ள உமது வயலில் கிணறு திருட்டுப் போய்விட்டதாக மனுவில் கூறியுள்ளீர். கிணறு திருட்டுப் போவது என்பது நம்ப முடியாத விஷயம். ஆதலால் உமது கூற்று மோசடி, அபத்தம், அர்த்தமற்றது. உமது வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாமலே தள்ளுபடி செய்ய இந்த வழக்கு மன்றத்துக்கு உரிமை உண்டு. அதோடு மான நஷ்டத்துக்கு உமது பேரில் வழக்குத் தொடர அனுமதி வழங்கவும் இயலும். ஆனால் நாம் அப்படிச் செய்யப் போவதில்லை. ஏனெனில் நமது அரசு பொதுநலப் பணியையே குறிக்கோளாகக் கொண்டது. ஒவ்வொரு குடிமகனுக்கும், அவன் எந்த தர்மத்தை, இனத்தை, நிறத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும் நியாயமே கிடைக்க வேண்டுமென்ற பெருநோக்குடன் இந்த மன்றத்திலே உம் கட்சியை எடுத்துரைக்க ஒரு வாய்ப்பு அளிக்கிறோம்.''

''எனக்கு ஏதுவுமே சொல்ல வேண்டியது இல்லை; எதையும் கேட்டுப் பெறவேண்டியதும் இல்லை'' முண்டாசுக்காரன் ஒரு வழக்காடு



# கிணறு!

ரா.வீ.

பவன் எப்படிப் பணிந்து சொல்ல வேண்டுமோ, அப்படிக் கூறித் தொடர்ந்தான்:

''நீதிபதி அவர்கள் சமூகத்துக்கு. என் வயலில் நாற்பதடி ஆழமுள்ள கிணறு இருந்தது. அதில் நீரும் நன்றாக ஊறியது. அந்தக் கிணற்றில் நான் ஓர் என்ஜின் போடுவதாக இருந்தேன். ஆனால் என் கிணறு திருட்டுப் போய்விட்டது, எசமான்!''

''நீர் சொல்வது போன்ற கிணறு உம் வயலில் இருந்தது என்பதற்கு எத்தகைய சான்றும் உம்மால் தர முடியவில்லையே! நீதி மன்றத்தின் சார்பில் பரிசிலனைக்காக நியமிக்கப்பட்ட குழுவையும், 'நான் நீதி மன்றத்தில் தகுந்த சான்று அளித்துக் கொள்கிறேன்' என்று கூறித் திருப்பி அனுப்பிவிட்டிருக்கிறீர். அந்தக் குழு மூன்று மணி நேரம் மும்முரமாகப் பரிசோதனை செய்தது. உம் வயலின் ஒவ்வொரு அடி மண்ணையும் சோதித்துப் பார்த்தது. உம் வயலில் கிணறு இருந்ததற்கு ஒரு சிறு அடையாளம் கூட அதன் பார்வைக்குப் படவில்லை.''

''எசமான்! கிணறே திருட்டுப் போயிருக்கும்போது அது இருந்த அடையாளம் எப்படித் தெரியும்? ஒரு ஜேப்படித் திருடன் எசமானின் மணிபர்ஸைத் தேட்டை போட்டுவிடுகிறான் என்று வைத்துக் கொள்வோம். மணிபர்ஸ் சட்டைப் பையில் இருந்த தடயம் ஏதாவது கிடைக்குமா?''

இதைக் கேட்டதும் நீதி மன்றத்தில் சிரிப்பொலி எழுந்தது. தம்மை அறியாமலே நீதிபதியும் தம் சட்டைப் பையைத் தடவித் தொட்டுப் பார்த்துக் கொண்டார். பின்னர் சிறிது கடுமையான குரலில், ''இதோ பார், ஐயா! கேட்கிற கேள்விக்கு மட்டுமே பதில் சொல்ல வேண்டும். தொடர்பில்லாத விஷயங்களை இங்கு உளறத் தேவையில்லை. உம் வயலில் கிணறு இருந்ததற்கான அடையாளங்களை எங்கள் குழுவினால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆதலால் கிணறு இருந்தது என்பதை நிரூபிப்பது உமது பொறுப்பாகிறது!'' என்றார்.

''நான் மறுக்கவில்லையே! அதைப் பொறுப்பாகக் கருதித்தானே இவ்வளவு தூரம் வந்திருக்கிறேன்!'' என்றான் முண்டாசுக்கார ராமய்யன்.

''அப்படியானால் சொல்லும். வீணில் பேச்சை வளர்த்தவேண்டாம். கேட்கிற கேள்விக்கு மட்டும் நறுக்குத் தெறித்தாற்போல் பதில் சொன்னால் போதும்!''

''சரி, எசமான்! கேளுங்க!''

''நீர் ஏதாவது சாட்சி கொண்டு வர முடியுமா? உமது வயலில் கிணறு இருந்தது என்பதை நிரூபிக்க?''

''அப்படி சாட்சி கொண்டு வந்து என்னங்க பிரயோசனம்? ஒன்றென்ன? ஒன்பது சாட்சிகளை இப்போதே உங்கள் முன்னால் கொண்டு வந்து நிறுத்த முடியும். அவ்வளவும் சோடித்த சாட்சிகள் என்று தட்டிக் கழித்து விடலாமே! தாங்கள் அவர்களை நம்புவதாயிருந்தால்...''

''திரும்பவும் அந்த உபயோகமில்லாத பேச்சே பேசுகிறீரே! கேட்ட கேள்விக்கு பதில் சொல்லும் ஐயா! உம்மால் சாட்சிகள் கொண்டுவர முடியுமா, முடியாதா?''

''முடியும், எசமான்! என் வயலில் கிணறு இருந்தது என்பதை வாயினால் கூறும் சாட்சிகளை என்னால் கொண்டு வர முடியாது. ஆனால் எழுத்தளவில் என்னிடம் நல்ல சாட்சி இருக்கிறது!''

தன் கையில் வைத்திருந்த அட்டாச்சி கேஸை உயரத் தூக்கிக் காட்டி வெகு நம்பிக்கையோடு சொன்னான் ராமய்யன்.

''அவற்றைக் கோர்ட்டார் முன்னே வையுமே!''

ராமய்யன் வெகு லாகவமாகப் பையின் 'ஜிப்'பை இழுத்தான். அதிலிருந்து ஒரு பைலை எடுத்தான். அதைப் பிரித்து ஒரு காகிதத்தை வெளியே எடுத்தான். அதைப் பிரித்துக் குமாஸ்தா மூலம் அதனை நீதிபதிவரை சேர்த்த பின், ''இது என் முதல் சாட்சி. நான் கணக்குப்பிள்ளையின் பொரிசோடு

காலணிகள் தயாரிக்கும் ஒரு பிரபல நிறுவனம் அந்தமான் தீவுகளில் ஒரு கிளை நிறுவனத்தை ஆரம்பிக்க எண்ணியது. தங்களது தயாரிப்புக் களுக்கு எப்படிப்பட்ட ஆதரவு அங்கு கிடைக்கும் என்றறியத் தனது இரு விற்பனைப் பிரதிநிதிகளை அனுப்பியது. வடக்குப்பக்கம் சென்றவர் சுற்றிப் பார்த்துவிட்டு ஒரு தந்தி அடித்தார்:

''இங்குள்ள மக்கள் அநாகரிகமானவர்கள். ஒருவரும் செருப்பு அணிவதில்லை. இங்கு கிளைகள்



## யாருக்குப் பாராட்டு?

- ''தருண்''

திறப்பதால் பலன் ஏதும் ஏற்பட ஏதுவில்லை!''

தெற்குத் திசையில் சென்றவர் எழுதினார்:

''இதுவரையில் ஒருவரும் செருப்புப் போடாத பிரதேசம் இது. ஆனதால் தக்கபடி அதன் நன்மை களை எடுத்துக் கூறிப் பிரசாரம் செய்தால் ஏகபோக வியாபாரத்தால் எக்கச்சக்கமாக விற்பனை அதி கரிக்கும். உடனடியாகக் கிளையைத் திறக்க வேண்டும்.''

இருவரும் பார்த்தது ஒன்றைத்தான். நோக்கில் தான் எவ்வளவு வேறுபாடு? யார் பாராட்டப் பட்டிருப்பார் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை!

---

வட்டார அபிவிருத்தி அதிகாரியின் வழியாக என் 'வயலில் கிணறு வெட்டக்' கடன் கேட்டுக் கூட்டுறவு வங்கிக்கு மனுச் செய் தேன். என் மனு வந்து சேர்ந்த விவரத் துக்கு அவர்கள் அனுப்பிய கடிதம் இது!'' என்றான்.

'' சரி ! கிணறு வெட்டக் கடன் கேட்டு மனுச் செய்து கொண்டதால், உமது வயலில கிணறு வெட்டப்பட்டது என்பதை எப்படி ஏற்க முடியும் ?'' நீதிபதியின் கம்பீரத் தோற்றம் அந்த நேரத்துக்குச் சற்று நெகிழ்ந்து கொடுத்தது. வெகு சாமர்த்திய மாகக் கட்சிக்காரனை மடக்கிவிட்ட நினைப்பு உதடுகளில் இலேசான முறுவலாக இழையோடியது.

'' சற்றுப் பொறுக்கணும், எசமான் ! நாம் ஒரு லயனிலே போனால்தான் சரியா யிருக்கும். பாங்கு மனுவை நன்றாக ஆராய்ந் தது, கடன் தரச் சம்மதித்தது. அதைத் தொடர்ந்து கடனில் முதல் தவணையாக எனக்குப் பணமும் அனுப்பி வைத்தது.''

''இருக்கலாம்! அந்தப் பணத்தை நீர் உம் சொந்த உபயோகத்துக்கு எடுத்துக் கொண்டிருக்கலாம். வயலில் கிணறு வெட்டி யிருப்பீர் என்று எப்படிக் கூற முடியும்?''

''இல்லே, எசமான் ! அது எப்படி முடியும்? இதோ. இந்த இரண்டாவது காகிதத்தையும் பாருங்கள் ! விவசாயத் துறை அதிகாரி அளித்த சான்றிதழின் நகல் இது. ராமய்ய னின் வயலில் நாற்பது அடி ஆழத்துக்குக் கிணறு தோண்டப்பட்டிருக்கிறது என்றும் அதில் நீரும் நன்றாக ஊறுகிறது என்றும் அதில் அவர் குறிப்பிட்டிருக்கிறார். இந்தச் சான்றிதழ் இல்லாமல் நான் கடனின் அடுத்த தவணையை எந்த நிலையிலும் வாங்க முடியாது.''

இவ்வளவு நேரம், நீதிபதியின் உதடு களில் இழையோடி ஒரு காத அகலம் வளர்ந்திருந்த மென்னகை சட்டென்று வாடி விட்டது. யோசனையில் ஆழ்ந்தார்.

இடதுபுறத்தில் அமர்ந்திருந்த விவசாயத் துறை அதிகாரி வெல வெலத்துப் போனார். அவர் முகத்தில் ஈயாடவில்லை. அங்கேயே சற்றுத் தள்ளி உட்கார்ந்திருந்த வட்டார வளர்ச்சித் துறை அதிகாரியும் பாங்கிப் பிரதிநிதிகளும் கசமுச வென்று தங்களுக்குள் ஏதோ பேசிக் கொள்ளலாயினர். பார்வை யாளர்களாக வந்திருந்தவர்களும் காதைக் கடித்துக் கொள்ளலாயினர்.

ராமய்யன் மேலே தொடர்ந்தான்:

''நான் கிணறு வெட்டிவிட்டேன் என்பதை உறுதியாகத் தெரிந்து கொண்டு சான்றிதழும் வழங்கிக் கிணற்றுக்குத் தளமிட்டு கட்டுவதற் கும், மோட்டர் போடுவதற்கும் கடனின் கடைசித் தவணையும் தரப்பட்டது. இப்படி யாக நான் கிணறு வெட்டும் காரியத்தை நிறைவேற்றியுள்ளேன். வேலை அனைத்தும் முடிந்து விட்டதற்குப் பாங்கி அதிகாரி களும் சான்றிதழ் வழங்கியுள்ளார்கள். இதுதான் அந்த சர்டிபிகேட், எசமான் ! இப்படி யிருக்கும் பொழுது என் வயலில் கிணறு இல்லையென்று நீங்கள் எப்படிக் கூற முடியும் ?''

நீதிபதியின் முகம் ஒரே கம்பீரமாகி விட்டது. ரிடையர் ஆகும் காலம் நெருங்கி வந்திருந்தாலும்கூட அவர் இவ்வளவு கவலைப்பட்டிருக்க மாட்டார். என் அருகில் அமர்ந்திருந்த பிரமுகர்கள் தடுமாறிப் போய் நின்றதை நான் என் கண்ணாலேயே பார்த் தேன். பார்வையாளர்களிடையே பேச்சு வர வர உயரவே, நீதிபதி 'ஆர்டர், ஆர்டர்!' என்று மேசையைக் கையால் தட்டி உரக்கக் குரல் கொடுக்கும்படியாயிற்று.

கச்சேரி சூடேறினாற்போல் ராமய்யன் காற்றில் மிதந்தான். எனவே, தைரியமாக அடித்துப் பேசினான்:


''இப்பொழுது நீங்களே சொல்லுங்கள், நீதிபதி அவர்களே ! இத்தனை பெரிய பெரிய அதிகாரிகள் அளித்துள்ள சான்றிதழ்கள் எங்கேயாவது பொய்யாகுமா? இந்த அதி காரிகள் ஸ்தலத்துக்குச் செல்லாமல், தம் கண்களால் பாராமல், வேலை முடிந்துவிட் டது என்று தம் அலுவலகங்களில் அமர்ந்த வண்ணமே சான்றிதழ் கொடுத்து விடுவார் களா? இந்த சர்டிபிகேட்டுகள் அத்தனையும் உண்மையானவை. அலுவலக முத்திரை யுடன், அதற்கேற்ற சாங்கியச் சடங்குகளுடன் தரப்பட்டவை. யார் இந்தச் சான்றிதழ்கள் வழங்கியிருக்கிறார்களோ, அவர்கள் அத்தனை பேரும் இங்கு ஆஜராகியிருக்கின்றார்கள். தாங்கள் விரும்பினால் அவர்களையே நேரில் கேட்டுக் கொள்ளலாம்.''

தம்மையறியாமலே நீதிபதியின் கண்கள் என் அருகில் அமர்ந்திருந்த அதிகாரிகளின்

## அஞ்சலி



அன்பினால் பிணைக்கப்பட்டவர் உலகை விட்டுச் சென்றாலும் அவர் நினைவு என்றும் பசுமையாகவே நிற்கிறது. டிசம்பர் 13ம்தேதியுடன் ஸ்ரீமதி சுந்தராம்மாள் மறைந்து ஒன்பது ஆண்டுகள் ஆகின்றன. என்றாலும் மாறாத அன்புடன் அவரது கணவர் திரு வி. தியாகராஜன் (முன்னாள் 'அபீஷியல் அஸைனி') அவர்களும் அவரது புதல்வர்கள் பாலு, குமார், ராமுவும், மாட்டுப் பெண்கள் பேபி, லில்லி, லாபியும் சுந்தரம்மாளின் தெய்வீகக் குண நலன்களைக் கசிந்த உள்ளத்துடன் நினைவு கூராத நாளில்லை. அவர்களது நினைவு மேலுலகை எய்திவிட்ட அப்பெருமாட்டி ஸ்ரீமதி சுந்தரம்மாளின் ஆன்மாவுக்கு என்றென்றும் சாந்தியளிக்குமாக!




இவன் தான் மில்பர்ன்.
அமுல்ஸ்ப்ரே புகட்டத்
தொடங்கியபோது, அவன்
ஒரு மாதக் குழந்தை.

# இப்பொழுது அவனைப் பாருங்கள்!

"மில்பர்னுக்கு அமுல்ஸ்ப்ரே உடனேயே ஒத்துக் கொண்டது. அவனது பிறப்பு எடை மூன்று மாதங்களில் இரட்டிப்பாகி, மேலும் நன்கு வளர்ந்து வருகிறான்"

என்கிறார் 13-மாதக் குழந்தை மில்பர்னின் தந்தை திரு. மெல்வின் டி'மெல்லோ பெருமிதத்துடன்






தாய்ப் பாலுக்குப் பதிலாகவோ அல்லது உபரி உணவாகவோ ஆயிரக் கணக்கான தாய்மார்கள் முதல் வாரத்திலிருந்தே அமுல்ஸ்ப்ரே உபயோகித்து வருகிறார்கள்.

அமுல்ஸ்ப்ரே சீரணிக்க எளிதான, சரி-விகிதக் குழந்தை உணவு. நல்ல உடல் வளர்ச்சிக்குத் தேவையான புரதத்தை அதிக அளவில் கொண்டது அது. தவிர, அதில் வைட்டமின்கள், கார்போஹைட்ரேட்ஸ், தாதுப் பொருள்கள் ஆகியவையும் உண்டு. சுருங்கச் சொல்லில், உங்கள் குழந்தை விரைவாகவும் ஆரோக்கியமாகவும் வளரத் தேவையான யாவுமே.

ஸ்ப்ரே—ட்ரையிங் செய்முறையில் தயாரிக்கப்படுகிறது அமுல்ஸ்ப்ரே (உன்னதமான இச் செய்முறையில் தான் குழந்தை உணவுகள் யாவும் அமெரிக்காவில் இப்போது ஆக்கம் பெறுகின்றன). பாலிலுள்ள புரதத்தின் தரத்தை இச் செய்முறை நன்கு பாதுகாக்கிறது.

தயாரிக்கப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்குள்ளாகவே அமுல்ஸ்ப்ரே இந்தியாவிலேயே உச்ச-விற்பனையுடைய குழந்தை உணவாகத் திகழ்வதில் வியப்பென்ன!

# அமுல்ஸ்ப்ரே

தாய்ப் பாலுக்குப்
பதிலாகப் புகட்டச் சிறந்தது!

ASP/AS-9

'ஃபுல் பெஞ்'சை நோக்கின. உட்கார்ந்திருந்த அனைவருடைய முகங்களும் நெருப்பில் வெந்தாற் போல் கன்றிக் கிடந்தன. ராமய்யனோ, இந்த வழக்கின் முடிவை அந்தக் கணமே தெரிந்து கொள்ள விரும்புகிறவன் போல் இறுமாப்புடன் நின்று கொண்டிருந்தான்.

சிறிது நேரத்துக்கெல்லாம் நெருப்பில் நெய் வார்த்தாற் போன்ற எழுச்சியோடு, "அப்புறம் சொல்லுங்கள், நீதிபதி அவர்களே! என் கிணறு எங்கே போயிற்று? கிணற்றுக்கு எஞ்சின் போடவும் நான் கடனுக்கு மனுச் செய்திருக்கிறேன். அதுகூட ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது. ஆனால் என் கிணறே திருட்டுப் போய் விட்டபோது, நான் எங்கே போய் மோட்டாரைப் போடுவேன்?" என்று கேட்டான்.

பார்வையாளர் கூட்டத்தின் கசமுசப்பு இப்பொழுது கூச்சலாக உருவெடுத்தது. கூடியிருந்த பலருக்கும் குளிர் விட்டுப் போயிற்று. அது நீதி மன்றம் என்ற நினைப்பே இல்லை. அச்சந் தவிர்த்து அவர்கள் 'ஃபுல்பெஞ்'சை நோக்கிக் கேள்விச் சரங்களைத் தொடுக்கலாயினர்.

"ஐயா, விவசாயத் துறை அதிகாரியே! சொல்லுமேன்!"

"ஓய், பாங்கிக்காரரே! வாயில் கொழுக்கட்டையா அடைத்திருக்கிறது?"

"பி. டி. ஓ. முகத்தைப் பார்த்தியா? தக்காளிப் பழத்தை நினைவுப்படுத்துகிறதா, இல்லை...."

கேள்வியைத் தாமாகவே முடித்துக் கொண்டு 'கெக் கெக்'கென்று பலரும் சிரிக்கலாயினர். அவர்கள் அப்படிப் பல்லைக் காட்டிச் சிரித்தது எதை நினைவுபடுத்தியது என்பது அவர்களுக்கு நினைப்பு வரவில்லை!

கூச்சல் கட்டுக்கடங்காமற் போகவே, நீதிமன்றத்துக்கும் சில நகரசபைகளின் கதி நேரிட்டு விடக் கூடாது என்ற நல்லெண்ணத்தில் நீதிபதி அவர்கள் எழுந்து உள்ளே போய் விட்டார்கள். நீதி மன்றக் குமாஸ்தா, "இந்த வழக்கு இன்றைக்கு இதோடு ஒத்திப் போடப்படுகிறது!" என்று கூறி நீதிபதியைப் போல எழுந்து சென்றார்.

இதனால் எனக்கு மிகுந்த ஏமாற்றமே. இருந்தாலும், இந்த வழக்கு முடியும் வரை ஒவ்வொரு 'ஈரங்கி'க்கும் கட்டாயம் வருவது என்று முடிவு செய்து கொண்டேன். அப்படியே சாகுபடி வேலை ஏதாவது குறுக்கிட்டாலும் அதை ஒத்திப் போடுவது என்ற அளவுக்குத் துணிந்து விட்டேன்.

அன்று மாலையே என் வழக்கறிஞ நண்பருடன், அந்த ஊர் அனைத்துலக ஹோட்டலுக்குக் காப்பி சாப்பிடச் சென்றேன். முறுகல் தோசைக்கு ஆர்டர் கொடுத்துவிட்டு நண்பரோடு பேச்சைத் தொடங்கினேன். பேச்சு ராமய்யன் வழக்குக்கு வரும்பொழுது, என்ன ஆச்சரியம்! அந்த ராமய்யனே ஹோட்டலுக்குள் நுழைந்தான். நாங்கள் உட்கார்ந்த மேஜைக்கு அருகிலேயே வந்து அமர்ந்தவன், வக்கிலைப் பார்த்ததும், 'வக்கில் ஐயா! நாளைக்கு வழக்கை வாபஸ் பெற வேண்டியதுதானே?" என்று கேட்டான்.

"என்ன அப்பா இது! வழக்கு இப்பத்தான் களைகட்டியிருக்கிறது! வாபஸ் வாங்க வேண்டும் என்கிறாயே!" என்னால் பொறுக்க முடியவில்லை. எனவே, இடையே புகுந்து கேட்டு வைத்தேன்.

வக்கில் முறுவல் பூத்துக் கொண்டு, 'உம்' என்றார்.

ராமய்யன் விளக்கம் கூறலானான்:

"கோர்ட்டிலிருந்து வெளியே வந்ததும், எல்லா அதிகாரிகளும் என்னைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டனர். அப்படியே அலாக்காகத் தூக்கி ஜீப்பில் உட்கார வைத்துக் கொண்டனர். நேரே வட்டார வளர்ச்சி அதிகாரி வீட்டுக்கு இட்டுச் சென்றனர். காலில் விழாத தோஷமாகக் கெஞ்சினார்கள். 'ராமய்யா! நாங்கள் கையெடுத்துக் கும்பிடுகிறோம். இந்த வழக்கை வாபஸ் வாங்கி விடு!' என்றனர்.

"கையெடுத்துக் கும்பிட்டால் ஆயிற்றா? அல்லது காலில் விழுந்து கெஞ்சினால்தான் போயிற்றா? சர்டிபிகேட் தர நீங்கள் என்னிடமிருந்து பணம் வாங்கிக் கொண்டீர்களே, அது என்ன ஆயிற்று? அதற்கு என்ன வழி சொல்லப் போகிறீர்கள்?" என்று வெகு முறைப்பாகக் கேட்டேன்.

"'உன்னிடம் வாங்கிக் கொண்ட ரூபாய்க்கு இரண்டு மடங்காகத் திருப்பித் தரத் தயாராயிருக்கிறோம், நீ மட்டும் வழக்கை வாபஸ் வாங்கிக் கொள்வதாயிருந்தால்....' என்று எல்லோரும் ஏகோபித்த குரலில் கூறினார்கள்.

'சரி, எடுங்கள்! பணத்தை இப்போதே எண்ணி வையுங்கள்! அப்புறம் — இப்புறம் என்றால் முடியாது!' என்றேன்.


"எல்லோரும் இரண்டு மடங்கு ரூபாயை எண்ணி வைத்தார்கள். இனி வழக்கை மேலே தொடர வேண்டிய அவசியம் என்ன? அதோடு அஸ்திவாரம் சரியில்லாத இந்த வழக்கு எத்தனை தூரம் நிற்கும்?" என்று கேட்டான் ராமய்யன்.

"ராமய்யா! நீ கொடுத்த பணம்தான் வட்டி—குட்டி போட்டுத் திரும்பி விட்டதே! உன் வயலில் கிணறு வெட்டி விடுவாய் அல்லவா?" என்று கேட்டார் வக்கில்.

"என்ன சார், பைத்தியமா பிடிச்சிருக்கு, உங்களுக்கு? தெரியாதது போலக் கேட்கிறீர்களே! அந்த வயல் என் வசத்தில் எங்கே இருக்கிறது? அந்த வயலில் போய் நான் கிணறு வெட்டிவிட முடியுமா? அது தான் எங்கள் — அண்ணன் — தம்பிகளுக்குள் பிரிவினைச் சண்டையில் மாட்டிக் கொண்டிருக்கிறதே! எனக்குச் சாதகமாகத் தீர்ப்பு ஆனால் அப்புறம் கிணறு வெட்டுவதைப்பற்றி யோசித்துக் கொள்ளலாம்!" என்றான் ராமய்யன்.

அதற்குள் முறுகல் தோசை வந்து விட்டது, ராமய்யனுக்கும் சேர்த்து. அவன் அதைத் தின்று தீர்ப்பதில் மூழ்கினான். நானோ மரியாதைக்குரிய அந்த மகாமேதையை வியப்பு மீதூர இமைகளை விரித்து விழுங்கிக் கொண்டிருந்தேன்!

[ஆதாரம்: **வஸந்த் அ. கும்போஜ்கர் 'லோகசத்தா'வில் எழுதிய மராட்டிக் கதை.**]



ஏராளமான டிரக்குகளுக்குச்
சொந்தக்காரரான
திரு. R. மூர்த்தி அவர்கள்
கூறுகிறார்:
'நவீன 'ஆல்கைட்-ப்ளஸ்'
சேர்ந்த ஷாலிமார் டியூரோலாக்
ஸிந்தெடிக் எனமல் பெயிண்டு
ஒன்றுதான், நான் இதுவரை
உபயோகித்த பெயிண்டு
களிலேயே மிகவும் உறுதி
வாய்ந்த பூச்சு உடையது.'

என்னுடைய டிரக்குகள் தொடர்ந்து வெயிலிலும், மழையிலும் ஓடிக்கொண்டு இருக்கின்றன. அவைகள் புழுதி நிறைந்த மலைப்பாதைகளிலும் நீர் தேங்கி நிற்கும் சமவெளிகளிலும், மற்றும் எல்லாவிதமான ரோடுகளிலும் ஓட்டப்படுகின்றன. ஆகவே என்னுடைய டிரக்குகளுக்கு, உறுதியானதும், அதிக காலத்திற்கு நீடித்து உழைக்கவும் கூடிய பெயிண்டுகளையே உபயோகப்படுத்துகிறேன். ஆகவே நான், நவீன ஆல்கைட்-ப்ளஸ் சேர்ந்த ஷாலிமார் டியூரோலாக் ஸிந்தெடிக் எனமல் பெயிண்டையே தேர்ந்தெடுக்கிறேன்.

சிறந்த கண்ணாடி போன்ற தோற்றத்தை அளிப்பதோடு எஃகு போன்ற வலிமையுடன் பூசப்பட்ட இடத்தோடு இணைந்து கொள்கிறது. எவ்வித பருவநிலை மாற்றத்திற்கும் ஈடுகொடுத்து எத்தனை முறை கழுவினாலும் புதிதாக பூசப்பட்டது போன்ற தோற்றத்தைக் கொடுக்கிறது. இதில் அடங்கிய மிகவும் முக்கியமான சிறப்பு— துரு பிடிக்காத தன்மை. ஆகவே என்னுடைய டிரக்குகள் துரு பிடிப்பதினின்று காப்பாற்றப்படுகின்றன. டிரக்குகள், பஸ்கள், மற்றும் எல்லாவித வாகனங்களுக்கும் நவீன ஆல்-கைட் ப்ளஸ் சேர்ந்த ஷாலிமார் டியூரோலாக் ஸிந்தெடிக் எனமலையே வாங்கி உபயோகியுங்கள்.

இந்த விலையில் கிடைக்கக்கூடிய பெயிண்டுகளிலேயே மிகவும் சிறந்த ஷாலிமார் டியூரோலாக் ஸிந்தெடிக் எனமலின் ஒவ்வொரு லிட்டரிலிருந்தும் அதிக பரப்பளவிற்கு பூசும் வாய்ப்பினை பெறுங்கள்.




எப்பொழுதும் பிரகாசமாயிருப்பவை!
சிறந்ததையே தேர்ந்தெடுங்கள்!!

ஷாலிமார் பெயிண்ட்ஸுகளை வாங்குங்கள் !!!



அன்றையத் தபாலில் வந்திருந்த கவரைக் கண்டவுடனேயே வைதேகிதான் கடிதம் எழுதியிருக்க வேண்டுமென்று ஊகித்துக் கொண்டாள் சாந்தா. ஒரு வரி விஷயமானாலும் அதற்காக ஒரு கவரை விரயமாக்க வைதேகிக்குத்தான் மனம் வரும். என்ன இருந்தாலும் பணக்காரி அல்லவா?

கவரைக் கிழித்துக் கடிதத்தைப் பிரித்துப் படித்தவள் அதிர்ந்து நின்றுவிட்டாள்.


“எனக்கு வயிற்றில் புற்றுநோய் வந்திருக்கிறது. முற்றி விட்டது. இனி என் ஆயுட்காலம் மிஞ்சி மிஞ்சிப் போனால் இரண்டு மாதங்கள் தாங்கலாம் என்று வைத்தியர்கள் கூறி விட்டார்கள். என் கடைசி நாட்களைச் சற்று இன்பமாக்க மனமிருந்தால் வா —வைதேகி.”

நெஞ்சில் ஓரத்தில் தோன்றிய உணர்ச்சி வேதனைதான். எத்தனைதான் வேற்றுமைகள் இருந்தாலும் உடன் பிறந்த பிறப்பல்லவா? அதுவும் தங்கை. பெரியவள் அவளிருக்க...

ஆனால் மனக் கசப்பை வளர்த்து வளர்த்து இதயமெல்லாம் நிறைத்துக் கொண்டிருந்த சாந்தா அதிக நேரம் வேதனைப்படவில்லை. வலியில் துடித்துத் துடித்துச் சாகப் போகும் இளையவளின் நினைவை ‘அவள் தலையெழுத்து’ என்ற வார்த்தைகளோடு ஒதுக்கி விட்டுத் தன் வேலைகளில் ஈடுபடலானாள்.

# வைதேகி

ருக்மிணி பார்த்தசாரதி



இருந்தாலும் மனம் திரும்பத் திரும்ப வைதேகியிடமே சென்றது. '''பாவம், வைதேகி! எதையும் அனுபவிக்கவில்லை'' என்று ஒரு கணம் மனம் உருகிற்று. மறு கணமே, ''சுமதியையும் அவள் குழந்தைகளையும் சீராட்டி எப்படி என் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டாள்! வேண்டும்!'' என்று வெறுப்பு வெடித்தது.

ஆனால் இந்த வெறுப்பில் நிறைவில்லை.

அன்புக்கு மட்டுமே நிறைவை அளிக்கும் வலிவுண்டு. வைதேகியிடம் சாந்தாவுககு அன்பில்லையா? தங்கையிடம் தமக்கைக்கு அன்பில்லாமல் இருக்கவும் முடியுமா? அன்பிருந்தது இதயத்தில் ஏதோ ஒரு மூலையில். வெளியே தலைகாட்ட முடியாதபடி அமுத்தும் மற்ற உணர்ச்சிகளின் பிடியில்...

இருபத்திரண்டு வயதில் சாந்தாவுக்குத் திருமணம் நடந்தேறியது. அப்போது வைதேகிக்குப் பதினெட்டு வயது. சுமதிக்குப் பதினொன்று. அதன் பின் உருண்டோடிய வருடங்களில் கூடச் சாந்தா தங்கைகள் மீது உயிராய்த்தான் இருந்தாள். பேறுக்காகப் பிறந்தகம் வரும்போதெல்லாம் தங்கைகளைப் பார்த்துப் பார்த்துப் பூரித்துப் போவாள். கால ஓட்டத்தில் வைதேகியின் அழகு எப்படி மெருகேறியது! சுமதியின் குணம் எப்படிப் பூத்துச் சிரித்தது! வைதேகியின் வாழ்விலே எதிர்பாராத விதமாக அதிர்ஷ்ட தேவதை குறுக்கிட்டபோதுகூட ''வைதேகியின் அழகுக்கு இது தகுந்த பரிசுதான்'' என்று நினைத்தாள் சாந்தா. வைதேகியின் அழகில் மோகித்த ஒரு பணக்கார வாலிபன் அவளை மணக்க முன்வந்தான். அவன் பெயருக்கு ரொக்கமாய் லட்ச ரூபாய் பணம் இருந்தது. சொந்தத்தில் வீடும் இருந்தது. அதோடு மாதம் சம்பளம் வேறு வந்து கொண்டிருந்தது. ஆக, ஏழை வீட்டு இரண்டாம் பெண்ணாக இருந்தவள் ஒரு மஞ்சள் கயிற்றை ஏற்றுப் பணக்காரனின் இல்லத்தரசியாய் மாறிவிட்டாள்.

காலக்கிரமத்தில் சுமதிக்கும் திருமணம் நடந்தது. மணமகன் சாதாரணக் குமாஸ்தா என்றாலும் வயது இருபத்து நான்குதான். முன்னுக்கு வர நல்ல வாய்ப்பிருந்தது. கற்ற கல்வியாலும் சிறந்த புத்தி கூர்மையினாலும்...

சுமதிக்குக் கல்யாணம் ஆன கையோடு வைதேகி பிறந்தகம் வந்து விட்டாள். துடைத்துவிட்ட தந்தச் சிலையென...பூவும் பொட்டும் பறி போனதற்கு யாரைக் குற்றம் சொல்ல முடியும்? யாரை ஏச முடியும்?

கணவனின் ஒரு லட்சம் ரூபாய்க்கு இனி அவள்தான் அதிகாரி. அவன் வீடும் அவளுக்கே சொந்தம். ஆயினும் இழந்த சௌபாக்கியங்களுக்கு ஈடாக முடியுமா இவை? வாழ்ந்த நாட்களின் சின்னமாய் ஒரு குழந்தை கூடத் தேவையில்லை என்ற கொடிய தீர்ப்பையா தெய்வம் வழங்க வேண்டும்?

வைதேகி பிறந்த வீட்டோடு தங்கிவிட்டாள். சாந்தா வழக்கம்போல் பேறுக்காக வந்து கொண்டிருந்தாள், இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை. மக்கள் செல்வம்தான் என்னமாய் வளர்ந்து வந்தது? ஐந்தாறு...!

அம்மாவுக்கு என்ன உடம்போ, இல்லை, மகளின் கைம்மை, பெற்றவளுக்குத் தீராத மன நோயை அளித்து விட்டதோ? அவள் கண்ணை மூடிவிட்டாள்.

அம்மா போனபிறகு சாந்தா தன் பிறந்த வீட்டுக்குப் போவதைக் குறைத்துக் கொண்டாள். மக்கள் செல்வம் சட்டென்று வளராமல் நின்று விட்டதும் இதற்கு ஏதுவாயிருந்தது. கால ஓட்டத்தில் அப்பாவும் கண்ணை மூடினார். வைதேகி அப்பா இருந்த வாடகை வீட்டைக் காலி செய்து விட்டுக் கணவன் தனக்கு விட்டுச் சென்ற சொந்த வீட்டில் குடி புகுந்தாள். வீடு சிறியதுதான். ஆனால் பிரம்மாண்டமான தோட்டம். மாவும் வாழையும், பலாவுமாய் முக்கனிகள் மண்டிக் கிடக்கும் இயற்கை வளம்.

காலம் ஓடிற்று. தம் மக்களோடு ஒவ்வொரு விடுமுறைக்கும் தமக்கையைப் பார்க்க வந்து விடுவாள் சுமதி. குழந்தைகளுக்கும் பெரியம்மாவிடம் ஓர் அலாதிப் பற்றுதல்.

ஆனால் சாந்தா...?

எப்போதாவதுதான் வைதேகியைப் பார்க்கப் போவாள். அதுவும் கடைசி இரண்டு குழந்தைகளை மட்டும் அழைத்துக் கொண்டு.

கவரின் மீது வைதேகியின் கையெழுத்தைக் கண்டபோது சுமதிக்கு ஒரே மகிழ்ச்சி. ஆனால் கடிதத்தைப் பிரித்துப் படித்த பொழுது அவளால் வேதனையைத் தாங்க முடியவில்லை. சுமதி கதறி அழுதாள். கண்கள் வீங்கிச் சிவந்து விட்டன. கண்ணீரும் பெருகி ஓய்ந்தது. துன்பம் வேறு உருவம் கொண்டது. வைதேகியைப் பற்றி நினைத்துக் கொண்டாள்.

நினைவுத் திரையில் அழகழகான எத்தனையோ காட்சிகள்!


**வை**தேகியையும்சுமதியையும் இணைத்து நினைத்தபொழுது சாந்தாவின் உடலெல்லாம் பற்றி எரிந்தது!

இரண்டு வருடங்களுக்குமுன்னால் நடந்த விஷயம். அவளுடைய மகன் பரீட்சைக்கு 'பீஸ்' கட்ட வேண்டியிருந்தது. காலக்ஷேபம் நடக்கும் விதம்தான் ஊர் அறிந்த விஷயமாயிற்றே! பிள்ளையிடம் சொன்னாள்: ''சித்திக்கு எழுதிக் கேள்!'' என்று. அவன், ''எழுபத்தைந்து ரூபாய் வேண்டும்!'' என்று எழுதினான்.


வைதேகி மறு தபாலில் எழுபத்தைந்து ரூபாய் அனுப்பி விட்டாள். ''கஞ்சத்தனத்தைப் பார்! எழுபத்தைந்துன்னு ஒருகுழந்தை கேட்டால் சரியாய் எழுபத்தைந்தா அனுப்புவாள்? நூறாக அனுப்பக் கைவராதோ? இதுவே செல்லத் தங்கையின் ஒவ்வொரு பிறந்த நாளுக்கும் சொல்லாமலே நூறு நூறாய்ப் பறக்கிறதே!'' என்று பொருமித் தீர்த்தாள் சாந்தா.

இருந்தாலும் அன்று மாலை வீடு வந்த கணவரிடம் கடிதத்தைக் காட்டி அனுமதி பெற்று அன்றே புறப்பட்டு விட்டாள்.

**வை**தேகியின் வீட்டுக்கெதிரே இறங்கியதும் ஒரு கணம் ஏதேதோ இனிமையான எண்ணங்கள் மோத, தன்னை மறந்து நின்று விட்டாள் சுமதி. அவள் வருஷம் தவறாமல் இங்கு வருவாள், தவறாமல் கோயிலுக்குச்




நெருங்கி உறவாடும்,



நெஞ்சைக் கவரும் நறுமணமுள்ள

# லக்மே டால்கம்



உங்கள் இதயம் கவரும் நறுமணத்தை மணிக் கணக்கில் வீசிக்கொண்டிருக்கும் டால்கம்—நெஞ்சை விட்டகலாத லக்மே! அந்த இணையற்ற இன்பத்தை அனுபவிக்கத் தாமதமேன்? இன்றே உங்கள் மேனியின் மீது இன்மணம் கமழும் லக்மே டால்கம் தூவுங்கள். அது பட்டுப் போன்று மென்மையானது; நேர்த்தியானது; இணைபிரியாதது. ஒரு நாளை 'லக்மீ' சுகமாகத் துவக்க, இதை விட இன்பம் தருவது வேறென்ன இருக்கப் போகிறது?


இது ஐவகை மணம் வீசி, உங்களை அன்புடன் அணைய வருகிறது. லேவெண்டர், வெட்டிவேர், கிரான், சந்தனம் ஆகிய நான்கும், மீடியம் மற்றும் எகானமி சைஸ்களிலே வருகின்றன. ஐந்தாவதான ஃப்ளோரல் மிஸ்ட் பெரிய ஃபேமிலி சைஸில் வருகிறது. எல்லாமே நீங்கள் எளிதில் வாங்கக்கூடிய விலையில்; எல்லாமே இன்ப மணம்; எல்லாமே இன்ப மயம்!

## இன்றைய ஜப்பானியக் குழந்தைகள் ஏன் அவர்கள் முன்னோர்களைவிட உயரமாக வளர்கிறார்கள்?

# அவர்கள் உணவில் புரதம் மிகுந்திருக்கிறது



# 'மாடர்ன் ரொட்டி' மற்ற எந்த ரொட்டியைக் காட்டிலும் அதிகமான புரதச்சத்தைக் கொடுக்கிறது.






இதோ! ஒரு சமுதாயமே உயர்ந்து வருகிறது. இன்றைய ஜப்பானியக் குழந்தைகள் முன் சந்ததியை விட சராசரி 3 அங்குலங்கள் உயர்ந்துள்ளன. உலகப் போருக்குப் பின், ஜப்பான் புரதம் நிறைந்த உணவின் பயனும் இதை சாதித்துள்ளது. உணவில் புரதம் அதிகம் சேர்த்தால், இந்தியக் குழந்தைகளும் செழிப்புடன் வலிமையாக வளர முடியும்.

புரதச் சத்தை அதிகரிக்கவே மாடர்ன் ரொட்டியில் லைசின் சேர்க்கப்பட்டிருக்கிறது. மாடர்ன் ரொட்டியில் வைட்டமின் ஏ, பி1, பி2, நயாஸின் மற்றும் தாதுப் பொருள்களும் செவ்வனே சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவை இந்திய உணவில் குறைவாகவே உள்ளன. எந்த உணவுடனும் இணைந்து சுவை கூட்டுகிறது மாடர்ன் ரொட்டி. சிறந்தவையே உங்கள் குடும்பத்திற்கு உகந்தவை.

**அவர்களுக்குக் கொடுங்கள் மாடர்ன் —ஒரு மகத்தான ரொட்டி.**

# மாடர்ன்

**இந்தியாவிலேயே மெத்தவும் சத்துள்ள ரொட்டி.**

மாடர்ன் பேகரீஸ் (இந்தியா) லிட்.,
(ஒரு இந்திய அரசின் நிறுவனம்)
பேகரீஸ்:
அகமதாபாத் . பெங்களூர் . பம்பாய் . கல்கத்தா
கொச்சி . டெல்லி . ஹைதராபாத் . கான்பூர் . சென்னை.

செல்லும் பக்தனைப் போல்: வைதேகி புன்னகையோடு வாசலில் நின்று கொண்டிருப்பாள். ''பெரியம்மா'' என்று அவள் அணைப்புக்குள் தாவும் குழந்தைகளைத் தழுவியவாறு, ''வா, சுமதி!'' என்று வாய் நிறைய அவள் கூறும்போது சுமதியின் உள்ளம் நிறையும், உடலில் புத்துயிர் புகுந்து விடும்.

நெஞ்சில் சட்டென்று ஏதோ வேதனை கவ்வியது. வைதேகி ஏன் அவளை வரவேற்க வரவில்லை? வரமுடியாதபடியா அவளை வியாதி வாட்டுகிறது? வாசல் வரைகூட வரமுடியாதபடியா...?

அதோ வாசலில் நிழல் தட்டுகிறது. வைதேகி, இல்லை, சமையற்கார அம்மாள். வைதேகியோடு கடந்த பத்து வருடங்களாக இருக்கும் துணைவி.

''வாம்மா சுமதி.... உள்ளே வா... நீ வருவேன்னு உன் அக்கா துடியாய்த் துடிச்சுண்டிருக்காள்..... வாம்மா....''

சுமதியின் குரல் உள்ளே வைதேகிக்குக் கேட்டு விட்டது. ''மாமி! சுமதி வந்தாச்சா?'' என்று ஆவல் மலர வினவினாள். சுமதியின் நடை துரிதமடைந்தது.

மெலிந்து வாடிய நிலையில் அநாதைபோல் படுத்திருந்த வைதேகியைக் கண்ட சுமதி அதிர்ந்து போனாள்.

''சுமதி! நீ வந்துட்டே.... அப்பாடா! எனக்கு இனிமேல் வலியே தெரியாதும்மா!'' என்று வைதேகி முறுவலித்தாள்.

சுமதிக்குப் பேச நா எழவில்லை. வைதேகி தான் தொடர்ந்தாள்:

''சுமதி.... ரெண்டு மாசம்னு எழுதினேனே, அது பொய்.... இன்னும் ஒரு மாசம் கூடத் தாங்கறது அபூர்வம்...அது வரையில் நீ என்னோடு இருப்பியா?''

''கட்டாயம், அக்கா!''

டாக்ஸியிலிருந்து இறங்கி உள்ளே நுழைந்த சாந்தாவின் கண்களில் சமையற்கார மாமி தென்பட்டாள்.

அவளைக் கண்டவுடன் வைதேகியைப் பற்றிக்கூட விசாரிக்கத் தோன்றவில்லை சாந்தாவுக்கு. ''மாமி! சுமதி வந்துட்டாளா?'' என்றுதான் முதலில் கேட்டாள்.

''நேற்றே வந்தாச்சே அவள்!''

சட்டென்று ஏமாற்றம் தோன்றியது. சீராடச் செல்லத் தங்கை ஓடிவந்துவிட்டாள். முந்திக் கொண்டு விட்டாள். ஆனால் இதுவும் அவள் எதிர்பார்த்ததுதான்.

மனத்தைச் சற்றுச் சமாதானப்படுத்திக் கொண்டு, ''வைதேகி எங்கே மாமி?'' என்று கேட்டாள் சாந்தா.

''அறையில் இருக்கா...''

''உடம்பு எப்படி இருக்கு?''

''அவள் படற அவஸ்தையைப் பார்க்கவே முடியலே....'' பத்து வருஷங்கள் பழகிவிட்ட பாசத்தில் அந்த அம்மாளின் குரலே அழுதது.

''புற்று நோய்ன்னா அப்படித்தான் மாமி!'' சொல்வதுதான் எத்தனை சுலபமாயிருக்கிறது!

''அதென்னவோ? அந்த நல்ல மனுஷி இப்படி அவஸ்தைப்பட வேண்டாம்.''



## காரில் வரும் அதிசயம்!

அரசாங்க பியூன் ஒருவர் சொந்தக் காரிலே அலுவலகம் வந்து பணி புரிந்துவிட்டுச் செல்கிறார்! அமெரிக்காவிலே அல்ல. இந்தியாவில்தான்!

பம்பாய் 'ஜெனரல் டிரான்ஸ்போர்ட் அத்தாரிட்டி' அலுவலகத்தில் பணிபுரியும் இந்த பியூன் சொந்தக் காரில் வந்து வேலை செய்வதைப் பற்றிய பிரச்னை பம்பாய் சட்டசபையிலேயே எழுந்ததாம்!

ஆதாரம்: 'டிரிப்யூன்' அனுப்பியவர்: 'பன்னீர்'

---

''அவள் வாங்கி வந்த வரன் அது....'' என்று சம்பிரதாயமாய்ச் சொல்லி வைத்தாள் சாந்தா.

ஆனால் தூய்மையற்ற எண்ணங்கள் எல்லாமே உறைந்து போயின, வைதேகியைக் கண்ட போது.... நெஞ்சில் எங்கோ ஒரு மூலையில் இன்னும் மென்மையாயிருந்த பாச இடத்தில் வேல் பாய்ந்தது. வைதேகியா இவள்? அவள் தங்கையல்லவா? ''உன் மேல் என் கண் பட்டு விட்டது!'' என்று யமன் தன் முத்திரையை இத்தனை தெளிவாகப் பதித்து விட்டானே? இதயம் வலியில் துவண்டது.... ஐயோ, எத்தனை அழகாயிருப்பாள் வைதேகி! கொடிய சாபம்போல் இதென்ன வியாதி, இப்படி அழகைப் பறித்துக் கண் முன்னே கருங்க வைக்கிறதே!

''வைதேகி!'' என்று நிஜமான துயரத்தில் கூவியவாறு உள்ளே பாய்ந்தாள் சாந்தா.

''அக்காவுக்கு 'மார்பின்' கொடுத்திருக்கு. சாந்தா! மயங்கித் தூங்கறாள். வா, நாம் ஹாலுக்குப் போகலாம்....'' பின்னால் சுமதியின் குரல் அழைத்தது. திரும்பினாள் சாந்தா. சட்டென்று இதயத்தில் தோன்றிய கோபம் சுமதியின் முகத்திலிருந்த சோகத்தைக் கண்டு உடனேயே குறைந்து கரைந்து போயிற்று....

மௌனமாகவே தங்கையைத் தொடர்ந்து ஹாலுக்குச் சென்றாள்.

''சாந்தா! டாக்டர் இப்போதுதான் போனார். அக்காவின் நிலைமையில் ஏதேதோ கோளாறுகளாம். பதினைந்து நாள்தான் தாங்குமாம்.'' — அதற்கு மேல் சுமதியால் சோகத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ''ஐயோ சாந்தா, நான் என்ன செய்வேன், அக்கா இல்லாமல்!'' என்று கதறி விட்டாள். ''அழாதே, சுமதி! அழாதேயம்மா!'' என்றவள் தானும் சேர்ந்து அழலானாள் சாந்தா.

பதினைந்து நாட்கள்! சாந்தாவின் மனம் தான் இந்தக் குறுகிய காலத்துக்குள் எப்படி மாறி விட்டது! தாக நீங்கி எப்படித் தெளிந்து விட்டது! வைதேகி துடிப்பதைக்

கண்டு தானும் துடித்த சுமதியையும் கவனித்தாள் சாந்தா. சுமதி வைதேகியின் செல்லத் தங்கை. உண்மைதான். ஆனால் இதற்குக் காரணம் என்ன? சுமதியிடம் ஏதோ தனித் தகுதி இல்லாமலா வைதேகி அவளை அப்படிக் கொண்டாடினாள்? அந்தத் தனித் தகுதி என்ன என்பதும் தெரிந்ததுதான். நிகரற்ற வெள்ளை மனம். உலகிலேயே அரிதான பொருள், அழகான பொருள்....இதைத் தங்கையிடம் கண்டாள் வைதேகி...போற்றினாள். இது குற்றமா?

பதினாறும் நாள். வைதேகி இப்போது எங்கே? உயிருக்கு விடுதலை. வலியில் துடிக்கும் உடலின் உபாதையிலிருந்து விடுதலை....

அதோ வக்கீல். அவர் கையில் வைதேகியின் உயில்.

உயிலைப் படிக்க வேண்டியது அவர் கடமை. படித்தார்.

''என் சொத்தான ஒரு லட்சம் ரூபாயில் ஐயாயிரத்தை என் வீட்டில் பத்து வருஷம் சமையல் செய்த அம்மாள் ஜானகிக்கு.... ஐயாயிரம் தோட்டக்காரன் முனுசாமிக்கு. நாற்பத்தையாயிரம் என் தமக்கை திருமதி சாந்தாவுக்கு. நாற்பத்தையாயிரம் என் தங்கை சௌ சுமதிக்கு.

''மற்றபடி இந்த வீடும், இதிலுள்ள பொருள்களும், இந்தத் தோட்டமும் எல்லாமே என் தமக்கை திருமதி சாந்தாவுக்கு.''

கீழே வைதேகியின் கையொப்பம். சாட்சிகளின் கையொப்பங்கள்....

எத்தனை தடவை நினைத்தாலும் சாந்தாவுக்கு ஆச்சரியம் குறையவில்லை. வைதேகி ஏன் உயிலில் இப்படி எழுதியிருந்தாள்? ''ஒருவேளை சுமதி என்ற பெயருக்குப் பதில் சாந்தா என்று தவறுதலாக எழுதியிருப்பாளோ?'' இப்படிக்கூட சாந்தாவின் எண்ணம் ஓடிற்று. ஆனால் உயில் மூன்று மாதங்களுக்கு முன்பே எழுதப்பட்டிருந்தது. தான் இனி குணமடையப் போவதில்லை என்று உணர்ந்தவுடன் வைதேகி அதை எழுதியிருக்க வேண்டும். தெளிந்த மனத்தோடுதான் எழுதியிருக்கிறாள். கையெழுத்தில் நடுக்கமோ தயக்கமோ இல்லை. ஆனால், புரியத்தான் இல்லை, வைதேகியின் மனம்.... சாந்தாவோடு வைதேகி அப்படி அதிகமாக ஒட்டிக்கொண்டதே இல்லை...சுமதியிடம் சாதாரணமாகவா அவள் அன்பு சொரிந்தாள்? வெறும் தமக்கை சொரியும் அன்பா அது? அந்த அன்பு அதிசயமாய் இருந்ததால் இந்த உயில் அதைவிட அதிசயமாய் இருக்கிறதே! ஒரு லட்சத்துக்கு மேல் மதிக்கத்தக்க வீட்டையும் தோட்டத்தையும் செல்லத் தங்கைக்குக் கொடுக்காமல் தன்னை எத்தனையோ தடவைகள் வார்த்தைகளால் குத்திக் குதறிய தமக்கைக்கு அவள் கொடுப்பானேன்?

உயிலிலோ வீடும் தோட்டமும் சாந்தாவுக்கு. ஏன்? ஏன்?

சுமதியின் மனத்திலே இந்தக் கேள்விகளும், குழப்பங்களும் தோன்றக்கூட இல்லை.

'' அக்கா ரொம்ப சரியாய் உயில் எழுதியிருக்காள், சாந்தா!'' என்றாள் சுமதி. முகத்திலிருந்த மகிழ்ச்சியிலேயே ஒரு நிறைவு....

'' ஏன் ?''

''யோசிச்சுத்தான் எழுதியிருக்காள் அக்கா. இல்லையா? இன்னும் உனக்குக் கல்யாணத்துக்கு நாலு பெண்கள்.... செலவுக்கு நீ திண்டாடினால் அவளுக்குச் சகிக்குமா? அவள் இருந்திருந்தால் உனக்கு ஒரு கஷ்டம் வரப் பொறுத்திருப்பாளா? அவள் இல்லாத போது நீ ஒருத்தர்கிட்டே போய்க் கேட்டுச் சிறுமையடையக் கூடாதுன்னு முன்யோசனையோடு உன் பேருக்கு வீட்டை எழுதி வச்சிருக்காள். அக்காவோட மனசு கருணைமயமானது, சாந்தா. நீ கஷ்டப்பட்டால் அவளுக்கு ஆத்ம சாந்தி இருக்கவே இருக்காது!''

சாந்தா மௌனமானாள். நெஞ்சில் ஓர் எண்ண ஓட்டம்..... வைதேகி மட்டும் வீட்டைச் சுமதிக்குக் கொடுத்திருந்தால் தன்னால் இப்படி மகிழ்ந்திருக்க முடியுமா? அல்லது, வைதேகி பட்ட வேதனையைக் கண்டு மனத்து மாசு நீங்கப் பெற்றவள் மீண்டும் சுமதியையும் அவளைப் பணக்காரியாக்கிய வைதேகியையும் வெறுக்கத் தொடங்கியிருப்பாளா?

சொல்வதற்கில்லை. அப்படி ஒரு பரீட்சை ஏற்பட்டிருந்தால் அதில் அவள் தேறியிருப்பாள் என்று அவளாலேயே அடித்துச் சொல்ல முடியவில்லை. தன் மேலேயே சட்டென்று வெறுப்புத் தோன்றிற்று. ''இப்படி இரண்டு தங்கைகளைப் பெற நிஜமாக எனக்கு அருகதை இல்லை!'' என்று இதயம் கிசுகிசுத்தது.

சுமதி தன் வீட்டுக்குப் போய் விட்டாள். அவளும் கிளம்ப வேண்டியதுதான். மனத்தில் கசப்போடும் ஆற்றாமையோடும், வைதேகியை அவள் வழியனுப்ப வந்தாள். இதோ, நெஞ்சில் ஆழப் பாய்ந்துவிட்ட ஏதோ ஒரு துயர ரேகையோடு அவள் கிளம்ப வேண்டியதுதான். எதிர்பார்த்ததை விடப் பெரிய செல்வம் கிடைத்தும் ஏனோ தனக்கு அதை அடையும் தகுதி இல்லையே என்னும் உணர்வுதான் எத்தனை கொடிதாக இருக்கிறது!

வீட்டின் ஒவ்வோர் அறையாக நுழைந்து நுழைந்து வந்தாள் சாந்தா.

பூஜை அறை....

ஒரே ஒரு படம். ஸ்ரீராமனின் பட்டாபிஷேகக் காட்சி. அதன்மேல் கடைசியாக எப்போது மல்லிகை மாலையை அணிவித்தாளோ வைதேகி? அந்த மாலை வாடியிருந்தது.

படத்துக்கெதிரே குத்துவிளக்கு.

சட்டென்று ஏதோ தோன்றக் குத்துவிளக்கில் எண்ணெய் வார்த்து ஏற்றினாள் சாந்தா. அந்த ஒளியில் ராமபிரானின் முகத்துப் புன்னகை பிரகாசித்தது.

கண்ணீர் பெருகியோடத் தரையில் விழுந்து வணங்கி எழுந்தாள் சாந்தா. சட்டென்று நெஞ்சில் ஏதோ நிம்மதி. பாரம் இறங்கி விட்டது போன்ற ஏதோ உணர்வு....

குத்துவிளக்கு ஒரே சீராய் எரிந்துகொண்டிருந்தது.

அதென்ன? குத்துவிளக்கின் அடியில் அதென்ன? ஏதோ காகிதம். அதை எடுத்தாள் சாந்தா. ஒட்டிய வெள்ளைக் கவர்.


எங்கள் பலம் எஃகும்,
மக்களுமே. மனிதன் வெறும்
உணவினால் மட்டுமே உயிர்
வாழ்வதில்லை. ஆதலால்
நாங்கள் ஜாம்ஷெட்பூரில் இசை,
நடனம் மற்றும் மனிதனுடைய
உணர்ச்சிகளை வெளிப்படுத்தும்
இதர கலைகளையும் பேணி
வளர்த்து வருகிறோம்.
டாடா ஸ்டீல்

அதன்மேல் ''சாந்தாவுக்கு'' என்ற ஒரே வார்த்தை.... கையெழுத்து வைதேகியினுடையது.

விரல்களில் ஏனோ திடீரென்று ஒரு நடுக்கம். கவரைப் பிரித்தாள். உள்ளே ஒரு கடிதம்.... குத்துவிளக்கின் வெளிச்சத்தில் அதைப் படிக்கலானாள்:

''அன்புள்ள சாந்தா,

நான் என்றுமே உனக்குப் பெரிதாய்க் கடிதமெழுதியதில்லை. இப்போது எழுதுகிறேன். ஏனென்றால், இதன் மூலம் நான் என் மனத்தைத் திறந்து காட்டப் போகிறேன்.

நேற்றுத்தான் வைத்தியர் என்னிடம் கூறினார், எனக்கு வயிற்றில் புற்றுநோய் வளர்ந்து முற்றி விட்டது என்று... அதுவும் நான் வற்புறுத்திக் கேட்டதனால் சொன்னார். அதுவரை எனக்கு ஆறுதல்தான்.... என் வாழ்க்கையின் எஞ்சிய நாட்களிலாவது எனக்குப் பிராயச்சித்தம் செய்ய வாய்ப்பளித்தாரே, அதற்காக அவருக்கு நன்றி கூறுகிறேன்.

இன்று என் உயிலை எழுதி விட்டேன். இந்த வீடும் தோட்டமும் உனக்கு. மற்றபடி என் சொத்தில் உனக்கும் சுமதிக்கும் சம பாகம்.

ஏன் என்றுதானே கேட்கிறாய்?

சாந்தா! இப்போது உனக்குள்ள பண நெருக்கடியையும் வளர்ந்து திருமணப் பிராயத்தை எட்டிப் பிடித்துவிட்ட உன் பெண்களையும், என்மேல் உனக்குள்ள கோபத்தையும் மறந்துவிட்டு, நீ, நான், சுமதி மூவரும் சகோதரிகளாய் ஒரே வீட்டில் வளர்ந்த நாட்களை நினைத்துப் பார்க்கும்படி வேண்டுகிறேன். அப்போது நம் மூவரிடையே அன்பைத் தவிர வேறெதுவுமே இருந்ததில்லை. அன்பைத் தவிர வேறு உணர்ச்சி தோன்றும் காலம் ஒன்று வரும் என்று நான் கனவுகூடக் கண்டதில்லை அப்போது.

உனக்குத் திருமணம் நடந்தேறியது... சித்திரங்களாய்க் குழந்தைகள் பிறந்தார்கள். அந்த நாட்களில் உன் குழந்தைகளை வாரி அணைத்துக் கொஞ்சி நான் மகிழ்ந்த மகிழ்ச்சி நினைவிருக்கிறதா உனக்கு? அதன் பிறகு எனக்குத் திருமணம் நடந்தேறியது. செல்வம் கொழிக்கும் புகுந்த வீடு. அதில் நான் அரசியாய் வாழ்ந்தேன். அப்போதும் என் மனத்தில் என்ன ஆசை, தெரியுமா? நானும் உன்னைப்போல் தாயாக வேண்டும்; அழகழகாய் மக்களைப் பெற வேண்டும் என்றுதான் நான் விரும்பினேன். அந்த விருப்பத்தில் அப்போது களங்கமே இல்லை. தெய்வம் ஏன் அதை நிறைவேற்றி வைக்கவில்லை என்பது என்றுமே விடை கிடைக்காத கேள்வியாகவே தான் இருந்துவிட்டது, என்வரை....

அதன் பிறகு பேரிடி. விதவைக் கோலம்.. நான் தாயாகவே மாட்டேன் என்ற உணர்வு சித்திரவதையாக இருந்தது சாந்தா.

அதன் பிறகு பேறுக்காக நீ மூன்று தடவை வந்தாய். அழகழகாய்க் குழந்தைகள். என் மனம் பொறாமையால் எரிந்த விதத்தை எப்படி வர்ணிப்பேன்? உன்னைக் கண்ட போதே கண் கூசிற்று. வலித்தது. உன் குழந்தைகளைக் கண்டபோது என் உடம்பெல்லாம் எரிந்தது, தீப்பற்றிக் கொண்டது போல்.

சுமதியின் விஷயத்தில் நான் அப்படி எண்ணவில்லை; எரியவில்லை. சுமதி பேறுக்காக வந்தபோது அம்மா இல்லை. ஒரு தாயின் நிலையில் நானே இருந்து, அவளைக் கவனித்தேன். என் நெஞ்சில் அன்பைத் தவிர வேறு எந்த உணர்ச்சியும் தோன்றக் கூட இல்லை. சுமதி சின்னவள். அவள் நெடுநாள் வாழ வேண்டும். எல்லா சௌபாக்கியங்களையும் அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணத்தைத் தவிர வேறெதையுமே என் மனம் அறியவில்லை... அவளைப் பொறுத்த வரை...

உடனே பூஜை அறைக்குத்தான் வந்தேன். கதறினேன். 'எனக்கேன் இந்தத் தண்டனை? நான் பட்டதெல்லாம் போதாதா?' என்று அழுதேன். ராமபிரான் முறுவலித்துக் கொண்டிருந்தான். அந்த முறுவலில்தான் என்ன அழகு! சட்டென்று என் மனத்தில் ஏதோ சாந்தி. குத்து விளக்கை ஏற்றினேன். ''என் பொறாமைக்குத் தண்டனையா இது உன் சித்தம் இதுவானால் சரி'' என்று வணங்கி எழுந்தேன்.

என் வியாதி தெய்வ சித்தமாய் இருக்கலாம். குற்றத்துக்குத் தண்டனை என்று நான் சொல்வது தெய்வ சித்தத்தை அறிந்து கொண்ட மாதிரியாய்ப் போய்விடக் கூடும். இது அபசாரமாகவும் இருக்கலாம். இந்த மாதிரி எண்ண ஓட்டத்துக்கு நிஜத்தில் அர்த்தமே இல்லை. நான் உன்னை நினைத்து எத்தனையோ தடவை பொறாமைப் பட்டேன். அது உண்மை. அது குற்றம். அதற்கு நான் ஏதாவதொரு விதத்தில் என்னால் முடிந்த அளவுக்குப் பிராயச்சித்தம் செய்வதுதான் முறை.

வெகு நேரம் சிந்தித்த பின் என் பிரச்னைக்கு விடை கண்டேன். இந்த வீட்டையே உனதாக்கி விட வேண்டும். உன்னையும் உன் மக்களையும் நினைத்துச் சபித்தேனே, இதே வீட்டில் நீயும் உன் மக்களும் இன்பமாய் வாழ வேண்டும். இந்த வீடு அவர்கள் இன்ப வாழ்வுக்கு உதவ வேண்டும்.

அவ்வளவுதான் சாந்தா.... என் மனத்தைக் கொட்டி விட்டேன். என்னை மன்னித்து விடு. மன்னித்ததற்கு அடையாளமாய் இந்த வீட்டை உனதாக ஏற்றுக் கொள்.

கடைசியாக ஒரு வேண்டுகோள். சுமதிக்கு உன்னைத் தவிர இனி வேறு யாருமில்லை. அவள் அன்பின் உருவம். தாய்மையின் வடிவம். தாயைப் போல் நீதான் அவளை இனிப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

வைதேகி.''

சாந்தா கடிதத்தைப் படித்து முடித்தாள். அவள் கண்களிலிருந்து கண்ணீர் அருவியாகக் கொட்டிக் கொண்டிருந்தது.

பூஜை அறையில் குத்து விளக்கு அழகாய் எரிந்து கொண்டிருந்தது.

# வட்டமேஜை

“காந்திஜிக்கு நோபல் பரிசு கிடைக்காதது ஏன்?” என்ற கட்டுரையில் (கல்கி 23–11–69) பரிசு கிடைக்காததனால் காந்திஜிக்கு எவ்வித நஷ்டமும் இல்லை என்று கட்டுரை ஆசிரியர் அழகாக முடித்திருந்தார். பரிசு கிடைப்பதைப் பற்றிக் காந்தியடிகளின் கருத்து என்ன என்ற தகவலையும் வாசகர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன் :

‘மகாத்மா காந்திக்கு நோபல் சமாதானப் பரிசு வழங்கப்பட வேண்டும்’ என்று சிபாரிசு செய்யும் பிரேரணை ஒன்றை தில்லி மத்திய சட்ட சபையில் ஏகமனதாக நிறைவேற்றுவதற்கான முயற்சிகள் திரை மறைவில் நடைபெற்றன. எப்போது? 1924ஆம் ஆண்டிலே! காங்கிரஸின் ஒரு பிரிவினரான சுயராஜ்ஜியக் கட்சியினர் சட்டசபையில் பெருவாரியினர். மகமது யாகூப் என்ற சட்டசபை உறுப்பினர் அப்பிரேரணையின் நகலை காந்திஜிக்கு அனுப்பி வைத்து, அவரது முன் அனுமதி கோரினார். காந்திஜியோ பிடிவாதமாக மறுத்து விட்டார். மகமது யாகூபிற்கு பிப்ரவரி 12, 1924ல் எழுதிய பதிலில் காந்திஜி பின்வருமாறு கூறினார் :

“இப்பிரேரணையை எந்த உருவிலும் சபையில் கொண்டு வர வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். உலக சமாதானத்துக்கான எனது முயற்சிகளே எனக்குச் சிறந்த பரிசாகும். அஹிம்சைத் தத்துவத்துக்கு ஐரோப்பா அளிக்கும் எவ்வித அங்கீகாரத்தையும் நான் வரவேற்கிறேன். ஆயினும் நோபல் பரிசைத் தாமாக முன்வந்து கொடுக்காமல் ‘வெளியாரின் சிபாரிசுகளின் பேரில்தான் வழங்குவார்கள் என்றால் அவ்வித அங்கீகாரத்துக்கு மதிப்பு இல்லாமற் போய் விடும்....

**(Collected works of Mahatma Gandhi Vol. 23 Page 204)**

புதுதில்லி
25–11–69 லா. சு. ரங்கராஜன்

★ அண்மையில் தபால் தந்தி வாரம் தபால் தந்தி இலாகாவினரால் கொண்டாடப்பட்டது. அதுபோது தபால் தலைகள் மீது ஓர் அச்சு குத்தப்பட்டிருந்தது. அது **P. & T. for Socialistic Society** என்றிருந்தது.

நாடு இன்று வேண்டுமானால் சோஷலிஸக் கொள்கை கொண்டவர்கள் கையில் இருக்கலாம். தங்கள் கையில் ஆட்சி இருக்கிறதென்பதற்காக அரசாங்க இயந்திரத்தைத் தங்கள் இஷ்டம் போல் சோஷலிஸக் கருத்

★ இக்குறிப்பிட்ட கடிதம் ரூ. 15 பரிசு பெறுகிறது.

தைப் பரப்பப் பயன்படுத்தக் கூடாது. நாட்டின் உயிர் போன்ற இலாக்காக்களைக் கட்சிப் பிரசாரத்துக்கோ கொள்கை விளக்கங்களுக்கோ ஆட்சியில் உள்ளோர் பயன்படுத்துவது மிகத் தவறு.

பெங்களூர்
27–11–69 பி. ஜி. கணேசன்

மகாத்மா காந்தி காங்கிரஸார் ஆட்சிப் பொறுப்புக்கு வரக் கூடாது. நிர்மாணத் திட்டத்தில் ஈடுபட வேண்டும்; காங்கிரஸைக் கலைத்துவிட வேண்டும் என்று தீர்க்கதரிசனத்துடன் சொன்ன வாக்கை காந்தி நூற்றாண்டு விழாவில் காங்கிரஸ்காரர்கள் நிறைவேற்றி விட்டார்கள். இரண்டாகப் பிரிந்து ஒருவரை யொருவர் ‘டிஸ்மிஸ்’ செய்து கொண்டதன் மூலம் காங்கிரஸைக் கலைத்து காந்தி மகான் வாக்கை மெய்ப்பித்து விட்டார்கள். இரண்டாகப் பிரிந்து ‘டிஸ்மிஸ்’ ஆனவர்கள் எவரும் தான்தான் காங்கிரஸ் என்று சொல்லிக் கொள்ளும் உரிமையை இழந்துவிட்ட நிலைமை ஏற்பட்டுவிட்டது. காங்கிரஸாரின் இப்போதைய செய்கை யாதவ குலத்தவர் ஒரு பெரியவரின் வாக்குப்படி ஒருவரையொருவர் அடித்துக்கொண்டு முடிவை அடைந்ததை ஞாபகப்படுத்துகிறது.

பழநி
24–11–69 எஸ். முத்துசுப்பிரமணியம்

பிரதமர் இந்திரா துதிபாடும் நம் நாட்டு ரேடியோவை ஏன் ஆல் **இந்திரா** ரேடியோ என்று அழைக்கக் கூடாது?

சென்னை–5
23–11–69 கே. ஜயலக்ஷ்மி

அக்டோபர் 26, 1969 ‘ஆகாஷ்வாணி’ (ஆங்கிலம்) இதழில் ‘ஆல் இந்தியா ரேடியோ’ என்பதற்குப் பதிலாக ‘ஆல் இந்திரா ரேடியோ’ என்றே (பிசகாகத்தான்) அச்சிடப்பட்டு இருந்தது! டெக்கான் ஹெரால்ட் பத்திரிகையில் இதைப் புகைப்படம் எடுத்துப் போட்டிருக்கிறார்கள்.

சென்னை
27–11–69 ‘முத்து’

சமீபத்தில் நான் திரைப்படம் பார்க்கச் சென்றிருந்தேன். படம் முடிந்த பின் ‘தேசிய கீதம் பாடும்போது அது தெளிவாகவே இல்லை. மேலும் சில வரிகளும் கேட்கவே யில்லை. தேசிய கீதத்தை அவமதிப்பது தேசத்தை அவமதிப்பது என்பதை உணர வேண்டும் ட்டர் உரிமையாளர்கள்.

நாகை,
27–10–69 எஸ். மாலதி

**Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31**
**Managing Editor: T. Sadasivam**

REGISTERED No. M. 4392

Registered as a Newspaper in Ceylon